32

பண்பாட்டு நோக்கில்

# கம்பன் காவியம்

டாக்டர் ந. சுப்புரெட்டியார்

வானதி பதிப்பகம்

# பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்

(அமரர் ஏவி.எம். அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு - 1996)

'அருங்கலைக்கோன்', 'ஸ்ரீசடகோபன் பொன்னடி', 'தமிழ்ச்செம்மல்'

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.,

இயக்குநர், தமிழ்ப் பண்பாட்டு நிறுவனம்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

வானதி பதிப்பகம்

13. தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

*முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1996*

*© டாக்டர் ந. சுப்புரெட்டியார்*
*(81 - அகவை நினைவாக)*

இந்நூலின் முதற்பதிப்பு கம்பன் ஏவி.எம். அறக்கட்டளை உதவியுடன் கம்பன் கழகத்தார் மூலம் வெளியிடப்பெறுகின்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு

**விலை ரூ. 35.00**

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17
Printed at : Nathan & Company, Madras – 42

# பதிப்புரை

*சென்னைக் கம்பன் கழகம் 1975இல் நிறுவப் பெற்றது. திரு. ஏவி. மெய்யப்பன் அவர்கள் 12-8-1979 அன்று இயற்கை அடைந்தமை வரையில், கழகத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து வந்தார்கள்.*

*சினிமாத்துறையில் பெரும் பெயர் பெற்றிருந்த அவர்கள், கம்பன் கழகத்தோடு தொடர்பு கொண்டதி லிருந்து கழகத்தின் வளர்ச்சியிலும், கம்பனுடைய கவி நயத்தைப் பருகுவதிலும், முழுமையான ஈடுபாடு கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் தாம் தலைவராக இருந்த ஏவி.எம். அறக்கட்டளையினுடைய ஏவி.எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் கம்பன் விழா நிரந்தரமாக நடைபெறுவதற்கு வழி வகுத்ததோடு, கழகத்திற்கு அவ்வப்போது தேவையான உதவிகள் அனைத்தையும் நிறைந்த உள்ளத்துடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் செய்து வந்தார்கள்.*

*அன்னாருடைய மறைவுக்குப்பின், அமரர் ஏவி.எம். அவர்களின் குடும்பத்தினர், அதே ஈடுபாட்டையும் அக்கறையையும் காட்டி வருகிறார்கள். அமரர் ஏவி.எம். அவர்களுடைய நினைவில் ஆண்டுதோறும் கம்பனைப் பற்றிச் சென்னைக் கம்பன் கழகத்தின் ஆதரவில், ஒரு நினைவுச் சொற்பொழிவு நடக்க வேண்டுமென்று விரும்பி அதற்காக ஆவன செய்வதற்கு முன் வந்தார்கள்.*

*அந்தத் திட்டத்தின்படி அமரர் ஏவி.எம். அவர்களின் இவ்வாண்டின் (பதின்மூன்றாம் ஆண்டைய) நினைவுச் சொற்பொழிவு 1996ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 29ஆம்*

கரந்து ஒளிரும் உயிரையும் (ஆன்மாவையும்), அந்த உயிருக்கு இடமான உள்ளத்தையும் பதப்படுத்துகின்றது.

எனக்கும் கம்பனுக்கும் உள்ள உறவு ஐம்பது ஆண்டுகட்கும் மேற்பட்டது. அந்த உறவுக்குக் காரணமாக இருந்தவர்கள் பலர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர்கள் புலவர் உலக ஊழியனார், புலவர் ஜகவீர பாண்டியனார், தேசபக்தர் சா. கணேசன், தமிழ்க்கடல் ராய சொக்கலிங்கம், சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா, ரசஞ் ஞானி டி.கே.சி., கலெக்டர் தொ.மு. பாஸ்கரத் தொண்டமான், ஜஸ்டிஸ் எஸ். மகராஜன் ஆகியோர். இவர்கள் எல்லோரையும் நினைந்து போற்றுகின்றேன். இந்த உறவு காரணமாக பல்லாண்டுகளாக பல இதழ்கட்குக் கட்டுரைகள் வழங்கியுள்ளேன். சில என்னுடைய பல தொகுப்பு நூல்களில் சேர்ந்துள்ளன. பல 'கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்', 'கம்பனில் மக்கள் குரல்' என்று தனித் தொகுப்பு நூல்களாக வெளிவந்துள்ளன. இவையெல்லாம் என் ஆன்ம நிறைவுக்காக ஆற்றிய இலக்கியப் பணி; நான் இதனைத் தெய்வப் பணியாகக் கொள்வேன். 'வண்டமிழ் நூற்க நோற்றேன்', 'தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்னேன்' 'அவை அடியார்க்கு இன்பமாரியே' என்ற நம்மாழ்வார் கூறி மகிழ்வதைப் போல் என் பணியை நினைந்து நானும் அந்த அமுதவாக்குகளை நினைந்து மகிழ்கின்றேன்.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற முதுமொழிக்கு ஏற்ப, கம்பனுக்கு யான் ஆற்றிய 'வினையால்' (தொண்டால்) 'சென்னைக் கம்பன் கழகம்' 'ஏவி.எம். அறக்கட்டளைச் சொற்பொழிவு (1996)' நிகழ்த்துமாறு **'கம்பன் அடி சூடி'** மூலம் 8.3.96 நாளிட்ட அழைப்புக் கடிதத்தை 14.3.96 அன்று பெற்றேன். அவருக்கும் கழகத்தலைவர் நீதியரசர் **மு.மு. இஸ்மாயில்** அவர்கட்கும் என் இதயம் தோய்ந்த நன்றி.

அரசர்களுக்குப் பிறகு திருக்கோயில் திருப்பணி, பக்திச் செல்வத்தைப் பரப்புதல், தமிழ் வளர்ச்சி, புலவர்களைப் பாராட்டுதல் இவை போன்ற கைங்கரியங்களைச் செய்து வருபவர்கள் நகரத்தார் சமூகத்தினர் என்பதை நாடு நன்கறியும். அமரர் ஏவி.எம். அவர்களின் நினைவுச் சொற்பொழிவை ஆண்டு தோறும் உற்சாகம் குன்றாது நடத்திவரும் "இவன் தந்தை எந்நோற்றான் கொல்?" என்ற வள்ளுவர் பெருமான் சொல்லுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் திரு. ஏவி.எம். சரவணன் அவர்கட்கு என் இதயம் தோய்ந்த நன்றி என்றும் உரியது.

இந்த இலக்கியப் பணியில் ஈடுபடுத்திய 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலை'ச் சிந்தையில் நிறுத்தி அமைக்கின்றேன்.

தொண்டே செய்துஎன்றும்
தொழுது வழியொழுகப்
பண்டே பரமன்
பணித்த பணிவகையே*

— நம்மாழ்வார்

'வேங்கடம்'
ஏடி–13 (மனை எண்.335)
அண்ணாநகர்,
சென்னை – 600 040
தொ.பே. 6211583
10.7.1996

ந. சுப்புரெட்டியார்

* திருவாய். 10.4:6

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| | நூல் முகம் | v |
| | உள்ளுறை | viii |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மக்கட் பாசம் | 17 |
| 3. | சகோதர வாஞ்சை | 35 |
| 4. | மக்கட் பண்புகள் | 64 |
| 5. | நம்பிக்கைகள் | 98 |
| 6. | பரம்பொருள் ஏற்றம் | 159 |
| 7. | முடிப்புரை | 178 |
| | பின்னிணைப்பு | 181 |

# 1

# முன்னுரை

**கம்பன்** வைணவனா? என்று ஆராய்வார் சிலர். திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்க்கு அமுதம் ஈந்தவன் திருமால். அந்தத் திருமாலிடம் இணையற்ற பக்தி கொண்ட கம்ப நாடன் அவன் அவதாரமாகிய இராமனின் திருக்கதையை விருத்தம் எனும் ஒண்பாவால் அமைத்து மானிடர்களாகிய நமக்குத் தமிழ் அமிழ்தம் ஈந்து மிகு புகழ் பெற்ற வரலாறே போதும் அவன் வைணவன் என்பதற்கு என்ற சான்றை முன்வைத்து தம் கொள்கையை நிறுவுவர். அன்றியும் இவர்கள் விராதன், இந்திரன், கவந்தன் முதலியோரின் வாக்காக வரும் பாடல்களில் ஆழ்வார் பாசுரங்ககளின் தாக்கத்தை எடுத்துக்காட்டி அவற்றைத் தம் கொள்கைக்கு அரணாக அமைத்துக் கொள்வர், எடுத்துக் காட்டுகளாக சிலவற்றைக் காட்டுவேன்.

**மூன்று கவடாய்**
**முளைத்தெழுந்த மூலமோ ?[1]**

என்ற கவந்தன் வாக்கிற்கு,

**மூவராய மூர்த்தி யைமுதல்**
**மூவர்க் கும்முதல் வன்றன்னை[2]**

என்ற திருவாய்மொழி அடியும்,

1. ஆரணிய கவந்தம் – 42
2. திருவாய். 3.6:2

ஒப்பிறையும் பெறலரிய
    ஒருவா! முன் உவந்துறையும்
அப்புறையுள் துறந்து அடியேன்
    அருந்தவந்தால் அணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தேன்
    இனிப்பிறவேன் இருவினையும்
துப்புறழுந் நீர்த்தசுடர்த்
    திருவடியால் துடைத்தாய்நீ[3]

*என்ற விராதன் வாக்காக வரும் பாடலுக்கு.*

பணிக்கடலிற் பள்ளிக்கோளைப்
    பழகவிட்டு ஓடிவந்துஎன்
மனக்கடலில் வாழவல்ல
    மாய மணாள நம்பி[4]

பறவைஏறு பரமபுருடா!
    நீஎன்னைக் கைக்கொண்டபின்
பிறவிஎன்னும் கடலும்வற்றிப்
    பெரும்பதம் ஆகின்றதால்[5]

*என்ற பெரியாழ்வாரின் திருப்பாசுரங்களும் அடியொட்டி அமைந்திருப்பதாகக் கூறுவர். இவர்கள் இக்காரணங் களால் கம்பனுக்குக்* **கம்ப நாட்டாழ்வார்** *என்ற* **திருநாமம்** *சூட்டி மகிழ்வர்.* **இவற்றை நோக்கும் நமக்கும்** *மகிழ்ச்சி ஏற்படுகின்றது.*

*சைவர்கட்கு இத்தகைய சான்றுகள் இல்லை. காஞ்சி ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்* **'ஏகம்பன்'** *என்ற பெருமானின் திருப்பெயரைத் தாங்கிக் கொண்டிருப்பவன் கம்பன் என்றும்,* **'ஏகம்பன்'** *என்ற திருப்பெயரே*

3. ஆரணிய விராதன் வதை 61
4. பெரியாழ் – திரு. 5.4:9
5. மேற்படி 5.4.:2

*நாளடைவில் 'கம்பன்' என்றாயிற்று என்றும் விளக்கம் கூறி சமாதானப்படுத்துவர். கதிரவன் தோன்றுதலையும். அவனது கதிர்கள் விரிதலையும் வருணிக்கும்* இரண்டு பாடல்கள் *சைவர்கட்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும்.*

சிதையுமனத் திடருடைய செங்கமலம்
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளின் எழுகின்ற புகர்முகயா
னையின் உரிவைப் போர்வை போர்த்த
உதயகிரி எனும்கடவுள் நுதல்கிழித்த
விழியேபோல் உதயம் செய்தான்.[6]

*என்பது கதிரவன் தோற்றத்தின் வருணனை, "கொழுநனாகிய தன்னைப் பிரியப் பெற்றதனால் தன் நெஞ்சத்தில் சோகமுடைய செந்தாமரை மலர்களாகிய தன் மனைவிமாரது முகங்கள் தான் வந்து கூடப் பெற்றதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால் மலர்ச்சியைப் பெறும்படி, யானைத் தோலைப் போர்வையாகத் தரித்துள்ள உதய பர்வதமாகிய உருத்திர மூர்த்தியின் நெற்றியினின்று தோன்றிய நெருப்புக்கண்போல் உதயம் செய்தான்" என்ற பாடலின் கருத்தை அநுபவித்து மகிழ்கின்றனர்.*

எண்ணரிய மறையினொடும் கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம்குவிப்ப வேலை என்னும்
மண்ணுமணி முழவுஅதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரித்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம்.[7]

6. பாலகா. மிதிலைக் – 150.
7. மேற்படி – 153

என்பது கதிரவனின் கதிர்கள் விரிவதை விளக்குவது. அளவிடுதற்கு அரிய வேதங்களுடன் கின்னரர்கள் இசைபாடுகின்றதாக உலகிலுள்ள உயர்ந்தோர் யாவரும் துதிக்கின்றனர். தேவர்கள், முனிவர்கள், அந்தணர்கள் கைகூப்பி வணங்குகின்றனர். கடல் என்கின்ற அழகிய மத்தளம் ஒலிக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஆகாயமாகின்ற நடன அரங்கில் நடனம் செய்கின்ற ஒளியையுடைய கதிரவனாகிய நெருப்புக் கண்களை நெற்றியிலுடைய உருத்திர தேவனுடைய பொன்னிறமான சடைகள் பரந்து விளங்கினாற்போல கதிர்கள் யாவும் எங்கரும் பரவின என்று கூறி மகிழ்கின்றனர்.

சமரசவாதிகள் தங்கள் கருத்திற்கு இசைய பாடல்களைத் தேடுகின்றார்கள். கம்பனின் கவிதைச் சுரங்கத்தில் இரண்டு பாடல்கள் கிடைக்கின்றன. மூலபலத்துடன் வந்த இராவணனோடு நிகழ்த்திய இறுதிப் போர் நிறைவு எய்திய நிலையில் தேவர்கள் துதிக்க நின்ற இராமனது தோற்றத்தைக் காட்டுகின்றான் கம்பநாடன். ஒருபாடல்:

> தீமொய்த்த அனைய செங்கண்
> அரக்கரை முழுதும் சிந்திப்
> பூமொய்த்த கரத்த ராகி
> விண்ணவர் போற்ற நின்றான்
> பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப்
> பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
> ஈமத்துள் தமியன் நின்ற
> கறைமிடற்று இறைவன் ஒத்தான்.[8]

உலகம் அழிந்த காலத்தில் பேய்க் கூட்டங்கள் மொய்த்து நிற்கவும், நரிகள் நெருங்கி ஓடவும் பிணங்கள் விளங்கித்

8. யுத்த. மூலபலம். 231

*தோன்றுவதான மயானத்துள்ளே தனிப்பட்டவனாய் நின்ற நஞ்சுண்ட கண்டத்தவனான சிவபெருமானை ஒத்தான் இராமன் என்பது ஒரு காட்சி. இது சைவர்கட்கு உவகை ஊட்டுவது.*

*மற்றொரு பாடல்:*

**அண்டமாக் களமும் வீந்த**
**அரக்கரே உயிரும் ஆகக்**
**கொண்டதோர் உருவந் தன்னால்**
**இறுதிநாள் வந்து கூட**
**மண்டுநான் மறித்துக் காட்ட**
**மன்னுயிர் அனைத்தும் வாரி**
**உண்டவன் தானே யான**
**தன்னொரு மூர்த்தி ஒத்தான்[9].**

*அரக்கர்களையெல்லாம் அழியச் செய்து போர்க்களத்தில் தனித்து நின்ற இராமன் யுகம் அழிந்த காலத்தில் எல்லா உலகங்களையும் வாயுட்கொண்டு நிற்கும் திருமாலை யொத்தான் என்பது ஒரு காட்சி. இது வைணவர்கட்கு உலப்பிலா ஆனந்தம் விளைவிப்பது.*

*சமரசவாதிககள் இந்த இரண்டையும் எடுத்துக்காட்டி சமரச நோக்கமுடையவன் கம்பன் என்று கூறி மகிழ்கின்றனர். கம்பன் சிவபெருமானையும் திருமாலையும் ஒருசேரப் போற்றுகின்றான் என்பது இவர்களின் வாதம். இவர்கள் ஒன்றை மறந்து விடுகின்றனர். மூன்று நிகழ்ச்சிகளால் இராமனது பரத்துவம் அறுதியிடப் பெறுகின்றது.*

*(1) சீதையைத் தேடும்பொருட்டு தென்திசை செல்லும் வானரர்களை நோக்கி அப்பெருமாட்டியைத் தேட*

9. மேற்படி. மேற்படி – 232.

வேண்டிய இடங்களை நிரல்படக் கூறி வருங்கால் அருந்ததி மலையைக் குறிப்பிடுகின்றான் சுக்கிரீவன்.

> அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்
> என்றுரைக்கும் அறிவி லார்க்குப்
> பரகதிசென்(று) அடைவரிய பரிசேபோல்
> புகலரிய பண்பிற் றாமால்
> சுரநதியின் அயலதுவான் தோய்குடுமிச்
> சுடர்த்தொகைய தொழுவோர்க் கெல்லாம்
> வரனதிகத் தருந்தகைய தருந்ததிமா
> நெடுமலையை வணங்கி அப்பால்[10]

“திருமாலே பரம் பொருளாக இருக்கவும், அந்த உண்மையை உணரமாட்டாமல் ‘சிவபெருமான் சிறந்தவனா? அல்லது திருமால்தான் சிறந்தவனா?’ என்று ஒருவகையாலும் கலங்கிக் கூறுகின்ற மூடர்கட்கு நற்கதி சேர அரிதாக இருக்கும்; அதுபோல இந்த அருந்ததி மலையும் எவர்க்கும் சென்று சேர அரிதாக இருக்கும்” என்கின்றான் சுக்கிரீவன். சுக்கிரீவன் வாயில் வைத்துப் பேசுபவன் கம்பநாடன். ‘உலகலந்த’ என்ற அடைமொழியைத் திருமாலுக்குச் சேர்த்துக் கூறியதனால், நான்முகனாரது உலகம் உட்பட எல்லா உலகங்களையும் தனது திருவடிகட்குக் கீழ்படுத்திக் கொண்ட சிறப்பையும், சிவபெருமான் தனது சிரமேல் கொள்ளுமாறு திருவடியினின்று கங்கையைப் பயந்த மேன்மையையும் வெளிப்படுத்துதல் மூலமாக, அத்திருமாலே பரதத்துவ மென்று வெளியிட்டார் என்பர். இவ்வாறு மேன்மையைப் புலப்படுத்தும் அடைமொழி ஒன்றும் சிவபெருமானுக்குக் கொடுத்துக் கூறாதது சிந்திக்கத்தக்கது. ‘அரன் அதிகன் உறவளர்ந்த அரிஅதிகன் என்று உணரா அறிவிலார்க்குப்,

10. கிட்கிந்தை – நாடவிட்ட – 24

பரகதி சென்று அடைவரிய பரிசேபோல்' என்ற பாடம் இனிது பொருள்படும்.

இனி, முதலடிக்கு, "திரிமூர்த்திகளில் சேர்ந்த சிவபெருமானையும் திருமாலையும் சமமாகக் கருதாமல், 'சிவபெருமான்தான் சிறந்தவன், அல்லது திருமால்தான் சிறந்தவன்' என்று பட்சபாதமாகக் கூறுகின்ற தத்துவ ஞானமில்லாத மூடர்க்கு" என்று பொருள் உரைப்பாருமுளர். 'அரியும் சிவனும் ஒன்று; அன்று[11] என்பவர் வாயிலே மண்ணு' என்று உலகில் சாமானியமாக வழங்குகின்ற பழமொழியின் கருத்துக் கொண்டது இந்த இரண்டாவது பொருள்.

கம்பன் ஏதோ பத்தரைமாற்றுத் தங்கம்போல தனது கவிதைககளை நமக்கு வைத்துப் போனான். 'செம்பு'போன்ற உலோகத்தைச் சேர்த்து பணிப்பொன் ஆக்குவதுபோல், சமயச்சார்புடைய புலவர்கள் பாடபேதத்தைச் சேர்த்து, தமக்கு வேண்டியவாறு பொருளுரைத்துக் கொள்வர். அவர்கள் வாழ்க.

(2) மகரக் கண்ணன் மாய்ந்த பின்னர் இந்திரசித்து பெரும்படையுடன் தேரேறிப் போருக்குப் புறப்படு கின்றான். ஒரு கட்டத்தில் இந்திரசித்து மாயையால் வானத்தில் மறைந்து மலரவன் கணை தொடுக்கச் செவ்வி நோக்கியுள்ளான். மகோதரன் இந்திரன் உருக்கொண்டு ஐராவத உருவுள்ள யானைமீது ஏறி வானவர், இருடியர் முதலியவர்கள் உருக்கொண்ட வீரருடன் இலக்குவனை நோக்கி எதிர்த்து வருகின்றான். இலக்குவன் அதிசயித்து 'இஃது ஏன்?' என்று மாருதியை வினவுகின்றான். இச்சமயத்தில் இந்திரசித்து மலரவன் கணையை விடுக்க, இலக்குவன் அறிவொடுங்கிச் சாய்கின்றான். வானரவீரர் கட்கும் இதே கதிதான், தம்பி உயிரொடுங்கிக் கிடந்த

11. 'அறியாதவர் வாயிலே' என்றும் வழங்குவதுண்டு.

நிலையைக் கண்டு இராமன் வெம்பி மனம் முறிந்து பூமியில் மூர்ச்சித்து உயிரொடுங்கிக் கிடக்கின்றான். சிறிது நேரத்தில் இராமனுக்கு உணர்வு வருகின்றது. தம்பி மாண்டு விட்டதாகக் கருதி பல படியாகக் கருதி பலபடியாகப் புலம்பி மீண்டும் மூர்ச்சையாகி விழுகின்றான். இராமனது நிலையைக் கண்டு தேவர்கள் போர்க்களம் வருகின்றனர்; இராமனது உண்மையுணர்த்தி அன்போடு அவனது உண்மை சொரூபத்தை எடுத்துக் கூறுகின்றனர் ஏழு பாடல்களால்.[12] இவற்றுள் ஒரு பாடலைக் காட்டுவேன்.

துன்ப விளையாட்(டு) இதுவேயும்
உன்னைத் துன்பம் துடர்பின்மை
இன்ப விளையாட் டாம்எனினும்
அறியா தேமுக் கிடருற்றால்
அன்பு விளையும் அருள்விளையும்
அறிவு விளையும் அவையெல்லாம்
முன்பு பின்பு நடுவில்லாய்
முடித்தா லன்றிமுடியா முடியாமலே (227)

"முன் பின் நடு இல்லாமல் எப்போதும் இருப்பவனே! உன்னைத் துன்பம் தொடர்தல் இல்லாமையால் நீ துன்புற்றாய் போலவும் இன்புற்றாய் போலவும் விளையாடுகின்ற நின் செயல் துன்ப விளையாட்டோடு என்றாலும், தோற்றமேயன்றி உண்மையை அறியமாட்டாத எங்கட்கு நீ இடருற்றாய் என்றால் உன்பக்கம் அன்பு தோன்றும்; இரக்கமும் தோன்றும்; துன்ப உணர்ச்சி தோன்றும். இவையெல்லாம் நீ போக்கி வைத்தாலன்றி நம்மாற் போக்கமுடியாது. அஃது உன் திருவிளையாடலில் எமக்குத் தோன்றும் இடர் உன்னாலேயே போக்கவல்லது" என்கின்றனர்.

12. யுத்த – பிரம்மாத் – 223–229

*(3) மாயா சீதையை வாளால் வெட்டிப் போக்குக் காட்டிய இந்திரசித்து தவறாமல் வெற்றி பெற வேண்டும் என்ற கருத்தினால் நிகும்பலை என்ற இடத்தில் வேள்வி இயற்றுகின்றான். இச்செய்தியை வீடணனால் அறிந்த இராமன் வீடணனோடும் வானர சேனையுடனும் இலக்குவனை அனுப்பிப் பொரச் செய்து வேள்வியை முற்றுவிக்க வொட்டாது தடுக்கச் செய்கின்றான். கடுமையான போர் நடைபெறுகின்றது. இந்திரசித்து மலரவன் கணையைத் தொடுக்க இலக்குவனும் எவர்கக்கும் தீங்கு விளைக்காது அரக்கன் விடுத்த கணையை மட்டிலும் ஒழிக்குமாறு மலரவன் கணையைத் தொடுக்கின்றான். அரக்கன் விடுத்த கணையினை யொழித்து எங்கும் பரவி நிற்கின்றது. தேவர்கள் இலக்குவனது நற்குணத்தை வியந்து பாராட்டுகின்றனர். சிவபெருமான் இராம இலக்குமணர் களின் பெருமையைத் தேவர்கட்கு உரைக்கின்றார். சிவபெருமான் வாக்காக நான்கு பாடல்கள் உள்ளன[13] ஒரு பாடலைக் காட்டுவேன்.*

நாராயண நரர்என்றிவர்
        உளராய் நமக்கெல்லாம்
வேராய்முழு முதற்காரணப்
        பொருளாய்வினை கடந்தோர்
ஆராயினும் தெரியாததோர்
        நெடுமாயையின் அகத்தார்,
பாராயண மறைநான்கையும்
        நடந்தார்இவர் பழையோர் (141)

*'இராமலட்சுமணர் நாராயணன் நரன் என்று இருவராய் உள்ளவர்கள். நமக்கெல்லாம் மூலகாரணமாக இருப்பவர்கள். இவ்வண்டங்கட்கெல்லாம் முழுமுதற்*

13. யுத்த. நிகும்பலை – 141–144

கடவுளான நாராயணப்பொருள். வினை கடந்தவர் ஆராய்ந்தாலும் அவர்கட்குத் தெரியாததான ஒப்பற்ற பெருமையினுள் மறைந்திருப்பவர்கள். நாம் பாராயணம் செய்யும் மறை நான்கிற்கும் அப்பாற் பட்டவர்கள். புராண புருடர்கள்' என்கின்றார்.

இவை மட்டுமா? இந்திரசித்தின் கருத்திலும் இராமன் பரம்பொருளாகக் காட்சி அளிக்கின்றான். நிகும்பலை வேள்வியை முடிக்கக் கருதிய இந்திரசித்து பகைவர்களின் கவனத்தை வேறு பக்கத்தில் திருப்பக் கருதுகின்றான். சஞ்சீவி பருவதத்தை இருந்த இடத்திலேயே திரும்ப வைத்துவிட்டு மீண்டு வந்த அநுமன் இலங்கை மாநகரின் மேற்குவாயிலிலிருக்கும்போது மாயையால் தான் படைத்த சீதையை வெட்டி வீழ்த்துகின்றான். இச்செய்தியறிந்த இராமன் முதலியோர் துயர்க்கடலில் ஆழ்ந்து விடுகின்றனர். வீடணன் வண்டின் உருவங் கொண்டு அசோகவனம் சென்று சீதையைக் கண்டு இந்திரசித்து செய்தது வஞ்சகமான செயல் என்பதைத் தெரிவிக்கின்றான்.

இந்நிலையில் இந்திரசித்து தந்தையைத் தனிமையில் சந்தித்து இராமலக்குமணர்களைப் புகழ்கின்றான். பின்னர் தான் நிகும்பலை வேள்வியை வெற்றியுடன் முடித்தால் தந்தையின் துயர் தீரும் எனத் தெரிவிக்கின்றான். இந்திரசித்தன் இராமலக்குமணர்களைப் புகழும் பாடல் இது.

மானிடன் அல்லன் தொல்லை
வானவன் அல்லன் மற்றும்
மேனிவர் முனிவன் அல்லன்
வீடணன் மெய்யில் சொன்ன
யான்எனது எண்ணல் தீர்ந்தார்
எண்ணுதும் ஒருவன் என்றே

தேனகு தெரியல் மன்னா!
சேகறத் தெரிந்த தன்றே.[14]

'எந்தையே, நான் முகன் படையும் தீண்டாதிருத்தலால் அந்த இராமன் சாதாரண மனிதன் அல்லன்; தேவ சாதியானும் அல்லன்; வீடணன் உண்மையாகச் சொன்ன அகப்பற்று புறப்பற்று அற்றவர்களான யோகியர் தியானிக்கின்ற ஒப்பற்ற கடவுள் என்றே ஐயமறத் தெரிந்தது' என்கின்றான்.

பல பாடல்களில் வைணவ தத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றனவேயன்றி எந்த ஒரு பாடலிலாவது சைவ சித்தாந்தக் குறிப்புகள் காணப் பெறவில்லை என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

இக்கூறியவற்றால் கம்பன் கருத்தில் இராமனே பரம் பொருள் என்பது உறுதிப் படுவதால் கம்பன் ஒரு சிறந்த வைணவன் என்பது தெளிவாகின்றது. இத்துடன் இதனை நிறுத்தி என் தலைப்புக்கு வருகின்றேன்.

* * *

**மனிதப் பண்பாடு:**

கற்றார் இராம பிரானைஅல்
லால்மற்றும் கற்பரோ ?[15]

என்பது நம்மாழ்வாரின் திருவாக்கு. இந்த இராமகாதையை,

நடையின் நின்றுயர் நாயகன் தோன்றத்தின்
இடைநிகழ்ந்தஇ ராமாவ தாரப்பேர்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை[16]

14. யுத்த. மாயா சீதை – 13.
15. திருவாய் 7.5:1
16. கம்பரா, தனிசிறப்பு – 11

என்று குறிப்பிடும் இராமாயணத்தின் தற்சிறப்பும் பாயிரம். 'நடையில் நின்றுயர் நாயகன்' என்ற அடியின் முறை சிந்திக்கத்தக்கது. உலக உண்மைகளை யெல்லாம் மனிதமனம் உணரக் கூடியவாறு தன் மந்திரச் சொல்லால் உள்ளம் மயங்கச் செய்திடும் ஆற்றல் பெற்றவன் கம்பநாடன், இதனால் வைணவப் பெருமக்கள்

இராமனது மெய்யும்
கிருஷ்ணனது பொய்யும்
நமக்குத் தஞ்சம்

என்று சொல்லிவைத்தனரோ என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது. நடையில் நின்றுயர் நாயகன் திருக்கதையை மனிதப் பண்பாட்டை மையமாகக் கொண்டு சித்திரிக்கின்றான் என்றும் கருதலாம். அரக்கர், முனிவர், குரக்கா, வேடர், பறவை முதலியோரின் நெஞ்சங்களையெல்லாம் மனித நெஞ்சங்களாகமாற்றிக் காட்டும் ஆற்றல் பெற்றவன் கம்பன்.

அரக்கர் நெஞ்சறிவான்—முனிவர்
அகமும் கண்டறிவான்
குரக்கின்உள் ளறிவான்—வேடர்
குணமும் நன்கறிவான்

தீது நன்மையெல்லாம்—ஆராய்ந்து
தெளியச் சொல்லிடுவான்
வாதில் பிரதிகளின்—வழக்கை
வரைந்து காட்டிடுவான்[17]

என்று தெளிந்து உரைத்திடுவார் கவிமணி. 'செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்" அல்லவா?[18] இதனால்தான் இராம காதையில் பண்பாட்டின் கொடுமுடிகளைக் காணமுடிகின்றது.

17. தே.வி; மலரும் மாலையும் – கம்பர் 10,11
18. யுத்த ஊர்தேடு – 133

பண்பாடு என்பது என்ன?

பண்பெனப் படுவது
பாடறிந்து ஒழுகல்[19]

என்கின்றது கலித்தொகை. பண்பாடு என்பது இயற்கையாக அமைந்த பண்பு அல்ல. மனித பரம்பரை பொதிந்து வைத்துள்ள எழுத்துச் செல்வங்களைக் கற்றதனால் வருவது. பண்புடைமை என்னும் குணம் பெருமை, சான்றாண்மை களில் வழுவாது நின்று எல்லாருடைய இயல்புகளும் அறிந்து ஒழுகுதலாகும் என்பர் பரிமேலழகர்[20] வள்ளுவர் பெருமானும்,

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்[21].

என்று காட்டுவர். நீதியையும் அறத்தையும் விரும்பும் தன்மையே மக்கட்பண்பு என்பது. இவற்றை விரும்புகின்ற வர்களே உலகிற்குப் பயன்படுவார்கள். அவர்கள் பண்பையே உலகமும் பாராட்டும். இத்தகையோர் இருப்பதால்தான் உலக வாழ்க்கை உண்டு என்று சொல்லக் கூடியதாய் நடைபெறுகின்றது. இல்லையென்றால் உலகம் வெறும் மண்ணாய் நின்று அழியக் கூடியதாகும். உலகத் தோற்றம் மண்ணும் கல்லுமாக உள்ளது. மற்ற பூதங்கள் இருப்பினும் மண்ணே அதன் புறத் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. மற்றப் பூதங்கள் இருப்பதைவிட, மற்ற உயிர்கள் இருப்பதைவிட, மக்கள் வாழ்வதே மண்ணுலகத்தின் சிறப்பிற்குக் காரணமாகும். மக்கள் பண்பு இன்றி, விலங்குகளைப் போல், மரங்களைப் போல் மக்கள் வாழ்க்கை நடத்தினால், ஒருவரையொருவர்

19. கலி – 133.
20. திருக்குறள், பண்புடைமை – அதிகார விளக்கம்.
21. மேற்படி. பண்புடைமை – 6 (996)

கொன்று அழித்துவிட, இறுதியில் வெறும் மண்ணுலக மாய்த் தோன்றி அழிந்து விடும்.

உலகம் என்பது என்ன? வெறு மண்ணா? மண்ணில் கலந்துள்ள மற்றப் பூதங்களா? மரம் செடிகொடியாக உள்ள மண்ணா? எலும்பாகவும் தசையாகவும் உள்ள மண்ணா? மூளையாகவும் நரம்பாகவும் உள்ள மண்ணா? பண்பு என்ற ஒன்று இல்லையானால், இவ்வுலகம் எவ்வாறு தோன்றும்? மண்ணில் வளர்ந்த புழுக்களுள் மக்கள் உடல்கள் பெரு வகைப் புழுக்கலாய்த் தோன்றும் அந்தப் பெரு வகைப் புழுக்கள் தம்மைவிட மெலிந்த (மக்கட்) புழுக்களை வருத்தியும் பொருதும் கொன்றும் வாழ்வதாகத் தோன்றும், இன்னும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால், மண்ணில் சிலபகுதிகள் அசைவும் எழுச்சியும் பெற்று ஒன்று மற்றொன்றைத் தாக்கி மண்ணாய் மாய்வதாகத் தோன்றும் அன்றோ? அவ்வாறு வெறு மண்ணாகவோ, நரம்பு மூளை முதலிய உயர்வகை மண்ணாகவோ தோன்றாமல் உண்மைப் பெருமையுடைய உலகமாகத் தோன்றச் செய்வது நெஞ்சப் பண்பு ஒன்றேயாகும். அத்தகைய நெஞ்சப் பண்பு உடையவர்கள் ஒரு சிலரேயாயினும் அவர்களால்தான் உலகம் உலகமாய் உள்ளது என்பது வள்ளுவர் பெருமானின் கருத்து என்பது பெறப்படும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற பொன் மொழியையும் ஈண்டு சிந்திக்கலாம். இத்தகைய பண்புடையவன்தான் மனிதன்—மானுடன்.

> **உயர்திணை என்மனார்**
> **மக்கட் சுட்டே.**[22]

என்று தொல்காப்பியர் ஒருபடி மேலே சென்று இவ்வாறு கூறுவர். மக்களாக நன்கு மதிக்கப்பெறுபவர்களே

22. தொல். சொல். கிளவியாக்கம். 1

*உயர்திணையில் அடங்குவர் என்பது அத்தொல்லாசிரியரின் கருத்தென்பது அறியப்படும். இக்கருத்துகளையெல்லாம் ஆழ்ந்து உணர்ந்து அறிந்தவன்தான் கம்பன். இதனை நன்கு சிந்தித்தே நம் தேசிய கவிபாரதியார்,*

**'கம்பன் என்றொரு மானிடன்'[23]**

*என்று கம்பனைத் தொல்காப்பியரின் கருத்திற்கிணங்கச் சுட்டி உரைத்தார் என்று கருதலாம் அல்லவா? இவ்விடத்தில் திருமாலே இராமனாக அவதரித்துள்ளான் என்று அறுதியிட்ட சுக்கிரீவனின்,*

**ஆறுகொள் சடிலத் தானும்**
**அயனும்என்று இவர்கள் ஆதி**
**வேறுள் குழுவை எல்லாம்**
**மானுடம் வென்றது என்றே[24]**

*என்ற வாக்காக வருவதையும் இதற்கு அரணாக அமைத்துக் கொள்ளலாம். இத்தகையவன் தான் படைத்த காவியத்தில் பொதிந்து வைத்துள்ள பண்பாடுபற்றிய கருத்துகளைச் சில தலைப்புகளில் ஆராயலாம்.*

*இன்னொரு குறிப்பையும் ஈண்டுச் சுட்டுவது மிகப் பொருத்தமாக இருக்கும். அதுதான் அவன் கவிதைச் சிறப்பு. காவியத்தின் காப்புப் பகுதியில் வரும் ஒரு தனியனில்,*

**கம்ப நாடன் கவிதையிற்போற்**
**கற்றோர்க்(கு) இதயம் களியாதே[25]**

*என்று கவிதையின் சிறப்பு பற்றிய குறிப்பினைக் காணலாம். கவிமணியும் இச்சிறப்பை,*

23. பா.க.; சுயசரிதை – 24.
24. கிட்கிந்தை – நட்புக்கோள் – 18.
25. கம்ப. காப்புப்பகுதி – தனியன் – 8.

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து–நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி[26].

என்றும்,

கம்பன் கவியின்
களியமுதம் உண்டிடமால்
அம்புவியில் வந்திங்(கு)
அவதாரம் செய்தானோ ?[27]

என்றும் போற்றிப் புகழ்வதைக் கண்டு மகிழலாம். கவிதைச் சிறப்புதான் பிற சமயத்தினரையும் ஈர்த்து ஆழங்கால்படச் செய்தது. கிறித்தவ சமயத்தைச் சார்ந்த H.C. கிருஷ்ணபிள்ளையையும், இஸ்லாமியச் சமயத்தைச் சார்ந்த உமறுப் புலவரையும், வீரமாமுனிவர் என்று வழங்கப்பெறும் பெஸ்கி பாதிரியாரையும் ஈர்த்தது கவிதைச் சிறப்பே. அவர்தம் நூல்களில் கம்பனின் கவிதைத் தாக்கத்தைக் கண்டு மகிழலாம்.

**கவிதை–காவியநடை:** பெரும்பாலும் உலக மகா காவியங்கள் யாவும் ஏதோ ஒருவகைக் கவிதையால்தான் படைக்கப் பெற்றுள்ளன. மில்ட்டன் படைத்த **துறக்க நீக்கம்** (Paradise Lost) செந்தொடைப் பாவால் (Blank verse) ஆக்கப் பெற்றுள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை அகவல் யாப்பாலும் சீவக சிந்தாமணி, இராமகாதை விருத்த யாப்பிலும் அமைக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். உரைநடை அறிவு பூர்வமானது; செய்யுள் நடை உணர்வு பூர்வமானது. இதனால்தான் அட்சன் என்ற மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர் "கவிதை

26. மலரும் மாலையும் – கம்பர் – 17.
27. மேற்படி – தாலாட்டு – 12

வாழ்க்கையிலிருந்து மலர்கின்றது; அது வாழ்க்கைக்கே உரியது; வாழ்வின் பொருட்டே அது நிலை பெற்று நிற்கின்றது[28] என்று கூறிப் போந்தார். இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் பெரும்பாலான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்துப் பல குறிக்கோள் பொருள்களை உணர்த்தியதனால்தான் இலக்கிய ஆசிரியர்கள் என்றும் சிறந்த மேதைகளாகப் பாராட்டப் பெறுகின்றனர். அவர்தம் இலக்கியங்களும் 'சாவா இலக்கியங்களாகத் (Classics) திகழ்கின்றன.

இதனை நன்குணர்ந்த **மாத்யூ ஆர்னால்டு** என்ற ஆங்கிலத் திறனாய்வாளரும் இதனால்தான் "இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு; வாழ்க்கையின் குறிக்கோள் பொருள்களைப் பயனுறும் முறைகளில் எடுத்துக் காட்டுவதில்தான் — வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்பதை உணர்த்துவதில்தான் — ஓர் இலக்கிய ஆசிரியனின் திறமை பொலிவுறும்" என்று கூறிப் போந்தார், தனிக்கவிதைகள் சில வாழ்க்கை உண்மைகளை உணர்த்துவதைவிட காவியத்தில் இவ்வுண்மைகளைச் சிறந்த முறையில் உணர்த்துவதற்கு வாய்ப்புகள் அதிகம்,

28 Poetry is made out of life, belongs to life, exists for life – W.H. Hudson.

# 2

# மக்கட் பாசம்

**பிள்ளைப்** பாசத்தைப் பற்றிப் பேசாத ககவிஞர்களே இல்லை. பிள்ளை பெற்றோர்கட்குச் செல்வக் களஞ்சியம், பேசும் பொற்சித்திரம். கனியமுது. பெற்றோர்கள் அள்ளி அணைத்திடவே ஆடிவருந் தேன். பிள்ளையின் மழலைச் சொல்லில் துன்பங்கள் தீர்ந்திடும். பிள்ளையின் முல்லைச் சிரிப்பால் மூர்க்கந் தவிர்ந்து விடும். இப்படியெல்லாம் பிள்ளைப் பாசத்தைப் பற்றிப் பாரதி நமக்குக் காட்டுவான்[1]

சற்று வளர்ந்த நிலையில் தீராத விளையாட்டுப் பிள்ளை[2]. 'பிள்ளைதமிழ்' என்று இலக்கியவகை தமிழில் ஏராளம். இதில் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்ற வகைகளும் ஏற்பட்டுள்ளன. முருகன், கண்ணன், மீனாட்சி என்ற தெய்வக் குழந்தைகளைப்பற்றி எழுந்துள்ள நூல்கள் தமிழுக்கு ஏற்றம் அழிந்துள்ளன. இராமகாதையில் அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆட்சிபுரிந்த தசரதனுக்கு நீண்டகாலமாகப் பிள்ளைப் பேறு வாய்க்கவில்லை. கலைக் கோட்டுமா முனிவனைக் கொண்டு செய்யப்பெற்ற புத்திரகாமேட்டி வேள்வியின் பலனாக தசரதனுக்கு இராமன், பரதன்,

---

1. பா.க. கண்ணன் பாட்டு – கண்ணம்மா என் குழந்தை
2. மேற்படி: கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை

இலக்குவன், சத்தருக்கன் என்ற நால்வர் தோன்றுகின்றனர். அருமருந்தன்ன பிள்ளைகள் பிறந்தமைபற்றியோ, தசரதனுடைய மகிழ்ச்சிப் பெருக்கு பற்றியோ காவியத்தில் பாடல்கள் இல்லை. ஆனால் தசரதனுக்குப் பிள்ளைகள் மேல் பாசம் உண்டு என்பதற்கு வெளிப்படையாகப் பாடல்கள் இல்லையாயினும், சில குறிப்புகளைக் காணலாம். ஒருபாடலில் 'ஒப்பற்ற இராமனையல்லாமல் தனக்கு உடம்பும் உயிரும் வேறில்லை' என்னும்படி தசரதன் தன் மூத்த குமாரனிடத்தும் பொருந்தியிருந்தான்' என்று கூறப்பெற்றுள்ளது[3]. விசுவாமித்திரன் வேள்விகாத்தற்கு இராமனை அனுப்பும்படி வேண்டிய போது "நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத்தந்திடுதி என உயிரிரக்கும் கொடுங் கூற்றின் உளையச் சொன்னான்" என்ற தொடரினால் இராமன் தசரதனுக்கு உயிர் போன்றவன் என்பது பெறப்படுகின்றது. முனிவனது வேண்டுகோள் 'மருமத்தில் வேல் பாய்ந்ததனால் ஏற்பட்ட புண்ணிலுண்டான பெரிய துவாரத்தில் கொள்ளிக்கட்டை நுழைந்தாற்போல் தசரதன் செவியில் புகுந்தது' என்றும், இதனால் மனத்தில் உண்டான துன்பம் பிடித்து வெளியே தள்ளுதலால், அரிய உயிரானது ஊஞ்சலாடுவது போலப் போவதும் வருவதுமாயிருந்தது என்றும், பிறவிக்குருடன் கண்களைப் பெற்று உலகத்துப் பொருள்களையெல்லாம் கண்ணுற்று ஆனந்தம் அடைந்து கொண்டிருக்கும்போது, அக்கண்களை திரும்பவும் இழக்க நேர்ந்தால் வருத்தம் மிகவும் அதிகமாவது போல, மக்கட் பேறின்றி இருந்த சோகத்தினும் மக்கட் பேறு பெற்று இழக்க நேர்கின்ற சோகம் பெரிதாக இருந்தது என்றும் கூறி பிள்ளைப் பாசத்தைப் பெரிதாகக் காட்டுகின்றான் கம்பன்.

3. பாலகா. திருவவ. 124

திருமணம் முடிந்து தசரதன் தன் மக்களோடு அயோத்தி திரும்பும்போது பரசுராமன் எதிர்வரும்போது, அவனைக் கண்டு நடுங்குகின்றான். அவனை நோக்கி,

'இவனும் எனதுயிரும்
உனதபயம் இனி'[4]

என வேண்டுகின்றான் தயரதன். தனது உயிரினும் சிறந்தவன் இராமன் என்றும், தன் உயிர் உளதாவது இராமன் உளனானபின்பே என்றும் கருத்துகள் விளங்க 'எனதுயிர்' என்பதற்கு முன் 'இவனும்' என்கின்றான். இதனாலும் தசரனது பிள்ளைப் பாசம் தெளிவாகின்றது.

இராமன் கைகேயியின் அரண்மனையிலிருந்து அவளிடம் விடை பெற்றுக் கொள்கின்றான்.

மின்னொளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்[5]

என்று விடைபெற்றுக் கொண்டு, கோசலையின் இடத்திற்கு வருகின்றான். கைகேயியின் அந்தப்புரத்தில் நடைபெற்ற சதி முதலியவற்றைச் சிறிதும் அறியாள் கோசலை. முடிபுனைந்து கொள்ளும் தன் அருமை மகன் தன்னிடம் ஆசிபெற வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றாள் இப்பெருமாட்டி.

குழைக்கின்ற கவரி இன்றிக்
கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் இரங்கி ஏக
மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்என்று என்று

4. பாலகா. பரசுராமப் – 19.
5. அயோத். கைகேயி சூழ்வினை – 110.

தழைக்கின்ற உள்ளத் தன்னாள்
முன்ஒரு தமியன் சென்றான்[6]

என்பது இராமன் வருகையைச் சித்திரிக்கும் பாடல். இப்பாடலில் 'மழைக்குன்றம் அனையான் மௌலிகவித்தன் வரும்' என்பது எதிர்பார்த்து நிற்கும் தாயுள்ளத்தை உணர்த்துகின்றது. 'என்று என்று' என்ற அடுக்குத் தொடரில் பெற்றதாயின் உள்ளம் பலமுறை எண்ணிக் கனவு கண்டிருந்த ஆசையும் ஆவலும் புலனாகின்றன. 'தழைக்கின்ற உள்ளம்' என்ற சொற்றொடரின் பொருள் அன்பால் கிளர்ந்தெழும் தாயுள்ளத்தைக் காட்டுகின்றது; 'தழைக்கின்ற' என்பது, இதற்கு முன் எங்குமே கண்டிராத ஒரு புதுப்பொருள் உணர்த்துவதை அறிகின்றோம். 'அன்னாள்' என்ற சொல் அத்தாயைத் தொலைவில் நிறுத்திக் காட்டி இறக்கமுறச் செய்கின்றது. காரணம், என்ன நிகழப் போகின்றது என்பதை நாம் அறிவோம். கோசலை அறியமாட்டாள் அன்றோ? மேலும் 'ஒரு தமியன்' என்ற தொடரில் 'பெரியவிருதுகளுடனும் மக்கள் சுற்றத்துடனும் வாராமல் தனியாக ஒரு பரதேசிபோல் வருவதை' உணர்த்துகின்றது.

தன்னிடம் ஆசி பெறத் தனயன்—பாராளப் போகின்றவன்—வருவான் என்று எதிர்பார்த்திருக்கும் கோசலையின் முன் இராமன் வருகின்றான்; முடிபுனையும் நிலையில் வரவில்லை; சாதாரண நிலையில்தான் வருகின்றான். 'குழைக்கின்ற கவரியின்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி' வருகின்றான். 'குழைக்கின்ற கவரி' 'கொற்றவெண்குடை' என்ற அழகிய சொற்றொடர்கள் இராமன் பெறுவதற்கிருந்த பேறுகளை எண்ணி ஏங்கச் செய்கின்றன. இராமனுக்கு முன்னால் ஒருவரும் பின்னால் ஒருவரும் வருவதாகக் காட்டுகின்றான் கவிஞன். இருவரும்

6. அயோத்தி – நகர்நீங்கு – 2

ஊனக் கண்ணுக்குப் புலனாகாதவர்கள்; கவிஞனின் மனக்கண்ணுக்குல் புலனாகின்றவர்கள். முன்னால் வருபவர் 'விதி'; அனைத்தையும் ஆட்டிவைக்கும் பேராற்றலுடைய ஊழ். 'இழைக்கின்ற' என்ற சொல் விதியின் போக்கையும் ஆற்றலையும் உணர்த்துகின்றது. பின்னால் வருகின்றவர் 'தருமம்'; இந்த உலகில் நடை முறையில் அடிக்கடிப் பல்வேறு சோதனைக்குள்ளாகும் அறம், அவர் 'பரிதாபநிலையில்' தள்ளாடித்தள்ளாடி வந்து கொண்டிருக்கின்றார். 'ஏக' என்ற சொல் அதனை உணர்த்துகின்றது. 'விதிமுன்செல்ல' என்பதிலுள்ள 'செல்ல' என்ற சொல் விதிபெருமிதத்துடன் நடந்து போவதைக் காட்டுகின்றது. 'செல்ல', 'ஏக' என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளுடையனவாயினும், இப்பாடலில் வெவ்வேறு உணர்ச்சிகளைப் புலப்படுத்துவதை அறிந்து தெளியலாம். 'செல்ல' என்பதில் விதியின் உரிமையும் செல்வாக்கும் பீடுநடையும் புலப்படுத்துவதாகவும், 'ஏக' என்பதில் தருமத்தின் தோல்வியும் சோர்வும் பரிதாபநிலையும் புலப்படுத்துவதாகவும் அறிகின்றோமல்லவா? கவிதை யிலுள்ள சொற்களுக்கு அப்பாற்பட்ட பொருள்கள் தோன்றும் காரணமாகவே ஒரே கவிதை பலருக்குப் பலவிதமான அநுபவங்களைத் தருகின்றது. இதனால்தான் ஒரே கவிதைக்கும் பல்வேறு உரைகள் தோன்றுகின்றன. திருவாய்மொழிக்குப் பல்வேறு 'வியாக்கியானங்கள்' தோன்றினதற்கும் திருக்குறளுக்குப் பல 'உரை வேற்றுமைகள்' தோன்றினதற்கும் இதுவே காரணமாகும் என்று கருதலாம். இங்ஙனம் பல்வேறு நோக்குகளால் பாடலின் போக்குகளும் வேறாகிக் கோசலையின் பிள்ளைப் பாசத்தைப் புலப்படுத்துவதை அறிகின்றோம்.

இன்னோர் இடம், இராமன் கானகம் செல்வானேயன்றி முடிசூடிக் கொள்ளான் என்று கோசலை கூறியதைக் கேட்டு தசரதன் புலம்பத் தொடங்குகின்றான்.

பன்னிரண்டு பாடல்களில். "என்கண்ணிரண்டும் நீர்மயமாகி ஆறாய்ப் பெருக, என் உயிரும் நீங்கப் போகி'ன்றது. வேதமந்திரங்களைச் செபித்து ஓமம் செய்து உனக்கு நீராட்டும் பொருட்டு கங்கை முதலிய புண்ணியநதிகளிலிருந்து கொண்டு வந்துள்ள நீரை இறந்து விட்ட எனக்குத் தர்ப்பண நீராய்க் கொடுத்துப் பின் கானகம் செல்வாய்" (56) என்று தசரதன் கூறும்போது அவன் இராமன்மீது வைத்திருக்கும் பிள்ளைப்பாசம் புலனாகின்றது,

பிறிதொரு பாடல்,

> தேனகுமா மலர்க்கூந்தல் கௌசலையும்
> சுமித்திரையும் சிந்தை நோவ
> கூனுருவில் கொடுந் தொழுத்தை சொற்கேட்ட
> கொடியவள்தன் சொற்கொண்டு இன்று
> கானகமே மிகவிரும்பி நீதுறந்த
> வளநகரைத் துறந்து நானும்
> வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்
> மனுகுலத்தார் தங்கள் கோவே.[8]

என்ற குலசேகரப் பெருமானின் திருமொழியை ஒட்டியுள்ளது. பல பாடல்கள் பெருமாள் திருமொழியை யொட்டியே அமைந்துள்ளன. "நீ மணி முடிசூடி வெண் கொற்றக் கொடி நிழற்றப் பேரணி நலம் பூண்டு அரியணையில் இலக்குமி தங்கும் மார்போடு வீற்றிருக்கக் காணுதற்குரிய யான், அதற்கு மாறாய் மரவுரிதரித்து மான்தோல் போர்த்துச் சடைமுடியுடன் இருக்கும் தவக் கோலத்தைக் காணாது வானுலகம் சேர்தல் எனக்கு நேருமாயின் அதுவே எனக்கு நன்று' (66) என்று

7. அயோத்தி – நகர் நீங்கு – 56–66
8. பெரு. திரு. 9:10

வருந்துகின்றான் தசரதன். இவை யாவும் பிள்ளைப் பாசத்தை விளக்குகின்றன: மக்கட் பாசத்தை விளக்கும் குலசேகராழ்வாரின் ஒரு பாசுரத்தைக் காட்டி மேற் செல்வேன்.

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமதலாய் ! குனிவில் ஏந்தும்
வல்லணைந்த வரைத்தோளா ! வல்வினையேன்
மனமுருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா ! கரிய கோவே ![9]

இராமனின் அரண்மனை வாழ்க்கையும் கானிலுறையும் தவவாழ்கையும் ஒரு சேர நினைத்துத் தந்தையின் உள்ளம் உருகுவதைக் காட்டுகின்றது இவ்வரிய பாசுரம்.

இராமனைத் திரும்பவும் அயோத்திக்குக் கூட்டிக் கொண்டு வந்து அரசாளச் செய்ய வைக்கலாம் என்ற நோக்கத்துடன் பரதன் சேனையுடன் காட்டிற்கு வருகின்றான், அப்போது தந்தை திருநாடு அலங்கரித்த செய்தியை அறிகின்றான் இராமன். உடனே அவன் அடைந்த நிலையை,

இருநிலஞ் சேர்ந்தனன் இறைஉ யிர்த்திலன்;
உருமினை அரவென உணர்வு நீங்கினான்
அருமையின் உயிர்வர அயர்வு யிர்த்துஅகம்
பொருமினன் பன்முறைப் புலம்பி னான்அரோ ?[10]

என்ற பாடலால் புலப்படுத்துகின்றான் கவிஞன். "இராமன் பூமியில் விழுகின்றான்; மூச்சுடங்குகின்றது; இடியினால் வருந்துகின்ற அரவுபோல உணர்வு இழக்கின்றான். பின்பு

9. பெரு. திரு. 9:3
10. அயோ. திருவடி சூட்டு. 59

அருமையாக உயிர் மீளுகின்றது. பெருமூச்சு விட்டுக் கொண்டு பலவகையாகப் புலம்புகின்றான்" என்கின்றான் கம்பன். புலம்பலை ஏழு கவிகளால் புலப்படுத்துகின்றான்: அனைத்தும் உள்ளத்தை உருக்கும் பாடல்கள்.

"கலைக் கோட்டுமாமுனிவன் இயற்றிய வேள்வியால் என்னை மகனாகப் பெற்றாய். அதனால் நீ பெற்றது உயிர் நீங்கிப் போவதற்குதானோ?" என்கின்றான். உள்ளத்தை உருக்கும் ஒருபாடல்:

**தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்**
**கானடைந்தேன் என்னத் தரியாது காவலநீ**
**வானடைந்தாய்; இன்னம் இருந்தேன்நான்**
**வாழ்வுகந்தே;**[11]

என்பது. "நான் கானம் அடைந்தேன் என்ற செய்தி கேட்டு அதனைத் தாங்கமுடியாது வானுலகம் சென்றுவிட்டாய். நீ திருநாடு அலங்கரித்தாய் என்று கேட்டும் இன்னும் வாழ்க்கையை விரும்பி வாழ்கின்றேன். இஃதென்ன இரக்கமின்மை?" என்கின்றான். இதனாலும் தசரதனின் பிள்ளைப் பாசம் புலனாகின்றது.

அட்சய குமாரனை அநுமன் கொன்றொழிக் கின்றான். இதனைக் கவிஞன் "அநுமன் பெருவெள்ளமாகப் பெருகியோடும் குருதியே நீராகவும், போர்க்களமே அம்மிக் கல்லாகவும், அட்சயனின் தசையே அரிசியாகவும், அவனுடைய தசை நீங்கிய உடற்பகுதியே குழவியாகவும் கொண்டு மண்ணோரும் விண்ணோரும் காணும்படி அரைத்துத் தேய்த்து ஒழித்தான்"[12] என்கின்றான். இதனைச் செவியுற்ற மண்டோதரி அழுகின்றாள். தாய்ப்பாசம் இது. இராவணன் வருந்தியதாகச் செய்தி இல்லை.

11. அயோத். திருவடி சூட்டு. 65
12. சுந்தர – அட்சய குமாரன் வதை – 38.

இலக்குவன் ஏவிய நான்முகன் கணையால் இறந்து படுகின்றான் அதிகாயன். செய்தி எட்டியதும் இராவணனது நிலைமையைக் கவிஞன்,

ஏங்கிய விம்மல் மானம்
இரங்கிய இரக்கம் வீரம்
ஓங்கிய வெகுளி துன்பம்
என்றிவை ஒன்றற் கொன்று
தாங்கிய தரங்கம் ஆகக்
கரையினைத் தள்ளி தள்ளி
வாங்கிய கடல்போல் நின்றான்
அருவிநீர் வழங்கு கண்ணான்[13]

என்று கூறுவான். புத்திர சோகத்தால் கண்களில் நீர் அருவிபோல் சொரிகின்றது. ஏக்கம் கொள்ளக் காரணமான அழுகை, மானம், இரக்கம், வீரம் மிகு வெகுளி, துன்பம் இவை ஒன்றற்கொன்று மேம்பட்டு அலை ஏறிகின்றன. அவை கரைவரையில் தள்ளி மீளுகின்ற கடல் போல் நின்றான். அடுத்த இரண்டு பாடல்கள் அவனது சீற்றத்தால் விளைந்த நிலைகளைக் காட்டுவன. அடுத்த எட்டுக் கவிகள் அதிகாயனின் தாய் தானியமாலினி பிள்ளைப் பாசத்தால் புலம்புவதைக் காட்டுகின்றன. பிறர் அழுவதைப் பார்த்தும் அறிந்திராதவளான இவள் இராவணன்தாளின்மீது வீழ்ந்து 'கொடிய'னே! எனக்குக் கேடு சூழ்ந்தாய்' என்று சொல்லி,

அக்கன் உலந்தான் அதிகாயன் தான்பட்டான்
மிக்கதிறத் துள்ளார்கள் எல்லாரும் வீடினார்
மக்களினில் இன்றுள்ளான் மண்டோ தரிமகனே
திக்கு விசயமினி ஒருகாற் செய்வாயோ ?

ஏதையா சிந்தித் திருக்கின்றாய் எண்ணிறந்த
கோதையார் வேலரக்கர் பட்டாரைக் கூவாயோ ?

13. யுத்த – அதிகாயன் வதை – 263.

பேதையாய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ ?
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ ?

உம்பி உணர்வுடையான் சொன்ன உரைகேளாய்
நம்பி குலக்கிழவன் கூறும் நலம்ஓராய்
கும்ப கருணனையும் கொல்வித்து என்கோமகனை
அம்புக் கிரையாக்கி ஆண்டாய் அரசுஐய[14]

என்ற பாடல்களில் புலம்புவது பிள்ளைப் பாசத்தைச் சுட்டுவதுடன் இராவணனின் பெரியோர் அறவுரையைக் கேளாத்தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றாள். தவிர, இவை பிராட்டியால் இன்னும் வரும் துன்பங்களையும் முற்கூறுவதாகவும் அமைகின்றன.

மருத்து மலையைக் கொணர்ந்து மாண்டவர்களைப் பிழைப்பிக்கச் செய்த அநுமன் இலங்கையின் மேற்கு வாயிலில் இருந்தபோது இந்திரசித்து அவன் கண்முன் மாயா சீதையை வெட்டிவீழ்த்தி இராமன் பக்கம் ஒரு கலக்கத்தை உண்டாக்கி நிகும்பலை யாகம் செய்யத் தொடங்குகின்றான். வீடணனால் இதனையறிந்த இராமன் இலக்குவனை வீடணனோடும் வானர சேனையுடனும் அனுப்ப, அவர்கள் சிவ பூசையில் கரடி புகுந்தமாதிரி புகுந்து யாகம் முற்றுப் பெறாமல் குலைக்கச் செய்கின்றனர். இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் இடையே நடந்த போரில் இந்திரசித்து கொல்லப்படுகின்றான்

மகன் மறைந்த செய்தி இராவணனுக்கு எட்டுகின்றது. புத்திர சோகம் பிடர் பிடித்து உந்த கோபக் கனல் பொங்கி எழுகின்றது. பின்னர் சினம் அடங்கப் புலம்பி அழுகின்றான். நான்கு பாடல்கள் அவன் புலம்பலைக் காட்டும்[15]. 'மைந்தனே! என்பான்; சிறந்த மகனே என்பான்;

14. கம்பரா. யுத்த. அதிகாயன் வதை – 271–273.
15. இராவணன் சோகம் – 10–13.

எந்தையே என்பான்; என் உயிரே என்பான்; உனக்கு முந்தினவனான நான் உயிரோடு இருக்கின்றேன்' என்பான் (10). இந்திரனது பகை ஒழிந்ததே என்பான்; வானரர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரித்தாரே! என்பான்; காந்தை மலர் சூடிய கண்ணுதலோனும் பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரந்தாமனும் நிரந்தரமாகப் பகை நீங்கப் பெற்றனரோ?' என்பான் (11). சாம்பல் பூசிய சங்கரனும் சுதர்சன பாணியான மாலும் நின்னை எதிர்ப்பதினின்றும் நீங்கி முறையே மலையிலும் கடலிலும் மறைந்து நிற்பவர்கள் இனி காளைமீதும் கருடன்மீதும் ஏறிக் கொண்டு உலாவுவார்கள் (12). வானவர்கள் கூட்டமும் அவர்கள் இவர்ந்து செல்லும் ஊர்திகளும் இந்திரசித்துக்குமுன் எதிர்த்து நிற்கமாட்டாமல் தாம் சென்ற திக்குகளிலேயே பதுங்கியுள்ளவை இதுவரையில் தமக்கு உரியனவான இடங்களில் சேரமாட்டாதன வாயின், அவை மீண்டும் சேர்வது கீழான மானுடரின் வெற்றியைக் கொண்டுதானோ?" என்பான் (13). 'ஒருமனிதன் கொல்ல என்மகன் உயிரொழிந்தனனே!' என்பான். பலமுறை 'மைந்தா! மைந்தா!' என்று குரலிட்டுக் கூப்பிடுவான்; வருந்துவான்; மனம் வெதும்புவான் (14).

அடுத்து, ஏழு கவிகளால் இராவணனுடைய பத்துத் தலைகளும் பலவாறு புலம்புவதைக் காட்டுவான் கவிஞன்

'ஐயனே!' என்று கூறும் ஓர் சிரம்; மற்றோர் சிரம் 'இன்னும் யான் அரசு செய்வேனோ!' என்னும்; 'உன்னைப் பகைவர் கையிற்காட்டிக் கொடுத்த அற்பனாகிய யான் உய்வேனோ?' என்று உரைக்கும் பிறிதோர் சிரம்.

16. இராவணன் சோகம் – 16–22

"சந்தனக் குழம்புகளால் கோலம் எழுதப்பெற்ற இரும்புத்தூணையொத்த நின் தோள்களினால் என்னைத் தழுவிக் கொள்ளாமல் இருக்கின்றாயே!' என்று ஒருதலை பேசும்; மற்றொரு தலையோ 'வளப்பமுள்ள வில் வீரனே! புலியேற்றை மான் உண்பது தகுதியோ!" என்று கூவும். நீலகண்டனையும் சக்கரபாணியையும் புறமுதுகுகாட்டி ஓடச் செய்த நீ மீண்டும் உன் குரலைக் காட்டாமல் போனாயோ? என்று கூறும்.

அங்கே ஒரு தலை 'நீ இறந்திட்டாயோ! நான், துணையைப் பிரிந்திட்டேனே!' என்று கரையும்; நினக்கு நேர்ந்த விபத்து வஞ்சமோ! என்று கூறும்; 'இனித் திரும்பி வரமாட்டாயோ!' என்று ஏங்கும்; நான் தன்னந் தனியே கிடந்து அஞ்சினேன்' என்று நெஞ்சு நோவக் கதறும். பின்னும் ஒரு சிரம், 'இந்திரனுடைய வெற்றி மாலையை அவன் கிரீடத்துடன் நீ பறித்ததனால் உன் அக மகிழ்ச்சிக்காக மகிழ்ச்சி காட்டிய மாதவர் உச்சியாலே வைத்த உன்னுடைய அன்று மலர்ந்த வெற்றி மாலையைக் காகங்களாடுகின்ற போர்க்களத்தில் காண்பேனோ? (இது தக்கதோ?)' என்று கூவும்.

மற்றோர் சிரம், 'வீரனே! சேல்மீனையொத்த கண்களையுடைய இயக்க மனைவியர் உன்னுடைய அழகிய வில்லினொலியைக் கேட்டு நடுங்கித் தம்தாலியைத் தொடு தலை இனிமேல் தவிர்வார்களோ?' என்று சொல்லும். அங்கே ஒருதலை, 'எல்லையில்லாத வல்லமை' யுடையவனே! எல்லாஉயிரையும் கொள்ளும் காலன் உன் எதிரே வந்து உயிர்கொள்ளுதற்குரிய ஒப்பற்ற வலிமையைத் தான் உடையதன்று; என்னையும் ஒளித்து உனக்கு ஏற்ற எந்த உலகத்தை அடைந்தாயோ?' என்று சொல்லும்.

பின்னர் இராவணன் போர்க்களஞ்சென்று ஒருநாள் முழுதும் தேடி பிணங்களிடையே அவன் உடலைக் கண்டு

*அங்கும் பலவாறு புலம்புகின்றான். ஐந்து பாடல்கள் புலம்பலைப் புலப்படுத்துகின்றன. முத்தாய்ப்பான ஒரு பாடல்.*

எனக்குநீ செய்யத் தக்க
கடனெலாம் ஏங்கி ஏங்கி
உனக்குநான் செய்வ தானேன்
என்னின்யார் உலகத் துள்ளார்[17]

*பின்னர் இராவணன் தன் மகன் உடலுடன் இலங்கை நகர்புகுகின்றான். இந்நிலையில் மண்டோதரி தன் மகன் மீது 'மலையின்மீது மயில் வீழ்ந்தென்ன மைந்தன் மீது மறுகிவீழ்ந்து' (45) புலம்புகின்றாள்,* எட்டுப் *பாடல்கள்* இப் *புலம்பலைப் புலப்படுத்துகின்றன.*[18]

கலையினால் திங்கள் போல
வளர்கின்ற காலத் தேஉன்
சிலையினால் அரியை வெல்லக்
காண்பதோர் தவமுன் செய்தேன்.
தலையிலா ஆக்கைக் காண
எத்தவம் செய்தேன் அந்தோ! (47)

தாளரிச் சதங்கை ஆர்ப்பத்
தளர்கின்ற பருவந் தன்னில்
கோளரி இரண்டு பற்றிக்
கொணர்ந்தனை கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட
முன்றிலின் முறையி னோடு
மீளரும் விளையாட்டு இன்னம்
காண்பனோ? விதியி லாதேன் (49)

17. இராவணன் சோகம் – 39.
18. மேற்படி – 46–53.

'அம்புலி அம்ம ! வா'வென்று
அழைத்தலும் அவிர்வெண் திங்கள்
இம்பர்வந் தானை 'அஞ்சல் !'
எனஇரு கரத்தில் ஏந்தி
வம்புறு மறுவைப் பற்றி
முயல்என வாங்கும் வண்ணம்
எம்பெருங் களிறே ! காண
வேசற்றே எழுந்தி ராயோ ? (50)

முக்கணான் முதலி னோரை
உலகொரு மூன்றி னோடும்
புக்கபேர் எல்லாம் வென்று
நின்றஎன் புதல்வன் போலாம்
மக்களில் ஒருவன் கொல்ல
மாள்பவன் வான மேரு
உக்கிட அணுவொன்று ஓடி
உதைத்தது போலும் அம்மா ! (52)

*இங்ஙனம் பல்வேறு கோணங்களில் பல்வேறு பாத்திரங் களால் பிள்ளைப் பாசம் காட்டப் பெறுவதைக் கண்டு மகிழலாம். இறுதியாக, ஒரு பாடலில் மண்டோதரி வாய் மொழியாக வரும்,*

அஞ்சினேன் அஞ்சி னேன்அச்
சீதைஎன் றமிழ்தில் தோய்ந்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளைஇத் தகையன் அன்றோ ! (53)

*என்ற பகுதி இலங்கை வேந்தனின் மரணம் முற்கூறுதலாக அமைவதையும் காண்கின்றோம்.*

*கம்பன் மாபெருங்கவிஞன். நீண்டகாலமாக மக்கட்பேறு இல்லாத தயரதனுக்கு மக்கட்பேறு உண்டாகின்றது. மன்னனுக்கும் அரசமாதேவியருக்கும்*

எவ்வளவு மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்? இந்த உணர்வு கேற்றவாறு ஒரு நூறு பாடல்களையாவது பாடி இருக்க வேண்டாமா? தக்க வாய்ப்புகள் இருந்தும் ஏன் பாடவில்லை? பாடாததற்கு என்ன காரணம்? இந்த இன்ப உணர்வுகட்கு வடிவம் கொடுத்துப் பாடல்கள் தோன்றியிருந்தால் காவியம் இன்னும் சிறப்புடன் திகழ்ந்திருக்குமல்லவா?

எனக்கு ஒரு காரணம் தோன்றுகின்றது. கம்பனுக்கு ஓரே ஒருமகன் அம்பிகாபதி என்ற பெயருடன் இருந்ததாகச் செவி வழிச் செய்தி உள்ளது. ஆனால் எந்த இலக்கிய ஆசிரியரும் இவன்பற்றிக் குறிப்பிடவில்லை. இந்த அம்பிகாபதி சோழ அரசன் மகளைக் காதலித்ததாகவும், அரசன் வெகுண்டு அம்பிகாபதியைச் சிறையில் அடைத்து மரணதண்டனை விதித்ததாகவும் மற்றொரு செவிவழிச் செய்தியையும் கேள்வியுறுகின்றோம். இந்த மரண தண்டனைக்குப் பிறகு கம்பன் இராம காதையை இயற்றியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகின்றது. இதனால் இவன் குழந்தை இன்பத்தைப் பற்றிப் பாடவில்லை என்பதும் பாடவிரும்பவில்லையோ? என்பதும் என் ஊகம். துக்கம் நெஞ்சை அடக்கும்போது பாடல்கள் எப்படித் தோன்றும்?

ஆனால் மக்களோ சகோதரர்களோ இறக்கும் போது இறந்த நிலையைச் சித்திரிக்கும்போது தேங்கியிருந்த துக்கத்தின் விளைவாக அற்புதமான பாடல்கள் பிறந்துள்ளன. அட்சயகுமரன், இந்திரஜித்து, அதிகாயன், கும்பகருணன், இராவணன் இவர்கள் இறந்தபோது மண்டோதரி, இராவணன், வீடணன் இவர்கள் புலம்புவனவாக அமைந்த பாடல்கள் நெஞ்சை உருக்கும் ஆற்றலைப் பெற்றுத் திகழ்கின்றன. கண்ணீர்ப் பெருக்குடன்

பாடல்களை மீண்டும் மீண்டும் படிக்கின்றோம்; அழுது கொண்டே படிக்கின்றோம்; இப்பாடல்களை அடிக்கடிப் படிக்கவும் ஆசைப்படுகின்றோம்.

இவ்விடத்தில் சுவை பற்றிய ஒரு சிறு குறிப்பையும் உங்கள் முன் வைக்க ஆசைப்படுகின்றேன். சுவைகளை நகை, அழுகை, உவகை (காதல்), வெகுளி, பெருமிதம், அச்சம், இழிவரல், மருட்கை (வியப்பு) என எட்டு வகையாகப் பிரித்துப் பேசும். வடமொழிவாணர்கள் சாந்தம் (அமைதி) என்ற ஒரு சுவையையும் சேர்த்து சுவையை ஒன்பதாகக் கொள்வர். தமிழர்கள்' எண்சுவை' என்பர். வடநூலார் 'நவரசம்' என்பர். எல்லாச் சுவைகளும் நல்லறிவாளர் உள்ளத்தில் தோன்றி இன்பத்தை விளைவித்தலால் அவை சுவை என்ற திருநாமமும் பெற்றது. ஆதலால் ஒரு சுவைக்குக் கூறும் இலக்கணம் எல்லாச் சுவைகட்கும் பொருந்துவனவாக அமையும்.

சுவைகளைப் பற்றிய நிறைய செய்திகள் உண்டு அவற்றையெல்லாம் ஈண்டு விரித்துரைக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் வற்புறுத்த விரும்புகின்றேன். **உலகியல் நிகழ்ச்சிகள் சுவையன்று** என்பதுதான் அது.

உலகியலில் நிகழும் செயல்களால் உண்டாகும் இன்பத்தை சுவை (ரசம்) என்று கொள்ளுதல் பொருந்தாது. காரணம், ஒரு சுவைக்குக் கூறும் இலக்கணம் எல்லாவற்றிற்கும் பொருந்துவதில்லை. உலகியல் செயல்களுள் நகை, உவகை (காதல்), மருட்கை (வியப்பு) ஆகியவற்றை விளைவிக்கும் செயல்களில் இன்பம் உண்டாதல் போல் அழுகை, இழிவரல், அச்சம் வெகுளி முதலியவற்றினால் உண்டாகும் செயல்களில் இன்பம் உண்டாதல் இல்லை. இதனால் சுவை இலக்கண நூலார் உலகியல் இன்பத்தைச் சுவை என்று கொள்ளாமல் நாடகத்திலாவது காவியத்திலாவது அச்செயல்கள் நிகழும்

போது அவற்றைக் காண்டலும் கேட்டலும் முதலிய வற்றால் உண்டாகும் இன்பத்தையே சுவை (ரசம்) என்று அறுதியிட்டனர். உலகில் ஒருதாய் தன் இளமகன் இறந்ததைக் குறித்து அழுதலைக் கேட்குங்ககால் நமக்குத் துயரம் உண்டாகின்றது. ஆனால் மேக நாதன் இறந்து பட்டபோது மண்டோதரி புலம்புவதாக உள்ள பாடல் களைப் படிக்கும்போது, அல்லது படிக்கக் கேட்கும்போது அளவிலா மகிழ்ச்சி உண்டாகின்றது. அவலத்திலும் இன்பத்தைக் காண்பதால்தான் அப்பாடல்களைப் பன்முறை படித்தும் கேட்டும் இன்புறுகின்றோம் கண்ணீர்ப் பெருக்குடன் அழுது கொண்டே இன்புறுகின்றோம்.

# 3

# சகோதர வாஞ்சை

'உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ்'[1] என்கின்றார் தமிழ் மூதாட்டி ஔவைப் பெருமாட்டி. உடன், வந்தோன் மரித்துவிடில் வாகுவலிபோம்' என்கின்றது நீதி வெண்பா[2] 'தம்பியுடையான் பகையஞ்சான்' என்பது நம் நாட்டுப் பழமொழி,[3] இது கம்பர் பெருமானால் தம் நூலிலும் எடுத்தாளப்பெற்றுள்ளது. இராமாயணம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பல உண்மைகளை மிக நயமாக எடுத்துரைக்கின்றது. கவிதையின் தலைமைப் பண்பு அஃது உணர்த்தும் உண்மையில் தான் உள்ளது. இதனைக் கவிஞன் கூற்றாக அமைக்காமல் பெரும்பாலும் காவிய மாந்தர்களின் வாய்மொழியாகவே வெளியிடுவான். "இவற்றை யெல்லாம் நன்கு உணர்ந்த வடமொழி வாணர்கள் தலைவன் ஏவலாளர்கட்குக் கூறுதல் போன்றவை அறநூல்கள் என்றும், நண்பர்கள் ஒருவர்க் கொருவர் கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும், கணவனுக்கு மனைவி உரைப்பது போன்றவை காவியங்கள் என்றும் ஒருவகைப் பாகுபாடுகள் செய்துள்ளனர்[4]. இத்தகைய உண்மைகளில் ஒன்று

1. நல்வழி – 24.
2. நீதி வெண்பா – 61.
3. யுத்த. இந்திரசித்து வதை – 69.
4. ந. சுப்புரெட்டியார் பாட்டுத்திறன் – பக். 329

சகோதரத்துவம், இதனைக் கம்பன் காவியத்தில் காணலாம். இக்கருத்து மனிதர்கள், வானரங்கள், அரக்கர்கள் வாழ்க்கையில் கண்டு மகிழலாம்.

**மனிதர்கள்:** தசரதனின் மனைவியருள் 'சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற கோசலை' 'மூன்றுலகும் ஈன்றானை' முதல் மகனாகப் பெற்றாள். 'படரெலாம் படைத்தாளும் பழிவளர்க்கும் செவிலியும் இடரிலா முகத்தாளாகிய' கைகேயி பரதனை ஈன்றாள். அறந்தானே என்கின்ற சுமித்திரை 'யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாத' இலக்குமணனையும் சத்துருக்கனையும் பெற்றெடுத்தாள். இந்த நால்வரும் ஒற்றுமையாக இருந்தாலும், பெருமாளும் இளைய பெருமாளும் (இராமலக்குமணர்களும்) 'நெய்குழல் உறும் இழையென' ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் நடையாடிவந்தனர். பரதாழ்வானும் சத்துருக்கனாழ் வானும் ஒரு நொடிப் பொழுதும் ஒருவ்ரைவிட்டு ஒருவர் பிரியாமல் இராமலக்குமணர்போல் கூடி நடை யாடினார்கள்.

முடிசூடு விழா தடைபடுகின்றதை நாம் அறிவோம். இராமன் தாயும் தந்தையுமாகிய கைகேயியின் கோயில் புகுகின்றான். அலுவலகத்தில் Fair Copy (By Order) என்று ஒருவருக்கு வழங்குவது போல,

"ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்டு ஆண்டின வாவென்று
இயம்பினன் அரசன்"[5]

5. அயோத்தி – கைகேயி சூழ்வினை – 107

*என்று 'அரசன் ஆணையை' வழங்குகின்றாள். இதனைக் கேட்கும் இராமனின் முகம் 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது' என்கின்றான் கவிஞன். இராமன் இறுத்த மறுமொழி:*

**மன்னவன் பணியன் றாகின்**
**நும்பணி மறுப்ப னோ ?என்**
**பின்னவன் பெற்ற செல்வம்**
**அடியனேன் பெற்ற தன்றோ ?[6]**

*என்பது. இந்த அடிகளில் 'சகோதர வாஞ்சை' பளிச்செனத் தென்படுகின்றதைக் கண்டு மகிழ்கின்றோம்.*

*பாராள வேண்டியவன் கானாள நேர்ந்ததைக் கேட்ட நகர மக்கள் வருந்தியதைக் கவிஞன் அற்புதமாகக் காட்டுகின்றான். அவர்களுள் சிலர்,*

**ஐயா இளங்கோவே !**
**ஆற்றுதியோ ?[7]**

*என்று கூறுகின்றார்கள். இதில் கொண்டிருந்த* **'சகோதர வாஞ்சை'** *தென்படுகின்றது.*

**இலக்குவனின் சகோதர வாஞ்சை:** *தன் பெரியன்னை தனக்கு ஒருகாலத்தில் அளிக்கப் பெற்ற வரத்தினால் தன் அண்ணனுக்கு வரவேண்டிய அரசினைத் திருப்பிக் கொண்டாள் என்ற செய்தி இலக்குவனுக்கு எட்டுகின்றது. சகோதர வாஞ்சை சினத்தீயாக வடிவெடுக்கின்றது.*

**மூட்டாத காலக் கடைத்தீயென**
**மூண்டு எழுந்தான்[8]**

*என அத்தீயை நமக்குக் காட்டுகின்றான் கவிஞன். கண்களினின்றும் தீப்பொறி தெறிக்கவும், புருவத்தின்*

6. மேற்படி – 110.
7. அயோத். நகர் நீங்கு – 108.
8. மேற்படி – 115.

மயிர்த் தொகுதி நெரிந்து நெற்றியில் ஏறவும், உடம்பினின்று வியர்வை பரவவும், மூச்செனும் கடுங்காற்று வெளியில் தோன்றவும் பெருந்தன்மையையுடைய இலக்குவன் தனது ஆதிசொரூபமாகிய ஆதிசேடனை யொத்திருந்தான். அவன் ஆயிரந்தலை அரவரசு சீறுமாப் போல் சீறினான் என்கின்றான் கவிஞன்.

இலக்குவன் ஆதிசேடனது திருவவதாரம் என்பதை பாலகாண்டத்தில் திருமால் வாக்கால் அறிகின்றோம்[9]. திருவனந்தாழ்வான் திருமாலினிடத்துத் தான் கொண்டுள்ள பெரும்பரிவினால் எப்பொழுதும் வெகுளி தோன்ற நிற்பான் என்பதை திருமழிசைபிரான் வாக்கால் அறியலாம்[10]. அவன் எப்பொழுதும் ஏதோ ஒருவககையில் பணி செய்து கொண்டு பிரியாமல் இருப்பான் என்பதை,

> சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
> நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
> புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
> அணையாம் திருமாற்கு அரவு[11]

என்ற பொய்கையாழ்வார் வாக்கால் தெளியலாம். இத்துடன் இதுநிற்க.

இலக்குவனது வெகுளித்தீ பேச்சாக வெடிக்கின்றது. "சிங்கக் குட்டிக்கு இடுதற்குரிய தீஞ்சுவை ஊனை 'தீட்டாத வேற்கண் சிறுதாய்' இழிவான நாய்க்குட்டிக்கு இடுவது போன்று எண்ணினாளே. நன்று நன்று இது". என்று கைகொட்டிச் சிரிக்கின்றான். மூன்று கவிகளால் இலக்குவனது போர்க் கோலத்தைக் காட்டுகின்றான் கவிஞன்.

9. பாலகா. திருவவதாரம் – 22.
10. நான். திருவந். 10.
11. முதல் திருவந் 53

*இளையாழ்வான் தெருவிற்கே வந்து திரியத் தொடங்குகின்றான். "இராமனுக்கு முடிகவிக்கத் தடை செய்வதற்கு எவர் வந்தாலும் அவரைக் கொன்றுவென்று வெற்றி மகுடத்தை என் தலைவனாக இராமனுக்கு இன்றே சூட்டி மகிழ்வேன்"*

விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர்
நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரும் நிற்கஓர்
மூவ ராகி
மண்ணாட்டுநர் காட்டுநர் வீட்டுநர்
வந்த போதும்
பெண்ணாட்டம் ஒட்டேன் இனிப்பேருல
கத்துள் என்னா[12]

*என்று வீரவாதம் செய்து தெருவில் திரிகின்றான். இங்ஙனம் திரிந்து கொண்டு அண்டகோளம் பிளவுபட்டுத் தகரும்படி எழுப்பிய நாண் ஒலி சுமித்திரையின் கோயிலிலிருந்த இராமனது செவியிற் படுகின்றது.*

*வெகுளித்தீயை அவிக்க அஞ்சன மேகம் வருகின்றது. 'தம்பீ! பொறு பொறு' என்று மழைத்துளிகளை வழங்கி வருகின்றது. இதனை,*

கால்தாக்க நிமிர்ந்து புகைந்து
கனன்று பொங்கும்
ஆறாக் கனல் ஆற்றும்ஓர் அஞ்சன
மேகம் என்ன[13]

*என்று சொல்நயம் பொருள்நயம் புலனாகுமாறு எடுத்துக் காட்டுவான் கவிஞன்.*

12. அயோத்தி – நகர்நீங்கு – 122
13. மேற்படி – 125.

'இறையேனும் முனிந்திலாதாய், சன்னத்தனாகித் தனுவேந்தற்கு ஏது?'' என்று தொடங்கி இருவருக்கும் இடையே நடைபெறும் வாக்குவாதம் பதினான்கு கவிகளால் காட்டப் பெறுகின்றது பாடல்கள் யாவும் படித்து அநுபவிக்கத்தக்கவை. தன் சகோதரவாஞ்சையை, 'சிறந்த தந்தையாவானும் நீயே; ஒப்பற்றதலைவனும் நீயே; பெற்ற தாயாகு வானும் நீயே; எனக்கு வேறு ஒருவரும் இல்லை''[15] என்று கூறிப் புலப்படுத்துகின்றான். பின்னர் சினமும் தணிகின்றது.

இருவரும் சுமித்திரையின் கோயிலை நண்ணு கின்றனர். சுமித்திரையின் உபதேச மொழி இலக்குவனனின் சகோதர வாஞ்சைக்கு முத்தாய்ப்பு வைத்த மாதிரி ஆய்விடு கின்றது. " 'மகனே, இராமன் செல்லும் காடுதான் அயோத்தி; அந்த இராமனே நினக்கு தயரத மன்னன்; பூங்குழள் சீதையே நினது தாய்' என்று கருதியவண்ணம் செல்க; இனி இங்கு நிற்பதும் குற்றமாகும்'' என்று கூறியவள், "இராமனுக்குப் பின் தம்பி என்று கருத இடந்தராமல் அடியானைப்போல் அவன் ஏவுந் தொழிலைச் செய்க. இராமன் மீண்டு அயோத்திக்கு வந்தால் அவனுடன் வருக. அப்படியில்லாமல் போனால் நீ முன்னரே உயிரைத் துறந்துவிடு'' என்று பின்னும் உரைக்கின்றாள்.

கானகத்தில் - கங்கைக் கரையில் இராமன் சீதையுடன் நாணல் படுக்கையில் உறங்கும்போது "வரிவில் ஏந்திக், காலைவாய் அளவும் தம்பி (இலக்குவன்) இமைப்பிலன் காத்து நின்றான்''[16] உறக்கம் கண்ணைச் சுழற்றுகின்றது.

14. மேற்படி – 127–140
15. மேற்படி – 137
16. அயோத்தி – கங்கை 50

துயிலெனும் அணங்கு வந்து
தோன்றலும் அவளை நாமே
எயிலுடை அயோத்தி மூதூர்
எய்துநாள் எய்தும் என்றான்[17]

இலக்குவனனின் இச்செயலை நோக்கும்போது பாரதியின் "கண்ணன்—என் சேவகன்" நினைவிற்கு வருகின்றான்.

பரதனின் சகோதர வாஞ்சை: கேகய நாட்டினின்றும் திரும்பிய பரதனிடம் கைகேயி இராமன் தம்பியுடனும் மனைவியுடனும் கானகம் சென்றதைத் தெரிவிக்கின்றாள், பரதனும் இராமனைத் தந்தையாகவும், தாயாகவும் இறைவனுமாகவும் கொண்டவன்[18]

வாக்கினால் வரந்தரக்
கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப்;
போக்கிப் பார்உனக்கு
ஆக்கினேன்; அவன் அது
பொறுக்க லாமையால்
நீக்கினான் தன்உயிர்
நேமிவேந்து[19]

என்று கூறவும் பரதனுக்கு வெகுளி பொங்கி எழுகின்றது—சகோதர வாஞ்சையின் காரணமாக. நான்கு பாடல்களில் பரதனது வெகுளியின் மெய்ப்பாடுகள் சித்திரிக்கப் பெறுகின்றன[20] பரதன் கைகேயியைத் தாய் என்று உயிரோடு விட்டான். இவளைக் கொன்றால் இராமன் சினங்கொள்வானே என்று கொல்லாது

17. அயோத்தி – கங்கை 51
18. அயோத்தி – பள்ளிபடை – 58
19. மேற்படி – 65
20. மேற்படி – 66–69

கடுஞ்சொற்களால் இடித்துக் கூறினான். சகோதர வாஞ்சை சினத்தைக் கிளப்பி விடுகின்றது. முன்னர் வசிட்டனிடம் "கைகேயி என் மனைவி அல்லள்; பரதனைப் பிள்ளையென்று நினையேன்; அவன் என் ஈமக்கடன் செய்வதற்கும் உரியனல்லன்"[21] என்று கூறியதனால் சத்துருக்கனனைக் கொண்டு இச்சடங்குகளை நிறைவேற்றி வைக்கின்றான்.[22]

இராமனை மீட்டு வருவதற்காகக் கானகம் சென்ற பரதன் வழியில் ஒரு சோலையில் தங்கியபோது கண்ணீராகிய அருவியில் நீராடுவதும்; காய், கனி, கிழங்குகளை உண்பதும்; இராமன் தங்கியிருந்த புழுதியில் அமைந்த புல்லணையில் தங்கியிருப்பதுமான செயல்கள் சகோதரவாஞ்சைக்குச் சான்றுகளாக அமைகின்றன. அங்கிருந்து இராமன் சென்றதுபோல் காலினாலேயே நடந்து செல்கின்றான்.

சேனையோடு வரும் பரதனைத் தொலைவில் காணும் குகன் அவன்மீது ஐயுறுகின்றான். சுமந்திரன் மூலம் குகனைப்பற்றிக் கேட்டதும் அவனைச் சந்திப்பதற்குப் பரதன் தம்பியுடன் தனியே வருகின்றான். தொலைவி லிருந்த பரதனை எயினர்கோன் காண்கின்றான். பரதனது தவவேடத்தைக் கண்டு துணுக்குறுகின்றான்.

வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்.[23]

21. அயோத்தி – பள்ளிபடை – 132
22. மேற்படி – 139
23. அயோத்தி – குகப்படலம் – 29.

*வந்து கொண்டிருந்த பரதன் தொலைவிலுள்ளபோது அவனது கல்லாடை கண்ணுக்குப் புலனாகின்றது. இன்னும் சற்று நெருங்கி வரும்போது அவனுடைய மாசடைந்த உடல் தென்படுகின்றது, மேலும் நெருங்கும்போது, நகையிழந்த முகம் கண்ணுக்குப் புலனாகின்றது. இன்னும் சற்று நெருங்கும்போது அவன் படும் துயரம் முகத்தில் பளிச்சிடுகின்றது. இங்ஙனம் பரதனது முழுவடிவத்தையும் கண்டதும் போர்க் கோலத்திலிருந்த குகனின் கையிலிருந்த வில் நழுவிக் கீழே விழுகின்றது; மனம் கலங்கி செயலற்று நிற்கின்றான்.*

*இப்பாடலை அநுபவிக்கும் நமக்கு இதே காட்சியை நல்கும் முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்று நினைவிற்கு வருகின்றது.*

**கொடிபாடித் தேர்பாடிக்**
**கொய்தண்டார் மாறன்**
**முடிபாடி முத்தாரம்**
**பாடித் தொடிஉலக்கை**
**கைம்மனையில் ஒச்சப்**
**பெறுவெனோ ? யானும்ஓர்**
**அம்மனைக் காவல்**
**உளேன்[24].**

*என்பது. இச்செறிப்பால் அல்லலுறும் பெண் ஒருத்தியின் கூற்றாக வருவது. பாண்டியனைக் காதலுறும் இவள் அவன் மீது உலக்கைப்பாட்டு பாட விழைகின்றாள். கற்பனையில் பாண்டியன் தேரில் வருவதைக் காண்கின்றாள். தொலைவில் வரும் தேரின் கொடியை முதலில் காண்கின்றாள். தேர் நெருங்கி வரும்போது தேர் கண்ணுக்குப் புலனாகின்றது. மேலும் அது நெருங்கும்*

24. முத்தொள்ளாயிரம் – 93 (டிகே.சி. பதிப்பு)

போது தேரில் வீற்றிருக்கும் பாண்டியனின் கிரீடம் கண்ணுக்குத் தட்டுப் படுகின்றது.

குகன்—பரதன் சந்திப்பு நடைபெறுகின்றது.

வந்தெதிரே தொழுதானை
 வணங்கினான்; மலரிருந்த
அந்தணனும் தலைவணங்கும்
 அவனும்அவன் அடிவீழ்ந்தான்;
தந்தையினும் களிகூரத்
 தழுவினான்; தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
 வீற்றிருக்கும் சீர்த்தியான்[25]

இதனை அற்புதமாகக் காட்டுகின்றான் கவிஞன். 'மலர் இருந்த அந்தணனும் (பிரமனும்)தனை வணங்கும் அவன்' என்பது பரதனைக் குறிப்பிடுகின்றது. 'தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்' என்பது குகனைக் குறிப்பிடுகின்றது. குகன் வேடர்குலத்தவன்; வள்ளி பிறந்த குலத்தவன். 'குகன்' என்ற பெயர் முருகனுக்கு உரியது. சைவப் பெயரைத் தாங்கியுள்ள வேடன் இராமபக்தனாக — சிறந்த பாகவதனாக — கருதப் பெறுவது நமக்குப் பெருமகிழ்ச்சியூட்டுகின்றது.

குகப் பெருமான் பரதாழ்வானை வந்த செய்திபற்றி வினவ,

முழுதுல களித்த தந்தை
 முந்தையோர் முறையினின்றும்
வழுவினன்; அதனை நீக்க
 மன்னனைக் கொணர்வான்[26]

25. அயோத்தி – குகப் – 32.
26. மேற்படி – 33

வந்ததாகப் பதிலிறுக்கின்றான். இதனைச் செவிமடுத்த வேடர்கோன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தவனாகி மீண்டும் ஒருமுறை பரதன் திருவடியில் வீழ்ந்து வணங்கி,

**தாயுரை கொண்டு தாதை**
**உதவிய தரணி தன்னைத்**
**தீவினை என்ன நீத்துச்**
**சிந்தனை முகத்தில் தேக்கிப்**
**போயினை என்ற போழ்து**
**புகழினோய் ! தன்மை கண்டால்**
**ஆயிரம் இராமர் நின்கேழ்**
**ஆவரோ தெரிவின் அம்மா !**[27]

என்று பரதனைப் புகழ்ந்து 'ஆயிரம் இராமர்கள் பரதனுக்கு ஒப்பாவரோ?' என்று மதிப்பிடுகின்றான். மேலும், "கதிரவன் ஏனைய சந்திரன் முதலிய ஒளிகளை அடக்குமாப் போலே, புகழ்ப் பெருமையைப் பெற்ற உங்கள் குலத்தோரது புகழ்களையெல்லாம் உன்புகழுக்குள் அடக்கிக் கொண்டாய்" என்று புகழ்கின்றான். இதனால் பரதனது சகோதர வாஞ்சை மேலும் சிறப்புறுகின்றது.

வசிட்டன், தேவர்கள் முதலியோர் அறவுரைப்படி பரதன் பதினான்கு ஆண்டுகள் நந்தியம்பதியிலிருந்து கொண்டு அரசாளவும் அந்தக் காலம் கழிந்தவுடன் இராமன் திரும்பாவிடில் தான் தீயில் புகுந்து இறப்பதாகவும் கூறி அவனது திருவடி நிலைகளைப் பெற்றுத் திரும்புகின்றான் பரதன்.

பதினான்கு ஆண்டுகள் கழிந்தும் இராமன் வராததால் பரதன் சத்துருக்கனனைத் தீயமைக்கும்படி கட்டளையிடுகின்றான். இதனை அறிந்த (கோசலை),

27. அயோத்தி – குகப் – 35.

ஒப்பெழுத ஒண்ணாத கற்புடையாள்
வயிறுபுடைத்து அலமந்து ஏங்கி
இப்பொழுதே உலகிறக்கும் யாக்கையினை
முடித்தொழிந்தான் மகனே என்னா
வெப்பெழுதி னாலன்ன மெலிவுடையாள்[28]

என்று ஓடி வந்ததாகக் கவிஞன் காட்டுவான். பரதன் திடுக்கிட்டு அவளது பாதங்களை வணங்கினான்; அவளும் பரதனைத் தழுவிப் பிடித்துக் கொண்டு பேசுகின்றாள். தீயில் விழாது தடுத்துக் கூறுதலை ஏழு கவிகளால் தெரிவிக் கின்றான் கவிஞன்.[29] அவற்றில் ஒன்று:

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கருகு ஆவரோ
புண்ணி யம்எனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ ? (232)

என்பது. "இராமன் ஒருவனேயன்றி பல கோடி இராமர்கள் கூடினாலும் பரதனது அன்புக்கு ஒத்தவர் ஆவரோ? ஆகார்" என்கின்றாள். கோசலையின் உரைகல்லில் பரதனது மாற்று உரைத்துக் காட்டப்பெறுகிறது. மேலே காட்டப் பெற்ற குகப் பெருமானது மதிப்பீடு இதனுடன் ஒப்புநோக்கத் தக்கது.

**சத்துருக்கனனின் சகோதர வாஞ்சை:** இதுகாறும் இலக்குவன், பரதன் இவர்களின் சகோதர வாஞ்சையைக் கண்டோம். இனி சத்துருக்கனனின் சகோதர வாஞ்சையைக் காண்போம். இராமகாதையில் அதிகம் பேசாத கதை மாந்தன் இவன். அப்படிப் பேசினால் 'அட்சர லட்சம்' (ஓர் எழுத்து இலட்சம்) பெறுவது போல் பேசுவான்.

இராமனைத் திரும்பவும் காட்டிலிருந்து நாட்டுக்கு இட்டுவர சேனையுடன் பரதன் காட்டுக்குப் புறப்படும்

28. யுத்த – மீட்சி – 226.
29. யுத்த – மீட்சி – 229–235.

ஏற்பாடு நடைபெறுகின்றது. பரதனும் சத்துருக்கனனும் சேனையுடன் செல்லத் தொடங்குகின்றனர். அவர்கள் நகர வாசலை அடையும்போது மந்தரை தென்படுகின்றாள். சத்துருக்கனன் மனம் கொதித்து அவளைப் பற்றி விண்ணில் செலுத்திக் கொல்ல நினைக்கையில் அவனைத் தடுத்து நிறுத்துகின்றான் பரதாழ்வான்[30]

பதினான்கு ஆண்டுகள் கழிந்து இராமன் பரத்துவாசர் ஆசிரமத்திலிருந்து கொண்டு தன் வருகையை அநுமன்மூலம் சொல்லி அனுப்புகின்றான். குறிப்பிட்ட நாளில் அநுமன் திரும்பி வராததால் பரதன் தான் சூளுரைத்தவாறு எரியுள் புகுந்து உயிர்விட ஆயத்தமாகின்றான்; தன் தம்பி சத்துருக்கனனை வரவழைத்து அவனை இறுகப் புல்லிக் கொண்டு,

> **சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்**
> **மன்ன தீயிடை யான்இனி வீடுவன்;**
> **மன்னன் ஆதிஎன் சொல்லை மறாது**[31]

என்று வேண்டும் காட்சியைக் காண்கின்றோம். இச்செய்தியைச் செவிமடுக்கும் சத்துருக்கனன் வருந்தித் தாபங் கொள்ளுகின்றான்; அச்செய்தி தன் காதில் விழக்கூடாது என்று செவிகளைப் பொத்திக் கொள்ளுகின்றான். நஞ்சையுண்டவன் போலாகின்றான்; பிறகு சோர்ந்து விழுந்து விடுகின்றான். பிறகு எழுந்து பரதனை நோக்கி,

> **நான் உனக்கு என்ன**
> **பிழைத்துளேன் ?**[32]

என்று வினவுகின்றான். இதனை அடுத்து அவன் பேசும் சொற்கள் நெஞ்சையும் நெக்குருக்கவல்லனவாய் உள்ளன.

30. அயோத்தி – ஆறு செல் – 54
31. யுத்த – மீட்சி –220
32. மேற்படி – 221

என்றுமே அதிகம் பேசாத சத்துருக்கனன் பேசும்போது அவனிடம் உணர்ச்சி வெள்ளம் பொங்கிவழிவதைக் காண்கின்றோம். உணர்ச்சிப் பெருக்கிலும் கோபத்திலும் நேர்மையிலும் எள்ளளவும் இலக்குவனுக்குக் குறைந்தவன் அல்லன் சத்துருக்கனன் என்பதைக் காண்கின்றோம். தியாகச் சுடரான சுபத்திரை பெற்றெடுத்த இரண்டு மணிகளும் ஒப்பற்றவர்களாகத் திகழ்வதைப் பார்க்கின்றோம். பேசுகின்றான் கடைக்குட்டி:

> கானாள நிலமகளைக் கைவிட்டுப்
> போனானைக் காத்துப் பின்பு
> போனானும் ஒருதம்பி; போனவர்கள்
> வரும்அவதி போயிற்று என்று
> ஆனாத உயிர்விடஎன்று அமைவானும்
> ஒருதம்பி; அயலே காணாது
> யானாம்இவ் அரசாள்வென்; என்னேஇவ்
> அரசாட்சி இனிதே அம்மா ?[33]

தனக்கு நேர்ந்த கொடுமையினை வியக்கின்றான். தான் மட்டிலும் நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான்-தன்' குடிவழியில் வரவில்லையா? என்று அவன் மனம் துடித்து நிற்கின்றது. நான்கு சகோதரர்களும் ஒருவருவருக்கொருவர் சகோதர வாஞ்சையில் தாழ்ந்தவர்கள் அல்லர் என்ற உண்மையினைச் சத்துருக்கனனும் நினைவுகூர்கின்றான்.

வேறு மூன்று சகோதரர்கள்: வேடர் குலத்தில் குகனும், வானரர்குலத்தில் சுக்கிரீவனும், இராமனுக்குச் சகோதரர்களாக அமைகின்றனர். இதனைச் சந்தர்ப்பங் களுடன் காட்டுவேன்.

இராமன் கங்கைக் கரையிலிருந்தபோது குகன் இராமனைத் தொடர்வதாகக் கூற, அவனை சமாதானப்

33. யுத்த – மீட்சி –223

*படுத்தி அங்கேயே இருக்குமாறு வற்புறுத்துவதை நான்கு பாடல்களால் விளக்குகின்றான் கவிஞன்.*[34] *அவற்றில் ஒன்று:*

துன்புளது எனின்அன்றோ
சுகமுளது அதுவன்றிப்
பின்புளது இடைமன்னும்
பிரிவிளது எனஉள்ளேல்
முன்புளெம் ஒருநால்வேம்
முடிவுளது எனஉன்னா
அன்புள இனிநாமோர்
ஐவர்கள் உளராணோம்.[35]

*"உன்னைக் காண்பதற்கு முன்பு நாங்கள் நான்கு பேர் சகோதரர்கள். உன்னைக் கண்டபிறகு நாம் ஐந்து சகோதரர்களாய் விட்டோம் என்று கருதுவாய்" என்று கூறுவான். இராமனது இந்தப் பரந்த நோக்கத்தை எண்ணிய திருமங்கையாழ்வார் அந்த அருங்குணத்தில் ஆழங்கால் பட்டு,*

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
மாழை மாண்பட நோக்கியுன், தோழி;
உம்பி எம்பி'என்று ஒழிந்திலை உகந்து,
'தோழன் நீஎனக்கு இங்குஒழி' என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ண !நின் அடியிணை அடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே ![36]

*என்று திருவரங்கத்துப் பெருமானை இராமனாக நினைந்து மங்களாசாசனம் செய்து மகிழ்கின்றார்.*

34. அயோத்தி – கங்கைப் – 73–76.
35. மேற்படி – 74.
36. பெரி. திரு. 5.8:1

*பரதன் முதலியோர் குகனொடு படகில் செல்லும் போது ஒருவருக்கொருவர் அறிமுகம் நடைபெறுகின்றது. குகன் கோசலையின் அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுகின்றான். 'கன்றுபிரி காராவின் துயருடைய' கோசலை குகனை யார்? என்று வினவ, பரதன்*

'இன்துணைவன் இராகவனுக்கு இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும் மூத்தான
குன்றனைய திருநெடுந்தோள் குகன்
இந்நின்ற குரிசில் என்பான்[37]

*என்று குகனை அறிமுகப்படுத்துகின்றான். உடனே தாயுள்ளம் குகனையும் தன்மகனாக ஏற்றுக்கொண்டு,*

நைவீர்அலீர் மைந்தீர் இனித்துயரால்
நாடுஇறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்று
ஆமன்றே விலங்கல் திண்டோள்
கைவீரக் களிரனைய காளைஇவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர்[38]

*என்று வாழ்த்துகின்றது. இக்கூற்றில் தாய்ப் பாசமும் சகோதர வாஞ்சையும் பின்னிக் கிடப்பதைக் காண்கின்றோம்.*

*சுக்கிரீவன் இராமனைச் சரணம் புகுகின்றான். இராமனும் அவனுக்கு அபயம் அளிக்கின்றான்.*

உன்றனக் குரிய இன்ப
துன்பங்க ளுள்ள முன்னாள்

37. அயோத்தி – குகப். 66
38. மேற்படி – 67

சென்றன போக மேல்வந்
துருவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கு நிற்கும்
நேர்[39]

*என்றும்,*

மற்றினை உரைப்ப தென்னே
வானிடை மண்ணில் நின்னை
செற்றனர் நின்னைச் செற்றார்
தீயரே எனினும் நின்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்
உன்கிளை எனதுஎன் காதல்
சுற்றம்உன் சுற்றம் நீஎன்
இன்னுயிர்த் துணைவன்[40]

*என்கின்றான். "நீ என் சகோதரன்" என்று சொன்னதற்கு நேரான பாடல் இல்லை. வீடணன்தன் சகோதரன் என்று சொன்னபோது இக்குறிப்பு வருகின்றது.*

*இராமன் சுக்கிரீவனைக் கொண்டு வீடணனை அழைத்து வருமாறு சொல்ல, அவனும் அவ்வாறே அழைத்து வருகின்றான்: எட்டு உறுப்பும் படியச் சக்கரவர்த்தித் திருமகனின் திருத்தாள்களில் வீழ்ந்து வணங்குகின்றான். எழுந்திருக்குமாறு செய்து "மலர்க் கையால் இருக்கை ஈந்தான்". பின்னர்,*

ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந்து உவகை சார்ந்தே
ஏழினோடு ஏழாய் நின்ற
உலகும்என் பெயரும் எந்நாள்

39. கிட்கிந்தை – நட்புக்கோள் – 26
40. மேற்படி – 27

வாழுநாள் அன்று காறும்
வாளெயிற்று அரக்கர் வைகும்
ஏழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் என்றான்[41]

இதனை உழிஞைத் திணைக்குத் துறை கூறும் தொல்காப்பியச் சூத்திரத்தில்[42] "கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்" என்ற துறைக்கு அதாவது, 'பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான்போல வேண்டியோர்க்குக் கொடுத்தல்' என்பதற்கு இதனை எடுத்துக்காட்டாகக் கூறுவர் நச்சினார்க்கினியர். 'இராமன் இலங்கை கொள்வதன்முன் வீடணனுக்குக் கொடுத்த துறையும் அது' என்பது அவர் கூற்று.

அடுத்து இராமன் தம்பியை நோக்கி வீடணனுக்கு "சூட்டுதி மகுடம் என்றான்"[43] அதற்கு வீடணன்,

களவியல் அரக்கன் பின்னே
தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி
என்னையும் கவித்தி என்றான்"[44]

பின்னர் இராமன் வீடணனைத் தம்பியாக ஏற்றுக் கொள்ளுகின்றான்.

குகனொடும் ஐவ ரானேம்;
முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவ ரானேம்;
எம்முழை அன்பின் வந்த

41. யுத்த. வீடணன் அடைக். 142.
42. தொல். பொருள். புறத் – 12 (நச்)
43. யுத்த. வீடணன் அடைக் – 144
44. மேற்படி – 145

அகனமர் காதல் ஐய !
நின்னொடும் எழுவ ரானோம்
புகலருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் உந்தை.[45]

தான் தம்பியாக வீடணனை அங்கீகரித்தமையை வற்புறுத்த தசரதனை 'எந்தை' என்னாது 'உந்தை' என்கின்றான் இராமன்.

**வானரர்கள்:** இவர்களில் வாலி, சுக்கிரீவன் என்னும் இருவர் சகோதரர்கள். இவர்கள் பிறப்பு பற்றி ஒரு சொல். ஒருமுறை நான்முகன் யோகத்திலிருந்தனன். அவன் கண்ணிலிருந்து ஒரு துளி நீர் பூமியில் விழுந்தது. அத்துளி ஓர் ஆண் குரங்காய் மாறியது. அது வனமெங்கும் சுற்றித் திரிந்து பார்வதியார் வனத்திலிருந்த ஒருதடாகத்தில் மூழ்கி ஓர் அழகான பெண் குரங்காக மாறியது. இவளை இந்திரன் புணர்ந்து வாலியையும், சூரியன் புணர்ந்து சுக்கிரீவனையும் பெற்றனர். வாலிக்கு இந்திரன் பிறர் இவனுடன் போர் செய்யின் அவர் பலத்தில் பாதி வரும் என்று ஆசி கூறினான். பெண் குரங்கு நான்முகன் அருளால் மீண்டும் ஆணுரு அடைந்து வாலிக்குப் பட்டம் கட்டியதாக வரலாறு. வாலியும் சுக்கிரீவனும் சகோதரர்கள் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டுகளாவர்.

வாலியுடன் மாயாவி என்னும் ஓர் அசுரன் போர் செய்து ஆற்றாமல் ஒரு பிலத்துள் நுழைந்தனன். வாலி தன் இளவலைப் பிலத் துவாரவாயிலில் காவல் வைத்து விட்டு அசுரனைப் பின் தொடர்ந்தனன். இருபத்தெட்டு மாதங்கள் வரை போர்புரிந்து அசுரனைக் கொன்றனன். பிலவாயிலில் காத்திருந்த தம்பி நெடுநாள் ஆனமையால் தமையனை அசுரன் கொன்றிருக்கக் கூடும் என எண்ணிப் பிலவாயிலை அடைத்து வானரங்களின் வேண்டுகோளுக்கிணங்கி

45. மேற்படி – 146

அரசாண்டு கொண்டிருந்தனன். அசுரனைக் கொன்று திரும்பிய வாலி தம்பியை ஐயுற்று, அவன் என்ன சமாதானம் சொல்லியும் கேளாமல் அவனை அடித்துத் துரத்தினன். அவன் மதங்கர் மலையில் வாழ்ந்து வரலாயினன். சுக்கிரீவன் மனைவி உருமை என்பாளையும் கவர்ந்து கொண்டனன். தமையன் மனைவியைத் தாயாகவும், தம்பியின் மனைவியைத் தங்கையாகவும், கொள்ள வேண்டிய பண்பாட்டையும் குலைத்தான் வாலி.

தொடக்கக் காலத்தில் வாலி சுக்கிரீவன் உறவு சரியில்லை என்றாலும் வாலி இறக்கும் தறுவாயில் சகோதரர் உறவு சரியாகிவிட்டது. 'வெற்றரசு எய்தி எம்பி வீட்டரசு எனக்கு விட்டான்' என்று சுக்கிரீவன் சொன்னபோதே வாலிக்குச் சுக்கிரீவனிடமிருந்த பகை மாறியமை புலனாகிவிட்டது. இராமனிடம் வாலி இரண்டு வரங்கள் பெறுகின்றான்:

ஒன்று:

"பூவியல் நறவம் மாந்தி
புந்திவேறு உற்ற போது
தீவினை இயற்று மேனும்
எம்பிமேல் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும்
கூற்றினை ஏவல்"[46]

என்பது. மற்றொன்று:

"எம்பியை உம்பி மார்கள்
தம்முனைக் கொல்வித்தான் என்று
இகழ்வரேல் தடுத்தி'[47]

என்பது.

46. கிட்கிந்தை – வாலி வதை – 127
47. மேற்படி

இவற்றால் வானர சகோதரர்களின் சகோதர வாஞ்சை எடுத்துக் காட்டப் பெற்றது. இத்தகைய நிலையை இந்த உலகில் சாதாரண அன்றாட நிகழ்ச்சிகளாக நடைபெற்று வருவதை நாம் நேரில் காண்கின்றோம்.

**அரக்கர்கள்:** விசித்திர வசு முனிவர்க்கும் கேகசி என்பாளுக்கும் பிறந்தவர்கள் மூவர். இராவணன் மூத்தவன்; பத்துத் தலைகளையுடையவன். கும்பகருணன் அடுத்த தம்பி. வீடணன் கடைக்குட்டி. இராவணன் பஞ்சாக்கினி நடுவிலிருந்து நான்முகனை நோக்கி பத்தாயிரம் ஆண்டுகள் தவம் செய்தனன். ஆயிரம் ஆண்டு முடிந்தபின் தலைகளில் ஒன்றைத் திருகி தீயில் விடுவன். பத்தாம் தலையைத் திருகுகையில் நான்முகன் அவன்முன் தோன்றி தேவர், விஞ்சையர் அவுணர், சித்தர், உரகர் முதலியவர்களால் இறப்பிலாததும் போரில் அற்ற சிரங்களும் கரங்களும் மீண்டும் வளரவும் வரம் தந்தனன். இவன் இராசச குணத்திற்கு எடுத்துக்காட்டு.

கும்பகருணன் நான்முகனை நோக்கி 'நித்தியத்துவம்' பெற வேண்டித் தவம் செய்தனன். தேவர்கள் அவனால் தமக்கு நேரும் துன்பத்தை நினைந்து நாமகளைத் துதித்து அவன் வாய்தவறி 'நித்திரைத்துவம்' வரம் பெறுமாறு செய்தனர். தமோகுணத்தையுடையவனாயினும் நேர்மை யானவன். சீதையை விட்டுவிடுமாறு தமையனுக்கு அறம் உரைத்தவன். அவன் கேளாமையால் இராமனுடன் போர் புரியவந்தவன். இராமனுடன் வந்து சேருமாறு கேட்க வந்த வீடணனுக்கு நீதி கூறி இராமனிடமே திருப்பி யனுப்பியவன். சிவபெருமானிடம் பெற்ற கவசத்தையும் சூலத்தையும் உடைய இவன் இராமனுடன் கடுமையாகப் போர் புரிந்து இராமனது கணையால் கைகள், கால்கள் அறுப்புண்டு இராமபிரானைத் தன் தம்பியைக் காக்கவும் தன் தலை கருங்கடல் நடுவில் வீழவும் வேண்டிக் கொண்டு

மடிந்தவன். திருமணம் ஆகாதவன். இவன்தாமச குணத்திற்கு எடுத்துக்காட்டு.

வீடணனும் நான் முகனை நோக்கித் தவம் புரிந்து அறஉணர்வு நீங்காதிருக்க வரம் பெற்றவன். சீதாப் பிராட்டியைச் சிறைகொண்டது தவறு என்று தமையனுக்கு அறம் உரைத்தவன். தூதனாக வந்த அநுமனை இராவணன் கொல்லலாகாது என்று அறம் உரைத்துத் தடுத்தவன். இராமனிடம் அடைக்கலம் புகுந்தவன். இலக்குவனால் இலங்காதிபதி என முடி சூட்டப்பெற்றவன். இராம-இராவணப் போரில் பல்வேறு வகையில் உதவியவன். இறந்த இராவணன் பொருட்டு வருத்தமடைந்து அவனுக்கு ஈமக்கடன் செய்து முடித்தவன். இவன் சத்துவ குணத்திற்கு எடுத்துக்காட்டு.

முக்குணங்களும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை. அங்ஙனமே இம்மூவர்களிடமும் சகோதர வாஞ்சை அதிகமாகக் காணப்பெறவில்லை. உலகில் நாம் பல நிலைகளைக் காண்கின்றோம். அவற்றை யொட்டியே இந் நிலையும். ஆனால் கும்பகருணன் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என்பதை எடுத்துக்காட்டத் தவறவில்லை.

முதற்போரில் இராவணன் தோற்றுவிடுகின்றான்.

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலங்கை புக்கான்[48]

48. யுத்த. கும்பகருணன் வதை – 1

மந்திரச் சுற்றத் தாரும்
வாணுதல் சுற்றத்தாரும்
தந்திரச் சுற்றத் தாரும்
தனக்கிளை சுற்றத் தாரும்
எந்திரப் பொறியி னிற்ப
யாவரும் இன்றித் தானோ
சிந்துரக் களிறு கூடம்
புக்கெனக் கோயில் சேர்ந்தான்[49]

*இஃது இராவணது நிலை. மகோதரனின் யோசனைப்படி கும்பகருணனைப் போருக்கு அனுப்ப எண்ணுகின்றான் இராவணன். கும்பகருணனோ சகோதர வாஞ்சையால் சீதையைக் கொண்டு விட்டுவிடுமாறு பணிக்கின்றான்[50] தன் அறவுரை செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோல் பயன்படாததால் போருக்குப் போய்விடுகின்றான்.*

*சகோதர வாஞ்சையால் விடணன்,*

எந்தைநீ யாயும்நீ எம்முன் நீதவ
வந்தனைத் தெய்வம்நீ மற்றும் முற்றுமநீ
இந்திரப் பெரும்பதம் இழக்கின் றாய்என
நொந்தனன் ஆதலின் நுவல்வ தாயினேன்[51]

*என்று தொடங்கி பிராட்டியை விட்டு விடுமாறு அறவுரை கூறுகின்றான்[52]. இரணியனின் கதையையும் கூறித் தெருட்டுகின்றான்[53], பயன் இல்லை. சினத்துடன்,*

பழியினை உணர்ந்துயான் படுக்கி லேன்உனை
ஒழிகிலை புகலுதல் ஒல்லை நீங்குதி
விழிஎதிர் நிற்றியேல் விளிதி என்றனன்.[54]

49. யுத்த. கும்பகருணன் வதை – 5
50. மேற்படி 79–89; மேலும் யுத்த. மந்திரப் படலம் 48–57
51. யுத்த. இராவணன் மந்திரப் – 73
52. மேற்படி – 75–99
53. யுத்த. இரணியன் வதை காண்க.
54. யுத்த. வீடணன் அடைக் – 9.

என்று கூறவும் இராவணனை விட்டு நீங்கினான்.

எத்துணை வகையினும் உறுதி எய்தின
ஒத்தன உணர்த்தினேன் உணர கிற்றிலை
அத்த !என் பிழைபொறுத்து அருளு வாய்என
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்.[55]

இவன் சகோதர வாஞ்சையைத் துறந்து நீதிவழி நிற்றலைக் காண்கின்றோம்.

மரணம் பகையை மறக்கச் செய்யும் என் உண்மையை வீடணனிடத்தும் காணலாம். இவ்விடத்தில் வான்மீகி பகவான் "பகைமைகள் மரணத்தை முடிவாக உடையன" என்று கூறியுள்ளதைச் சிந்திக்கலாம். வீடணனை நோக்கி, "வீடணா, இறந்தவன்மீது வயிரங் கொண்டு வாளா இருத்தல் தக்கதன்று. ஈமக் கடன்களைச் செய்யத் துணிவாய்" என்று இராமன் கட்டளையிட வீடணனும் "வீழ்ந்தனன் அவன்மேல் வீழ்ந்த மலையின் மேல் மலை வீழ்ந்தென்ன"![56] பின்னர் புலம்பத் தொடங்குகின்றான். ஏழு கவிகளில்[57]

"அளவிடுதற்குரிய வல்லமையையுடைய அண்ணா வோ! அண்ணாவோ! அசுரர்கட்குப் பிரளயம் போன்றவனே! அமரர்கட்கு எமனே! எந்த நஞ்சும் உட்கொள்ளாமல் உயிரைக் கொள்ளமாட்டாது. அதற்கு மாறாக சானகி என்ற பெருநஞ்சு கண்ணால் நோக்கிய மாத்திரத்தில் உன் உயிரைப் போக்கிவிட்டதே! வீரர்கட்கெல்லாம் வீரனான நீயும் சாதாரண மனிதனைப் போல உயிரொழிந்து கிடக்கின்றாயே! உன்னை அண்ணன் என்று கருதாமல் விட்டுச் சென்ற, என்னுடைய ஆராய்ந்து

55. மேற்படி – 13.
56. யுத்த. இராவணன் வதை – 218.
57. மேற்படி – 220–226.

*கூறிய சொல்லை இன்று இப்பொழுது தான் எண்ணப் போகின்றாயோ?" (220)*

*"திசையானைகள் நிலை பெயர்ந்து ஓடுமாறு செய்தவனே! 'ஆராய்ச்சி யின்றி ஒருவன் உயிர்போல் விருப்பிற்குரிய உயர்குடிப் பிறந்த பெண்மீது கொண்ட காதல் நிரந்தரப் பழியை விளைவிக்கும் என்று கூறினேன். அப்போது என்மீது நீ கொண்டசினம் தணிந்து இப்போது அந்த உண்மையை அறிந்தாயோ? போரிலே விருப்பங் கொண்டு எழுந்த அரக்கரின் குலம் முழுவதும் இறக்கவும் மேன்மேல் வளர்கின்ற பேராசை நீங்கியதோ?" (221)*

*"குன்றை யொத்த நெடிய தோளையுடையவனே! 'அக்காலத்து எரியில் நுழைந்த வேதவதி என்பவளே உலகுக் கெல்லாம் ஒப்பற்ற தாயான இவள்காண்!' என்று கூறினேன். அதனை மனத்தில் கொள்ளமாட்டா தவனானாய். உன்னுடைய குலமெல்லாம் போரில் இறந்து விழுதலைக் கண்டும் இராமபிரானிடம் உறவு பூண்டு ஒற்றுமையாயிராமல் இறந்திட்டாயே! இராகவனது புயவலியை இன்று நேரே கண்டறிந்து உயிர்நீங்கினாயே" (222).*

*"நான்முகனும் சிவபெருமானும் தந்தருளிய வரங்கள் பத்து முடிகளோடும் பொடியாகி உதிர்ந்து போயின. நீ பிராட்டியைக் கவர்ந்த அன்று இராமனைப் பற்றி அறியவில்லையாயினும் வானாட்டை அணுகி நின்ற இன்றாவது உணர்ந்தனையோ இராமனார் யாவர்க்கும் தலைவராதலை?" (223).*

*"அருமை அண்ணனே, நீ வீரர்செல்லும் நாட்டை அடைந்தாயோ? நான்முகன் நாட்டை நணுகினாயோ? பிறை சூடும் பெருமானின் நாட்டை அடைந்தாயோ? காலனும் கண்டு அஞ்சுகின்ற உன் உயிரை அஞ்சாமல் கொண்டு அகன்றவர் யார்? அஃதெல்லாம் இருக்கட்டும்;*

மன்மதனார் தம்முடைய வலிமையின் நாட்டத்தை இப்போதாவது தவிர்ந்தாரா? இதுகாறும் உன்னை வெதும்பி வந்த மதியம் என்பான் குளிர்ந்தானா?" (224)

"கொல்லுதற்கரிய மைத்துனனை நீ கொன்றாய் என்று கொடுஞ்செயலைச் சூழ்ச்சி செய்து கொண்டு கொடிய பாவியாகிய நம் மருந்தனைய தங்கை சூர்ப்பணகை பழியைத் தீர்த்துக் கொண்டாளோ? 'அண்ணா, நரகத்தார் துறக்கத்தார் ஆகிய தீயாரும் நல்லாரும் என்ற எல்லோரும் நம்மோடு பகைவரானார்களே. ஆகையால் இப்போது யார் முகத்தில் விழிக்கப் போகின்றாய்?" (225).

"வெற்றித் திருமகளையும் கலைமகளையும் புகழ்மகளையும் தழுவிய கையானது. பொறாமை மிக, சிறப்புப் பொருந்திய மகளான திருமகளும் தெய்வத்தன்மை கொண்ட கற்பினாற் புகழ்பெற்றவளான பிராட்டியைத் தழுவுவதற்கு விரும்பி அதனால் உயிரைக் கொடுத்துப் பழியை மேற்கொண்ட காமப் பித்தனே! திசையானைகளின் கொம்புகளை முறித்த பருத்த மார்பினால் இப்போது மண்மகளைத் தழுவினாயோ?" (226)

இவ்வாறு வீடணன் புலம்பும்போது நீதிக்காக துறந்த அவனது சகோதர வாஞ்சை மீண்டும் புதுப்பிக்கப் பெறுவதை அறிகின்றோம்.

**இந்திரஜித்தனின் சகோதரவாஞ்சை:** பிராட்டியைத் தேடிச் சென்ற அநுமனால் கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்சசேனாதிபதிகள் ஆகியோர் ஒருவர் பின்னர் ஒருவராக அழிக்கப் பெறுகினர். அடுத்து, அட்சய குமரனும் (மண்டோதரியின் பிள்ளை, இந்திரசித்தனுக்கு அடுத்த தம்பி) ஒழிகின்றான். இந்திரசித்தனின் நிலை,

**தம்பியை உன்னும் தோறும்**
**தாரைநீர் ததும்பும் கண்ணான்**

வம்பியல் சிலையை நோக்கி
வாய்மடித்து உருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக்
குரங்கினால் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை
புகழன்றோ தேய்ந்தது என்றான் ![58]

*என்பது மனம் வெம்பிப் பேசும் பேச்சு. ஒரு குரங்கின் ஆற்றலைச் சரிவர அளவிடாது,*

சிங்கரர் சம்பு மாலி
கேடிலா ஐவர் என்றுஇப்
பைங்காழல் அரக்க ரோம்
உடன்சென்ற பகுதிச் சேனை[59]

*ஆகிய அனைவரையும் "கொன்றனை நீயே யன்றோ?" என்று தந்தையைக் குறை கூறுகின்றான். அடுத்து, போர்க் களத்தில் 'தேய்க்கப்பட்ட தன் தம்பியின் உடலை'ப் பிணக்குவியலிடையே காண்கின்றான். கண்டதும் உயிர்களைக் கொல்லும் யமனும், இராவண பயத்தால் உன்னைக் கொல்ல அஞ்சுவன்; மற்று வேறு உலகத் தவர்களான மக்களும் அங்ஙனமே அஞ்சுவார்கள். ஆகவே உன்னைக் கொல்லவல்லவர் எவரும் இல்லை. நீதான் விளையாட்டு வகையால் எங்கட்குப் புலப்படாது ஒளித்துக் கொள்ளுவதற்கு எந்த உலகத்தைச் சேர்ந்தனையோ?" என்று புலம்புகின்றான். இவற்றால் தம்பியின்மீது தான் கொண்ட பாசம் வெளிப்படுகின்ற தல்லவா?*

*இலக்குவன் நான்முகன் கணையால் அதிகாயனைக் கொன்றொழிக்கின்றான். அட்சயகுமரன் இறந்தது கேட்டு துக்கமடைந்ததுபோல் அதிகாயன் இறந்த செய்தி*

58. சுந்தர – பாசப். 5
59. மேற்படி – 10

இந்திரசித்தின் மனத்தைப் பாதிக்கவில்லை. பாதிக்கப் பட்டதாகக் கம்பன்காட்டவில்லை; அதுபற்றிப் பாடல்களே இல்லை. இவன் மாற்றாந்தாயின் வயிற்றுப் பிள்ளைதானே என்று அதிகமாகத் துக்கப்படவில்லையோ? இதனால்தான் கம்பனும் பாடாமல் விட்டானோ? என்ற ஐயம் நம்பால் எழுகின்றது. இதனை நாம் சிந்திக்க வேண்டும்.

**இராவணனின் சகோதர வாஞ்சை:** இராமன் கணையால் கும்பகருணன் இறந்து படுகின்றான். இச் செய்தியைத் தூதுவர் மூலம் கேட்ட இராவணன்,

> பாரொடும் பொருந்தி நின்ற
> மராமரம் பணைக ளோடும்
> வேரொடும் பறிந்து மண்மேல்
> வீழ்வதே போல வீழ்ந்தான்[60].

இவன் தம்பியின்மீது கொண்ட பாசத்தால், அண்டத்தின் மேல் முகடு எட்டும் அளவு வாய்விட்டு அரற்றுகின்றான்[61] "தம்பியே, இந்திரனது பெயர் எங்கும் பொறிக்கப் படாதவாறு அவன் மேன்மையைக் கெடுத்தாய். இந்திரன் முதலியோரை வென்ற பராக்கிரமசாலி என்று பெயர் பெற்ற உன்னை ஒரு மனிதன் கொன்றான் என்ற தீமொழியைக் கேட்கும் நிலை ஏற்பட்டு விட்டதே! உனக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் உன்னைக் கிட்டியிருந்து வேண்டிய உதவியைச் செய்ய வேண்டியது என்கடமையாக இருக்க, அது செய்யாமல் என் உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றேனே! இனி இந்திரனுக்கும் குளிர் விட்டுச் சுவர்க்கலோகத்தை ஆளச்சென்று விடுவான். மூத்தவனான உடன் பிறந்தவன் இருக்க, இளையவன் இறந்து விட்டான் என்றநிலை ஏற்படுமானால், சகோதரன் வேண்டும் என்ற எண்ணமே உலகத்தில் போய் விடாதோ?

60. யுத்த. மாயாசனகப் – 76
61. மேற்படி – 78–87

*நீ நீராடும் காலத்து மேருமலை உன் குதிகாலைத் தேய்க்கும் கல்லாக உதவுவதாக இருக்கும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த நீ இறந்தாயே! அதுவும் ஒரு மானுடன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பினால் இறக்க நேர்ந்தது என்ற செய்திதான் தாங்கொணா வருத்தத்தைத் தருகின்றது. மும்மூர்த்திகளின் ஆயுதங்களும் உன்னைத் தீண்டினால் அவை மழுங்கி அப்பாற் போய்விடுமே. அப்படியிருக்க, ஒரு மனிதனுடைய மென்மையான அம்பு துளைத்துச் சென்றதுதான் வியப்பு. இந்நிலையில் நான் பார்த்துக் கொண்டு இருப்பதுதான் இழிநிலை. கரன்முதலிய எம்பிமார் இறந்து போனதும், என் மாமன் மாரீசனார் மாண்டு போனதும், மருந்தனைய தங்கை சூர்ப்பணகை மூக்கறுபட்டதும் நான் ஒரு பெண்ணின் முலையிடத்து வைத்த ஆசைதானே. உன்னை இழந்தும் உயிருடன் இருக்கின்றேன்!*

*இராமன், அவன் தம்பி இலக்குவன், வானர சேனாதிபதி நீலன், வானர வேந்தன் சுக்கிரீவன், அவன் மகன் அங்கதன், வாயுமைந்தன் மாருதி, கரடி வேந்தன் சாம்பவான் — இவர்களையெல்லாம் கொன்றாய் என்று சொல்லக் கேட்பேன் என்று இருந்தேன், அங்ஙனம் கேட்கப் பெறாது நின் மரணம்பற்றிக் கேட்கப் பெற்றேனே! மலரணையில் தங்கி, மகளிர் காலைப் பிடிக்க, தென்றற் காற்று வீசும் நிலையிலிருக்க வேண்டிய நீ போர்க்களத்தில் பேய்கள் துணங்கைக் கூத்தடிக்க புழுதிப் படுக்கையில் உறங்கும் நிலை ஏற்பட்டதே! மதுவை மாந்தி பலதிசை களிலும்சென்று வாழ்ச்சி பெற்றிருக்க நான் சுகமாக உயிர் வாழ்ந்திருந்தேன்; இனி நானும் உன்னைத் தொடர வேண்டியதுதான். இதோ வந்து விட்டேன்".*

*இங்ஙனம் இராவணன் கதறியழுவதில் அவனுடைய சகோதர வாஞ்சை வெளிப்படுகின்றது.*

# 4

# மக்கட் பண்புகள்

**திருக்குறள்** பொருட்பால் ஒழிபியலில் நன்மக்களின் பண்புகளாக மானம், பெருமை, சான்றாண்மை பண்புடைமை போன்றவற்றை எடுத்துக் காட்டுவார்.

> **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடும்**
> **ஐந்துசால்பு ஊன்றிய தூண்**[1]

என்ற குறளில் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து பண்புகளும் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கும் தூண்களாகும் என்று குறிப்பிடுவார். இவை போக நன்மக்களின் பண்புகளுக்கு அளவில்லை. பெருங்காப்பியம் படைப்போர் இத்தகைய பண்புகளைக் கதை மாந்தர்களின்மீது ஏற்றிக் கூறுவது உண்டு. இதனால் காவியத்தைப் படிப்போர் இவற்றின் தாக்கத்தைக் கட்டாயம் அடைவர். ஓமியோபதி மருந்துபோல் இவை பயன் தரும் என்று சொல்லலாம். இவை அனைத்தும் மக்கட் பண்புகளாகக் கொள்ளலாமேனும், அன்புடைமையை மட்டிலும் முதலில் கொண்டு விளக்குவேன்.

---

1. திருக்குறள் – பொருட்பால் – சான்றாண்மை – 3

**1. அன்புடைமை:** அன்புக்கு இலக்கணமாகப் பெரிய புராணத்திலுள்ள காளத்தி வேடன் கண்ணப்பனை எடுத்துக்காட்டுவர் சைவச் சான்றோர்.

> **கண்ணப்பன் ஒப்பதோர்**
> **அன்பின்மை கண்டபின்**
> **என்னப்பன் என்ஒப்பில்**
> **என்னையும் ஆட்கொண்டருளி[2]**

என்பது மணிவாசகப் பெருமானின் அமுதவாக்கு. அதுபோலவே இராமகாதையில் கங்கைவேடன் குகனை அன்புக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். காளத்தி வேடன் குடுமித் தேவருக்குக் காட்டிய அன்பைப்போல் கங்கைவேடன் இராமபிரானிடம் அன்பு காட்டுகின்றான்.

கங்கைக் கரைக் குகன் ஆயிரம் அம்பிக்கு (மரக்கலம்) நாயகன். இராமனிடத்துப் பெருங் காதல் கொண்டவன். தான் வந்த செய்தியை இலக்குவன்மூலம் தெரிவித்து, இராமனது அனுமதி பெற்று அப்பெருமானைக் காண்கின்றான்.

> **கண்ணனைக் கண்ணின் நோக்கிக்**
> **களித்தனன்; இருண்ட குஞ்சி**
> **மண்ணுறப் பணிந்து மேனி**
> **வளைத்துவாய் புதைத்து நின்றான்.[3]**

காளத்திவேடன் குடுமித் தேவருக்கு இறைச்சியைப் படைத்ததுபோல, கங்கைவேடன் நின்ற நிலையில் அளவுக்கு அடங்காத அன்புடன் இராமனுக்கு உணவாகும்படி **தேனும் மீனும்** கொண்டுவந்து காணிக்கையாகத் தருகின்றான். இராமனும் அவற்றை அன்புடன் ஏற்கின்றான்.

---

2. திருவா. திருக்கோத்தும்பி – 4
3. அயோத்தி – கங்கைப் – 41

*இராமனுடைய தவக்கோலத்தைக் கண்டு வருந்திய குகன்,*

பார்குலாம் செல்வ ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான்
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆன ஐய
செய்குவென் அடிமை என்றான் ![4]

*அன்று இரவு இராமன் அனுமதியுடன் அங்கேயே தங்கி விடுகின்றான். சேனையுடன் இராமனைக் காத்து நிற்கின்றான். இலக்குவன் மூலம் நகர்நீங்கிய காரணத்தை வினவியறிந்து குகன் அவனுடன் இருக்கின்றான்.*

பகுவரல் தம்பி கூறப்
பரிந்தவன் பையுள் எய்தி
இருகணீர் அருவி சோரக்
குகனும்ஆண்டு இருந்தான் என்னே
பெருநிலக் கிழத்தி நோன்றுப்
பெற்றிலன் போலும் என்ன[5]

*என்று குகனுடைய வருந்திய நிலையைக் காட்டுவான் கவிஞன்.*

*மாலை நியமம் முடித்து இராமனும் பிராட்டியும் தரையில் விரித்த நாணல் புல்லாலாகிய பாயலில் தங்க, இளையபெருமாள் கைவில் ஏந்தி காலை வாயளவும் இமைப்பு இன்றிக் காத்து நிற்கின்றான். அரண்மனையில் பஞ்சணை மஞ்சத்தில் உறங்க வேண்டியவர்கட்கு இந்நிலை ஏற்பட்டதே என்று பெருங் கவலையுறுகின்றான்.*

4. மேற்படி – 45
5. மேற்படி – 48

இற்றதோர் நெஞ்ச னாகி
இருகணீர் அருவிசோர
உற்றவோ வியம்இ தென்ன
ஒருசிலை அதனில் நின்றான்[6]

என்று கூறுவான் கவிஞன்.

குகனும் தன் பரிவாரங்களுடன் இராமனை இரவு முழுவதும் காத்திருக்கின்றான்.

தும்பியின் குழாத்திற் சுற்றும்
சுற்றத்தன் தொடுத்த வில்லன்
வெம்பிவந்து அழியா நின்ற
நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித்
தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான்.[7]

என்று இதனைக் காட்டுவான். இதன் நேர் பொருள் வெளிப்படை. 'தம்பி நின்றானை நோக்கித் தலைமகன் தனிமை நோக்கி அம்பியின் தலைவன், தொடுத்தவில்லனும் அழியா நின்ற நெஞ்சினனும் விழித்த கண்ணனும் ஆகி நின்றது-ஒருகால் இவ்விளையவனால் இராமபிரானுக்கு என்ன தீங்கு நேருமோ? என்னும் கருத்தினால் என்றும் குகன் சுற்றம் தும்பியின் குழாத்திற் சுற்றுவதற்குக் காரணம் இந்தத் தம்பியினாலேனும், இந்தக் குகனாலேனும் இவ்விராமபிரானுக்கு என்ன தீங்கு நேருமோ?' என்னும் கருத்தினால் என்றும் உரைக்க வழி அமைகின்றது.

இவ்வாறு உரைப்பது: வைணவ சம்பிரதாயத்துப் பூர்வாசார்யர்களின் ஸ்ரீசூக்திகளுக்கு ஏற்றதாகும்.

6. மேற்படி – 53
7. அயோத்தி. கங்கைப் – 54

*"இளைய பெருமாளை ஸ்ரீகுகப் பெருமாள் அதிசங்கை பண்ண, இருவரையும் அதிசங்கை பண்ணி ஸ்ரீகுகப் பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே"*[8]

*(அதிசங்கை - ஐயம்; பரிகரம் - சேனை; பெருமாளை இராமபிரானை)*

"ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்று இது"[9].

*என்பவை ஸ்ரீவசன பூஷணத்தின் வாக்கியங்கள்*

*முதல் வாக்கியத்திற்கு வியாக்கியானம் வகுக்கு மிடத்து* **மணவாளமாமுனிகள்** *"எம்பெருமானுடைய அழகு யாரையும் மங்களாசாசனத்தில் மூட்டும் என்னும் இடத்திற்கு இன்னும் ஓர் எடுத்துக் காட்டு தருகின்றார் 'இளைய பெருமாளை' என்று தொடங்கி; சிருங்கி பேரத்திலே எழுந்தருளி ஸ்ரீகுகப்பெருமாளை அங்கீகரித்த அன்று, பாங்கு. அறிந்து இளைய பெருமாள் படுத்துக் கொடுத்த இலைப்படுக்கையிலே பெருமாளும் பிராட்டியும் பள்ளி கொண்டருளா நிற்க, இளமைப்பருவம் முதலே மிக்க அன்பினையுடையவராகையாலே* **'என் வருகின்றதோ !'** *என்று அஞ்சி, முதுகில் இட்ட அம்பறாத்தூணியும் கட்டியவிரற்சரடும் நாண் ஏறிட்டு நடுக்கோத்துப் பிடித்த வில்லும் தாமுமாய் நடையாடும் மதில் போலே வளைய வருகின்ற இளைய பெருமாளைக் கண்டு, ஸ்ரீகுகப் பெருமாள், "ஒரு தம்பி தாயைக் கொண்டு இராச்சியத்தை வாங்கிக்கட்டின காப்போடே காட்டிலே தள்ளிவிட்டான்; இவனும் அவனைப் போன்று ஒரு தம்பியன்றோ? தனியிடத்தில் என்னசெய்ய இப்படி ஆயத்தமாய் நிற்கின்றான்?" என்று தெரியாது என்று ஐயம் கொண்டு,*

8. ஸ்ரீவச. பூஷ - 251
9. மேற்படி - 252 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

அப்படி ஏதேனும் ஒரு தீங்கு நினைக்கில் இவனைத் தீரக் காணக் கடவோம் என்று வில்லும் கோலுமாகக் கொண்டு இவர் (இளையபெருமாள்) இட்ட அடியிலே அடியிட்டு நிற்க,

'ஸ்ரீகுகப் பெருமான் ஏவல் தொழில் செய்து திரியும் சேனை, 'அவன் (இளைய பெருமாள் ஞாதி; இவன் குறும்பனான வன்னியன்; இவர்கள் இருவருமாக இவ்விஷயத்தை என் செய்யத் தேடுகிறார்களோ!' என்று இருவரையும் ஐயம் கொண்டு, அப்படிச் செய்யில் இவர்களை அழியத் செய்தும் தாம் அத்தலையை நோக்கக் கடவோம் என்று தனித்தனியே கையும் வில்லுமாய்க் கொண்டு பெருமாளைக் காப்பாற்றியதல்லவா?"

நாவாய்மூலம் கங்கை நதியைக் கடந்து அதன் தென்கரையை அடைகின்றனர் அயோத்தி அரசகுமரர்கள். குகன் தன்னையும் உடன் கொள்ள வேண்டுமென்று இராமனை வேண்டுகின்றான்[10]. "அடியேன் உடன் வரும் பேறு பெறுவனேல், செல்லும் அரிதான வழியை இனிதான வழியாகச் செய்து தருவேன். காய், கனி, தேன் ஆகியவற்றைத் தேடித் தவறாமல் தருவேன். செல்லும் இடங்களில் உறைவதற்கேற்ற இடங்கள் அமைத்துத் தருவேன்"(69). "தங்கும் இடங்களைச் சுற்றியுள்ள இடங்களி லெல்லாம் புலி முதலிய கொடிய பிராணிகள் இல்லாதவாறு ஒழித்து, மான்களைப் போன்ற இனிய பிராணிகள் வாழுமாறு செய்வேன். விரும்பிய பொருள்களை உடனுக்குடன் தேடிக் கொணர்ந்து தருவேன். கட்டளையிடும் எச்செயல்களையும் விரைந்து முடிப்பேன். அடியேன் இரவிலும் எளிதாக உலாவும் வல்லமை பெற்றவன்" (70).

10. அயோத்தி – கங்கைப் – 69–92

'கவலைக்கிழங்கு முதலிய எல்லாக் கிழங்குவகைகளையும் மலைமீதும் தோண்டி எடுத்துத் தருவேன். தொலைதூரம் சென்று குடிநீரைக் கொண்டு தரவல்லேன். நொடிப் போதும் நின்னை விட்டு பிரியேன்' (71). 'உமக்குத் திருவுள்ளம் இருப்பின், சேனையுடனும் வருவேன். எல்லாத் தீங்குகளை விளைவிக்கும் பகைவர்கள் ஒருகால் உண்டானால், முன்னம் என் உயிரை மாய்த்துக் கொள்வேன். அதிதியாக வந்தவனை மாற்றார்க்குக் காட்டிக் கொடுத்தான் என்ற வசைச் சொல்லுக்கு இடம் இல்லாமல் செய்து கொள்வேன்" (72).

இங்ஙனம் அன்பு ஒழுகப் பேசும் குகனுக்கு இராமன் சமாதானம் சொல்லி இருக்குமிடத்தில்தானே இருக்குமாறு பணித்தலிலும் அன்பு ஒழுகுகின்றது.

அன்பு ஒரு நெகிழ்ச்சிப் பண்பு. அது தொடர்புடையாரிடத்தில் கண்ணீராய்த் தோன்றும். தடுக்கமுடியாத நிலையில் வாய்வாளாமையோடு செயல் அடக்கத்தோடு, கண்ணீர் வழியாக எப்படியும் அன்பு புலப்பட்டு விடுகின்றது. உடலால் தொண்டு செய்ய அன்பு தயங்காது; தேவையென்றால் உடலை வழங்கவும் அன்பு துணிந்து விடும். "தன்னகம் புக்க குறுநடைப் புறவின் தபுதியஞ்சிச் சீரை புக்க"[11] சோழனது பேரன்பை ஈண்டு நினைவு கூர்ந்து மகிழலாம். தொண்டு நன்கு பெருகவும் அன்பு உதவுகின்றது. அடக்கமுடியாத பேரன்பினால் தொடர்புடையாரைக் கடியவும் செய்கின்றோம்.

அன்பு உயிரின் பண்பு. "**அன்புடை ஆருயிர்**"[12] என்று குறிப்பிடும் மணிமேகலை. உயிர் நெகிழ்ந்தால் மனம் நெகிழ்வதும், உடல் நெகிழ்வதும் இயல்பு. 'நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து,

11. புறம் – 42
12. மணிமே. 25:170

அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெடுத்த கண்ணீர் அதனால் உடம்பு; நனைந்து நனைந்து...அந்த அன்பில் தோய்ந்த நன்மொழிகள் வனைந்து வனைந்து சிறப்பது இந்த உயிர்ப் பண்பு'[13]. இங்ஙனம் வடலூர் வள்ளல் பெருமான் அன்பின் திறங்களை அதன் இயல்பு தோன்ற அழகாக எடுத்து விளக்குவார், **"அன்பின் வழீஇயது உயிர்நிலை"** *(80)* என்னும் சிறு தொடரால் வள்ளுவர் பெருமான் இவ்வியல்புகளைத் தொகுத்து உரைப்பார்.

மேலே கூறியவாறு குகனின் அன்புரைகளைக் கேட்ட இராமனும், "நீ என் உயிர் போன்றவன். தம்பி உன் இளையான்; இச்சீதை உன் தோழி. இந்த பூமி முழுதும் நின் சொத்தாகும்[14] நான் உன் ஏவல் தொழிலில் கட்டுப்படும் உரிமையில் உள்ளேன்" (73). துன்பம் உண்டானால்தானே சுகமும் உண்டாகும்? வெயிலில் அடிபட்டார்க்கு நிழலினருமை தெரிவது போல நாம் இருவரும் பிரிந்து அதனால் தோன்றும் வருத்தத்தை அநுவித்தால்தான் நாம் பின்னர்க் கூடும்போது அஃது இனிதாகத் தோன்றும். உண்மை இப்படியிருக்க துன்புற்றால்தான் இன்பம் ஊளதாம் என்று நினையாமல், பின்னர் வரப்போகும் இன்பத்திற்கு இடையே இப்போது பிரிவுத் துன்பம் நேர்கின்றதே என்று வருந்தற்க. நீ நினைக்க வேண்டியது இது. முன்பு தசரதச் சக்கரவர்த்திக்குக் குமாரர்கள் நால்வர். இப்போது உன்னையும் எம்மிற் சேர்த்துக் கொண்டதனால்- சக்கரவர்த்தியின் குமாரர்கள் **ஐவரானோம்** என்று நமக்கு ஏற்பட்ட அன்பையே நினைக்கவேண்டும்" (74).

"எனக்குத் துன்பம் நேரும்போது அதனைத் தாங்குவதற்கு உன் தம்பி இலக்குவன் துணையாக

13. திருவருட்பா – ஆறாந்திருமுறை – மரணமிலாப் பெருவாழ்வு–1
14. இதனை ஒத்த திருமங்கையாழ்வாரின் பாசுரம் பெரி. திரு. 5.8:1 பிறிதோரிடத்தில் காட்டப் பெற்றுள்ளது.

*உள்ளான். அவன் இருக்கும்போது யான் துன்புறும் பகை யாதும் இராது. நீயே நான்; நானே நீ. என் சொற்கடவாது ஊர் சென்று குடிமக்களைக் காப்பாய். நான் மீண்டு அயோத்திக்குத் திரும்புகையில் இங்குவருவேன். நீ இப்போது செல்க" (75)*

*"உன்தம்பியாகிய பரதன் அயோத்தியிலுள்ள சுற்றத்தாரையும் காத்தற்கு உள்ளான்; நீ இந்த இடத்திலிருந்து என்னுடன் வந்துவிட்டால், இங்கேயுள்ள சுற்றத்தாரைப் பாதுகாக்க யார் இருக்கிறார்கள்? உன் சுற்றம் என் சுற்றம் அல்லவா? ஆகவே என் கட்டளையினால் இங்குள்ள என் சுற்றத்தாரை நன்றாகப் பாது காப்பாயாக" (76) - இந்த இராமனின் உரையில் அன்புத்தும்பு வதைக் கண்டுமகிழலாம்.*

*இங்ஙனம் சுக்கிரீவனைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ளும்போது இராமன் கூறிய,*

உன்றனக்கு உரிய இன்ப
துன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந்து
உறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கு நிற்கும்
நேரென மொழியும் நேரா

மற்றினி உரைப்ப தென்னே
வானிடை மண்ணில் நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்
தீயரே எனினும் உன்னோடு
உறறவர் எனக்கும் உற்றார்
உன்கிளை எனது என்காதல்
சுற்றம்உன் சுற்றம் நீஎன்
இன்னுயிர்த் துணைவன் என்றான்.[15]

15. கிட்கிந்தை – நட்புக்கோள் – 26, 27

என்ற சொற்கள் அன்புடைய நெஞ்சத்தினின்று வெளி வந்தவையாகும்.

அடுத்து வீடணனைத் தன்பக்கல் சேர்த்துக் கொள்ளும்போது இராமன் கூறிய,

ஆழியான் அவனை நோக்கி
அருள்சுரந்து உலகைக் கூர்ந்தே
ஏழினோடு ஏழாம் நின்ற
உலகும்என் பெயரும் எந்நாள்
வாழும்நாள் அன்று காறும்
வாளெயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் என்றான்[16]

என்ற உரையும் அன்பினில் விளைந்த ஆரமுதமாகும்.

**2. கற்பு:** 'இதிகாச சிரேஷ்டமான ஸ்ரீஇராமாயணத் தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது' என்பது ஸ்ரீவசனபூஷணம்[17]. 'பிராட்டி' என்னாது 'சிறையிருந்தவள்' என்று அருளிச் செய்தது பிராட்டியினுடைய பேரருளின் மிகுதியைத் தெளிவுபடுத்துவதற்காக. தேவதேவனுடைய பட்டத்துத் தேவியான தன்னுடைய பெருமையும், சிறையிருத்தலின் தண்மையும் (தாழ்ச்சியும்) பாராமல், தேவமாதர்களுடைய சிறையை விடுவித்தற்காகத் தான் சிறையிருந்தது பேரருளின் வசப்பட்டவள் என்பது தெளிவாகின்றது. குழவி கிணத்திலே விழுந்தால் ஒக்கக் குதித்து எடுக்கும் தாயைப்போலவே, இவ்வுயிர்கள் விழுந்த பிறவிப் பெருங்கடலிலே தானும் ஒக்கவந்து பிறந்து இவர்கள் பட்டதைத் தானும் பட்டுக் காப்பாற்றுகையாலே, ஒரு காரணம்பற்றி வாராத தாயாகின்ற சம்பந்தத்தால் வந்த

16. யுத்த. வீடணன் அடைக். 142
17. ஸ்ரீவசன – பூஷ – சூத்திரம் – 5

அளவில்லாத அன்பாகிய குணத்திற்கும் இஃது ஒரு விளக்கமாகும். இந்த மேம்பட்ட குணத்தை வெளியிடு வதற்காக அன்றோ பரமாசாரியாரான நம்மாழ்வார் 'தனிச்சிறையில் விளப்புற்ற கிளி மொழியாள்' (திருவாய் 4.8.5) என்று அருளிச் செய்தது? இத்திருவாய்மொழிதான் 'சிறையிருந்தவள்' என்று அருளிச் செய்ததற்கு மூலம் என்று கருதலாம்.

தலைவியின் பெருமையையும் உரிமையையும் குறித்துப் பேசும் தொல்காப்பியர் ஓர் இடத்தில்,

> 'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
> மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும்'[18]

என்பவற்றைத் தலைவியின் குணங்களாகக் குறிப்பிடுவர். கற்பு என்பது, கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கம். 'கற்பெனப் படுவது சொல்திறம்பாமை'[19] என்று இதனை விளக்குவர் ஔவைப் பாட்டி. காமம் என்பது அன்பு.........விருந்து புறந்தருதல் என்பது, வறுமையையோ செல்வத்தையோ கருதாது இயன்றவரை விருந்தினரைப் பாதுகாத்து அவர்களை மனம் மகிழ்வித்தல். இவற்றுள் கற்பு, காமம், விருந்தோம்பல் என்ற மூன்றையும் நாம் மக்கட் பண்புகலாகக் கொள்வோம். காமம் (அன்புடைமையை) மேலே விளக்கினோம். விருந்தோம்பலைக் கற்பை அடுத்து விளக்குவோம். கற்பை ஈண்டு விளக்குவோம்.

கண்ணகியை கற்புக்கு இலக்கணமாகக் கொள்வர் தமிழ் இலக்கியவாதிகள். 'கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம்

18. தொல். பொருள். கற்பியல் – 11
19. கொன்றை வேந்தன் – 14

அல்லது, பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்' (கவு. அடிகள்) என்பது இளங்கோ அடிகளின் திருவாக்கு[20]. சிலப்பதிகாரத்தை ஆய்ந்து கற்கும்போது மாதவியும் இந்நிலையை எய்துகின்றாள் என்பதை அறியலாம்.

> உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
> செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று[21]

என்பது தொல்காப்பிய விதி. கற்பைப்பற்றி வள்ளுவர் பெருமானும்,

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மைஉண் டாகப் பெறின் (54)

என்று கூறுவர். மனைவியாக அமையும் பெண் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையவளாய் இருக்கவேண்டும். அதோடு தன்னைத் துணையாக நம்பி மணம் செய்து கொண்ட கணவனையும் தன் தொண்டுகளாலும் ஆற்றல்களாலும் காப்பாற்றும் திறன்படைத்தவளாக விளங்கவேண்டும். மனைவியின் வல்லமை இவ்விரண்டோடு மட்டும் நிற்பதில்லை. பிறந்த குடி, புகுந்த குடி என்ற இருதிறத்து முன்னோர்களும் தேடிய புகழை மேன்மேலும் வளர்த்துக் காத்து நிலை நாட்டுகிறவளாவும் இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் கற்றுத் தேர்ந்து அதன் உறுதியில் நின்று துணை புரியும் ஒழுக்கமே 'கற்பு' என்பதாகும். இக்கருத்தை,

> உன்பெருந் தேவிஎன்னும்
> உரிமைக்கும் உன்னைப்பெற்ற
> மன்பெரு மருகி என்னும்
> வாய்மைக்கும் மிதிலை மன்னன்

20. சிலப் – அடைக்கலக் – 143–44
21. தொல். பொருள். களவியல் – 23

தன்பெருந் தனையை என்னும்
தகைமைக்கும் தலைமை சான்றாள்[22]

*என்ற அநுமனின் வாக்கால் புலப்படுத்துகின்றான் கம்பன்.*

*சீதையின் தோற்றத்தைக் கொண்டே அவளது கற்பு கெட்டழியவில்லை என்று சிந்திக்கின்றான் அநுமன். பிராட்டி பல திங்களாகியும் தனது நாயகனின் கருணையைப் பெறாமல் மிகவும் மெலிந்த நிலையில் இருந்தாள்.*

மென்ம ருங்குல்போல் வேறுள
அங்கமும் மெலிந்தாள்[23]

*என்பது கவிஞனின் வாக்கு. பிரிவுத் துயரால் உறக்கமின்றியும் நீராடுதல் முதலியன இன்றியும் மேனி மழுங்கிக் கிடக்கின்றாள் (4). பிராட்டியின் கண்கள் எப்பொழுதும் இடையறாது நீர்மழையைப் பொழிதலால் அவளுடைய கண் 'மழைக்கண்?' என்ற காரணப் பெயர் பெற்றது (6). ஒற்றையாடையுடன் பல நாட்கள் நீராடாமையால் மாசு படிந்த மேனியோடும் காணப்பட்டாள். இந்நிலையைக் கவிஞன்,*

தேவு தென்கடல் அமிழ்துகொண்டு
அனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே
ஒக்கின்ற உருவாள்[24]

*(தேவு - தெய்வத்தன்மையுடைய; தென்கடல் பாற்கடல்)*

*என்று நமக்குக் காட்டுவான்.*

22. சுந்தர. திருவடிதொழுத - 59
23. சுந்தர. காட்சி - 3
24. மேற்படி - 11

*கரிய மேகக் கூட்டங்களைக் கிழித்துக்கொண்டு மின்னற்கொடி விளங்குவது போல கருநிறத்து அரக்கியர் குழுவினிடையே 'கருநிறத்து அழகனுக்கு அமைந்த காந்தையை'க் கான்கின்றான் மாருதி. மாசு படிந்த இரத்தினம் போன்றவளும், பகலவன்முன் சந்திரன்போல் ஒளி மழுங்கியுள்ளவளும் அழுக்குப் பிடித்த கூந்தலை உடையவளுமாகிய இப்பெருமாட்டியைக் காணும்போதே இவளது கற்பும்காவலும் கேடுறவில்லை என்று உறுதி கொள்ளுகின்றான்[25]. இப்பிராட்டி தோன்றியதனால் உயர் குடிப்பிறப்பும் பெண் பிறப்பும் போல் நாணமும் நோற்று உயர்ந்தது என்று கருதிய அநுமன்,*

**மாணநோற்று ஈண்டுஇவள்**
**இருந்த வாறெலாம்**
**காணநோற்று இலன்அவன்**
**கமலக் கண்களால்[26]**

*என்று இவள் நிலையை நேரில் காணும் பேறுபெற்றிலையே இராமன் என ஏங்குகின்றான். நேரில் இராமனைக் கண்ட போது அநுமன்,*

**கண்டனன் கற்பினுக்கு**
**அணியைக் கண்களால்[27]**

*என்று கூறுவான். இதனையே பின்னும்*

**கலங்குதென் திரையிற் றாய**
**கண்ணின்நீர்க் கடலில் கண்டேன்[28]**

*என்று சொல்லுவான். கற்பு கெடாதநிலையை மிகவும் உருக்கமாக,*

---

25. சுந்தர. காட்சி – 68
26. மேற்படி – 73
27. சுந்தர. திருவடிதொழுத – 58
28. மேற்படி – 68

வேலையுள் இலங்கை என்னும்
விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலை தானும்
இல்லதோர் கனகக் கற்பச்
சோலைஅங்கு அதனுள் உம்பி
புல்லினாற் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய!
தவம்செய்த தவமாம் தையல்[29]

*என்று சாற்றுவான், முத்தாய்ப்பாக,*

விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த வாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்ப தொன்றும்
இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயரது ஒன்றும்
களிநடம் புரியக் கண்டேன்[30]

*என்று கூறுவான். இங்ஙனம் கவிஞன் கற்பின் திறத்தை பிராட்டியை மையமாகக் கொண்டு அற்புதமாகக் காட்டுவான். இன்னும் சில இடங்கள் உள்ளன. விரிவஞ்சி அவை விடப் பெற்றன.*

**3. விருந்தோம்பல்:** *இல்வாழ்க்கையில் உள்ள கணவனும் மனைவியும் குழந்தைகளும் அன்புப் பிழம்பாய் உள்ள இல்லம் ஒரு திருக்கோயில். உண்மையான மெய்யன்பும் மெய்யறமும் விளங்கும் தேவாலயம். இல்வாழ்க்கையில் தலைவர் தாம் தேடும் பொருளை யெல்லாம் பயன்தரும் இன்பப் பொருளாக மாற்றி*

29. மேற்படி – 64
30. மேற்படி – 32

விருந்தினருக்கு உதவும் பெருமை படைத்தது தான் இல்வாழ்வான் வாழும் இல்வாழ்க்கைக் கோயில்கள். இதனால்தான் வள்ளுவர் பெருமான்,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

என்று பணித்தருளினார்.

கோசல நாட்டு வளத்தைக் கூறும் கம்பநாடன் மள்ளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது களத்தில் குவித்த நெல்லை

'வறிஞர்க் குதவி மிக்க
விருந்துண மனையில் உய்ப்பான்[31]

என்பான். மள்ளர்கள் நெற்களத்தில் நெல்லைக் குவித்துக் களப்பிச்சை முதலியவற்றை ஈந்திட்டுத் தமக்குரிய பகுதியை விருந்தோடு உண்ணுமாறு வீடுகளில் கொண்டு வந்து சேர்ப்பர் என்கின்றான். விருந்தைக் கூறியதனால் தென்புலத்தார் தெய்வம் ஒக்கல் என்போருக்கும் உபலட்சணமாகக் கொள்ள வேண்டும். மள்ளர்கள் மேற் கொள்ளும் விருந்தை,

முந்துமுக் கனியின் நானா
முதிரையின் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டங் கண்டம்
இடையிடை செறிந்த சோற்றின்
தந்தம்இல் இருந்து தாமும்
விருந்தொடும் தமரி னோடும்
அந்தணர் அமுது அருத்தி
அயில்உறும் அமலைத்து எங்கும்[32]

31. பாலகா. நாட்டு – 20
32. மேற்படி – 22

என்று காட்டுவான் கவிஞன் எல்லா இடங்களிலும் ஏனையோர் உட்பட அந்தணர்கள், விருந்தினர் உறவினர் இவர்களோடு தம்தம் வீட்டில் உணவு கொள்கின்றனர். எப்படிப் பட்ட விருந்து? சிறந்த மாங்கனிகள் என்ன, பலாக்கனிகள் என்ன, வாழைப் பழங்கள் என்ன இவற்றோடு பலவகைப் பகுப்புகளினாலும் அப்பருப்பு களை முழுத்துகின்ற நெய்யினாலும், செந்நிறமுள்ள தயிர் கட்டிகளினாலும் கண்டசருக்கரையினாலும் இவற் றிடையே நெருங்கிய சோற்றினாலும் ஆன உணவை உண்கின்றனர். எப்படி உண்கின்றனர்? ஆரவாரத்துடன் உண்கின்றனர். ஆரவாரமின்றி அமைதியாக விருந்து அயர்தலைச் செட்டி நாட்டில்தான் காணலாம். பதினாறு ஆண்டுகள் காரைக்குடியில் நகரத்தார் நடுவே வாழ்ந்த எனக்கு இதனை நேரில் கண்ட அநுபவம் உண்டு. அமலை இல்லாமைக்குக் காரணம், விசாரிக்கப் பொறுப் புள்ளவர்கள் இருப்பதனால் உண்பவர்கள் பேச்செடுப் பதற்கு வாய்ப்பே இல்லை. பிற இடங்களில் விசாரிப்போரும் உரக்கப் பேசுவார்; உண்பவர்களும் 'அது கொணர்க, இது கொணர்க' என்று கூச்சலிடுவார்கள். இவை பல இடங்களில் நாம் காணும் காட்சிகள். **விருந்து அயர்தல்** மக்கள் பண்பாட்டில் தலைசிறந்தது.

பலகாலும் பழகி அறிந்தவர்கட்குச் சிறந்த உணவு அளித்தலும், தம்மைவிட மிக்கச் செல்வமுடையவர்கட்குப் புகழ்கருதி போற்றிச் செய்யப்படும் ஆடம்பரச் சிறப்பும், ஏதேனும் ஒரு நற்பலனை எதிர் நோக்கி 'சிறந்த உணவு நல்குதலும் விருந்து என்று இக்காலத்தில் போற்றப் பெறுகின்றன. திருவள்ளுவர் இவற்றை விருந்து என்று கொள்ளவில்லை. முதலமைச்சர்கள், ஆளுநர்கள், தொழிலதிபர்கள் தரும் விருந்துகள் யாவும் திருவள்ளுவர் கருத்திற்குப் பொருந்தா.

திருவள்ளுவர் கூறும் விருந்தை இக்காலத்தில் நாட்டுப் புறங்களில் மூலை முடுக்குகளில் வறியராய் வந்தவர்க்குக் கூழ்வார்க்கும் செயலில்தான் காணலாம். நண்பகல் வெயிலில் வரும் வழிப் போக்கர் ஒருவருக்கு தென்னைமரம் ஏறி இளநீர்பறித்து அதனைச் சீவி அருந்தத் தரும் உழவரிடம் விருந்தயரும் பண்பினைக் காணலாம். வழிப் போக்கர் இளநீரைப் பருகும்போது 'பருகுவன்ன அருகாநோக்கமொடு' உற்றுப் பார்த்து மகிழும் உழவர் முகத்தில் ஒளிரும் புத்தொளியில் விருந்தோம்பும் பண்பு பளிச்சிடுவதைக் கண்டு மகிழலாம்.

இக்காலத்தில் உண்ண விடுதிகள் மலிந்த நகரத்தில் விருந்தயரும் பண்பைக் காணமுடியாது. நகரங்களில் புதியராய் வருவோரில் மானமுடைய பலரும் (தெரிந்தவர் இல்லத்திற்கோ உறவினர் வீட்டிற்கோ செல்லாமல்) கையில் காசு கொண்டு உணவு விடுதிகளை நாடிச் சென்று உண்டு பசி தீர்கின்றார்கள். கையில் காசுக்கு வழியற்றவர்களில் சிலர் உதவிபெற முடியாமல் பட்டினி கிடந்து வாடி வருந்தி நகரங்களை விட்டுவிரைவில் நீங்கிச் செல்கின்றனர்; மற்றும் சிலர் மானம் இழந்து மதிகெட்டு பிச்சை எடுத்தேனும் வயிறு வளர்க்கத் தலைப்படுகின்றனர். வேறு சிலர் திருடு முதலியவற்றைக் கற்றுத் திரிகின்றனர். இன்றைய அன்றாட நாளிதழ்களை எடுத்தால் முகமூடிக் கொள்ளை, பிறநூதன முறைகளில் கொள்ளை இவைதாம் முதற்பக்கச் செய்திகளாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இஃது இன்றைய பண்பாடு! ஆகவே, புதியவராய் உதவிக்கு உரியவராய் வருவோருக்கு விருந்து அளித்து உதவும் வாழ்க்கை இன்று அரிதாகிவிட்டது எனலாம்.

இல்வாழ்க்கை அறத்துக்கு **'மனையறம்'** என்றும் பெயர். மனையறங்களுக்கு ஏற்ற குணமும் மனைவளத்திற்கு ஏற்ற செயலும் கொண்டு துணை நிற்கும் மனைவியை

'வாழ்க்கைத்துணை' என்று சிறப்பிக்கின்றார் வள்ளுவர் பெருமான். இல்லறங்கட்குச் சிறப்புடையது விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்பல் விளக்கத்தில் பரிமேலழகர் "வேறாக அன்புடை இருவர் கூடியல்லது செய்யப்படாமை" என்பர்[33]. தன் கணவனுக்கு உரிய செயல்களே மனைவிக்கும் உரியவை. இந்த இணக்கத் திறத்தை 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தில்,

மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

என்ற முதற் குறளிலேயே தொகுத்துக் கூறியுள்ளார்.

கம்பராமாயணத்தில் பிராட்டி இராமனுக்குச் சரியான வாழ்க்கைத் துணையாக அமைந்தவள். இத்தகைய பெருமாட்டி,

உரிய காதலின் ஒருவரோடு
    ஒருவரை உலகில்
பிரிவுஎ னும்துயர் உருவுகொண்
    டால்அன்ன பிணியாள்[34]

என்ற நிலையில் உள்ளாள். அதாவது பிராட்டியைக் கண்டவர் 'இவர் பிரிவுத் துயர்கொண்டு வருந்துகின்றாள்' என உணருமாறு தோன்றுகின்றாள் இந்தப் பிரிவு நிலையிலும் விருந்தோம்பலைப்பற்றிச் சிந்திக்கின்றாள்; தன் கணவன் நிலையையும் சிந்திக்கின்றாள்.

அருந்து மெல்லடகு ஆர்இட
    அருந்தும்என்று அழுங்கும்;
விருந்து கண்டபோது என்னுறு
    மோஎன்று விம்மும்;

33. விருந்தோம்பல் – அதிகாரத் தலைப்பு விளக்கம் காண்க.
34. சுந்தர. காட்சி – 7

மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட
நோய்க்குஎன்று மயங்கும்[35]

என்பது பிராட்டியின் கவலை. உண்ணும்போது பரிமாறுவதற்கு மனைவி இல்லாமையால் 'மெல்அடகு ஆர் இட அருந்தும்' என்று கவல்கின்றாள் பிராட்டி. மனைவியோடு இல்லறத்தில் வாழ்பவனே 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும்....இல்வாழ்வான் என்பான் துணை' (42) என்ற வாக்குப்படி விருந்தினராக வரும் துறந்தார் முதலியோரை உபசரிக்கத்தக்கவனாதலால், மனைவியைப் பிரிந்த நிலையிலுள்ள இராமபிரானுக்கு விருந்தினரை உபசரித்தல் இயலாமைபற்றி 'விருந்து கண்டபோது என்னுறுமோ?' என்று கவலைப்படுகின்றாள். இராமன் கானகத்தில் துறவிக் கோலத்தோடு இருப்பதால் பெரும்பாலும் துறவியரே விருந்தினராக அமைவார்கள் என்பதால் உணவுக்கு 'அடகு' என்ற பெயர் வந்தது. அடகு - இலை உணவு. இது காய்கனி கிழங்கு முதலிய மற்றை உணவுக்கும் உபலட்சணம். இவை வனத்தில் வதியும் முனிவர்க்கு உரிய உணவு. இவற்றால் பிராட்டியின் 'விருந்தோம்பல்' உணர்வு பிரிவுக் காலத்திலும் தலை எடுக்கின்றது.

**பரத்துவாசமுனிவர்:** முனிவர்களில் துணைவியாருடன் உள்ளவர்களும் உளர். எ.டு. சரபங்க முனிவர்[36]. தனிமையாக மாணியாக உள்ள வரும் உள்ளனர். எ-டு. பரத்துவாசர்[37], அகத்தியர்[38] ஆகியோர்.

குகனிடம் விடை பெற்றுக் கொண்டு இராம லட்சுமணர்கள் சீதாப் பிராட்டியுடன் ஒரு வனத்தின்

35. மேற்படி – 15
36. ஆரணிய. – சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் – 16
37. அயோத்தி. – வனம் புகு படலம் – 23–35
38. ஆரணிய. – அகத்தியப் படலம்.

வழியாகச் செல்லுகின்றனர். அப்போது அங்கு பரத்துவாச முனிவர் இராமனை எதிர்கொள்ள அங்கு வருகின்றார். வந்தவர் இராமனின் தாபதகோலத்தைக் கண்டு வருந்துகின்றார். வந்த காரணத்தை இராமன் தெரிவிக்க முனிவரும் நிலைமைக்கு விதியே காரணம் என்று நொந்து கொள்கின்றார். பிறகு முனிவர் மூவரையும் தாம் வாழிடத்திற்கு அழைத்துச் சென்று உண்டி உறையுள் தந்து உபசரிக்கின்றார்.

> புக்குறை விடம்நல்கி பூசனை முறைபேணி
> தக்கன கனிகாயும் தந்துரை தரும்அன்பால்
> தொக்கநன் முறைகூறித் தூயவன் உயிர்போலும்
> மக்களின் அருள்உற்றான் மைந்தரும் மகிழ்வுற்றார்[39].

இராமன் முதலியோர்க்குப் பரதுவாச முனிவர் அதிதிகட்குச் செய்யவேண்டிய முறைப்படியே உபசாரங்கள் புரிந்து, தந்தை மக்களிடத்து அன்பு கொண்டு நடப்பதைக் கண்டு இராமன் முதலியோர் மகிழ்ச்சி அடைகின்றனர்.

**சவரி:** சவரி மதங்க ஆசிரமத்தில் மதங்கரது சீடர்கட்கு உபசாரம் செய்து கொண்டு அவ்வாசிரமத்திலேயே வாழ்ந்து வந்த துறவறம் பூண்ட தவப்பெண். இராமலக்குமணர்கள் மதங்காசிரமத்திற்கு எழுந்தருளும் செய்தியை முன்னதாகவே அறிந்து எதிர் நோக்கி அவ்வனத்திலுள்ள நல்ல கனிகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு அவர்கள் அவ்வாசிரமத்திற்கு எழுந்தருளியவுடன் அக்கனிகளை அவர்கட்குத் தந்து உபசரித்து இராமபிரானது அருளால் தன் பிறப்பை யொழித்தவள்.

இராமலட்சுமணர்கட்கு இப் பெருமாட்டி விருந்து செய்து உபசரித்ததை,

39. அயோத்தி – வனம்புகு – 28

ஆண்டுஅவள் அன்பின் ஏத்தி
அமுதுஇழி அருவிக் கண்ணள்
மாண்டதுஎன் மாயப் பாசம்;
வந்தது வரம்பில் கலம்
பூண்டமா தவத்தின் செல்வம்;
போயது பிறவி என்பாள்[40]

*என்று கூறிக் கொண்டு பழங்களை வழங்கி விருந்து செய்கின்றாள். ஏட்டுப்படியிலுள்ள ஒரு பாடல் இதனை விவரமாகத் தெரிவிக்கின்றது.*

மாங்கனி தாழை யின்காய்
வாழையின் கனிகளோடும்
ஆய்கனி ஆவதே என்(று) அருந்திநான்
விரும்பி வைத்தேன்
பாங்கினி அமுதுசெய்மின் என்றவள்
பரிவில் நல்கும்
தேங்கனி இனிதின் உண்டு
திருவுளம் மகிழ்ந்த வீரன்

*என்பது பாடல். பின்னர் சவரி இராமனைப் புகழ்கின்றாள்; இராமனும் முகமன் கூறுவான்.*

இருந்தனன் எந்தை நீஈண்டு
எய்துதி என்னும் தன்மை
பொருந்திட இன்று நான்என்
புண்ணியம் பூத்தது என்ன,
அருந்தவத்து அரசி தன்னை
அன்புற நோக்கி எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய்
அம்மனை ! வாழி என்றான்[41]

40. ஆரணிய – சபரி பிறப்பு நீங்கு – 3
41. மேற்படி – 5

பின்னர் சவரி சுக்கிரீவன் உள்ள இடத்திற்குச் செல்லும் வழியைக் கூறி முக்தி அடைகின்றாள்.

**சுக்கிரீவன்:** இராமபிரானிடம் "சரண் உனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்" என்று கூறி சுக்கிரீவன் சரண் புகுந்த பின், அநுமனின் வேண்டு கோளின்படி இராமன் சுக்கிரீவன் இல்லத்திற்கு எழுந்தருளு கின்றான். இராமனும் சுக்கிரீவனும் தூய்மையான மலர் ஆசனத்திலிருந்து அன்புடன் அளவளாவுகினர். நீராடிய பின் இராமன் விருந்துண்கின்றான்.

> கனியும் கந்தமும் காயும் தூயன
> இனிய யாவையும் கொணர யாரினும்
> புனிதன் மஞ்சனத் தொழில்பு ரிந்துபின்
> இனிதி ருந்துநல் விருந்தும் ஆயினான்[42]

என்ற பாடலால் இதனைக் கவிஞன் காட்டுவான். இலக்குவனைப் பற்றிய செய்தியே இங்கில்லை. அவன் விருந்தில் கலந்து கொள்ளவில்லையா? ஒன்றுந் தெரியவில்லை. "மகனே இவன் பின்செல் தம்பி, என்னும்படியன்று அடியாரினில் ஏவல் செய்தி"[43] என்று அன்னையின் அறவுரைப்படி பின்புலத்தில் ஏவல் செய்து கொண்டிருந்தானா? கம்பன் எதையும் காட்டவில்லை.

'பொருந்து நன்மனைக்கு உரிய பூவையைச்"[44] சுக்கிரீவன் பிரிந்திருக்கும் நிலையை அநுமன் இராமனுக்கு நேரில் காட்டவே இந்த ஏற்பாடு செய்தனனோ? என்று கருத இடந்தருகின்றது. இக்காலத்தில் தலைவர்கள் தரும் விருந்தில் தானே அரசியல் பேச்சு நடைபெறுகின்றது? அது

42. கிட்கிந்தை – நட்புக்கோள் – 34
43. அயோத்தி – நகர் நீங்கு – 152
44. கிட்கிந்தை – நட்புக்கோள் – 35

போன்றது ஒன்றுதான் இதுவும் என்று நினைக்கத் தோன்றுகின்றது.

**சாப்பாட்டு இராமன்:** இவ்விடத்தில் விருந்தோம்பல் தொடர்பான ஒரு கருத்து நினைவிற்கு வருகின்றது. இந்த உலகில் எத்தொழிலும் செய்யாது உண்டு ஊர் சுற்றுபவனைச் '**சாப்பாட்டு இராமன்**' என்று சாட்டுப் பெயரால் மக்கள் வழங்குவதைக் காணலாம். "நடையில் நின்றுயர் நாயகனின்" திருநாமத்தை இப்படிப் பயன்படுத்தலாமா? என்பது வினா. இராமனிடம் மக்கள் கண்ட ஒரு குறைதான் இப்படிப் பேசச் செய்து விட்டது என்பது அடியேனின் ஊகம்.

தேவர்கள் கருத்துப்படி அரசை மேற்கொள்ளுமாறு இராமன் பரதனை வேண்ட, அவனும் ஒரு சபதத்துடன் ஒருப்படுகின்றான்.

> **'ஆமெனில் ஏழிரண் டாண்டில் ஐய !நீ**
> **நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்**
> **கோமுறை புரிகிலை என்னில் கூர்எரி**
> **சாம்இது சரதநின் ஆணை சாற்றினேன்[45].**

இதில், "அண்ணா, நீ பதினான்கு ஆண்டு கழிந்ததும் ஒரு நாள் கூடத் தாமதிக்கலாகாது; அங்ஙனம் வாராமல் ஒருநாள் தாமதித்தாலும், எரி தழலில் மூழ்கி என் உயிரை மாய்ப்பேன். உன் மேல் ஆணை" என்று சூளுரைக்கின்றான். இராமகாதையைக் கற்போர் அனைவரும் இதனை நன்கு அறிவர்.

இராமன் இந்த வாக்குறுதியைக் கடைப்பிடித்தானா? இல்லை என்பதே மக்கள் தீர்ப்பு. இராமன் முதலியோர் புட்பகவிமானத்தில் வந்துகொண்டுள்ளனர். இதனை

45. அயோத்தி – திருவடி – 133

அறிந்த பரத்துவாசர் இருடிகள் சூழ இராமனை எதிர் கொள்ளச் செல்லுகின்றார். இதனைக் கண்ணுற்ற இராமன் புட்பக விமானத்தை இறங்கச் செய்கின்றான். இராமன் விரைவாக முனிவர் எதிரில் சென்று வணங்க இருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு மகிழ்கின்றனர்.

பரத்துவாசர் 'இன்று எம் விருந்தாளியாக இருக்க' என்று இராமனை வேண்ட அவனும் அவ்வாறே ஒருப்படுகின்றான். "பரதன் உயிர் பெரிதா? முனிவர் அளிக்கும் விருந்து பெரிதா?" என்பதை ஓராது விருந்திற்கு இணங்கியது பெருங்குற்றம். கணையாழியுடன் அநுமனைச் செய்தி கூறி அனுப்பினது சரியானாலும் விருந்திற்குத் தங்கினது சரியன்று. இதனால்தான் இராமன் **"சாப்பாட்டு இராமனாகின்றான்"** என்பது மக்கள் தீர்ப்பு.

**4. செய்ந்நன்றியறிதல்:** ஒருவருக்கொருவர் உதவி செய்யாவிடில், உலக வாழ்க்கை நடைபெறாது இவ்வாறு உதவுதல் ஓர் அறச் செயல்.

> **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)**

என்ற குறட்பாவில் இறுதிபகுதி செய்ந்நன்றியறிதலாகிய கடமையை வலியுறுத்துகின்றது. செய்ந்நன்றியறிதல் என்ற இந்த அறச் செயலுக்கு மாபாரதத்தில் கன்னனையும் இராமாயணத்தில் கும்பகருணனையும் எடுத்துக் காட்டுகளாக நம் முன்னோர் கொள்ளும் மரபும் உண்டு.

இக்குறளை மனத்திற் கொண்டு சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர் கிழார் பாடிய பாட்டொன்று உண்டு - புறநானூற்றில் அது,

> **ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
> **மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**

குரவர் தப்பிய[46] கொடுமை யோர்க்கும்
வழுவாய மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே (புறம் 34)

என்ற புறநானூற்றுப் பாடற் பகுதியால் தெளியப்படும்.

மழைக்காலம் கழிந்த அளவிலும் சுக்கிரீவன் முன்பு சொன்னபடி சேனையுடன் வந்திலன். இராமபிரான் சினங் கொண்டு கிட்கிந்தைக்குச் செய்தி அறிந்து வரும்படி இலக்குவனை அனுப்புகின்றான். தாரையிடம் பேசியபிறகு இலக்குவன் அநுமனை நோக்கி, "அந்தமில் கேள்வி நீயும் அயர்த்தனையாகும் அன்றோ?"[47] என்று கூற, அதற்கு மறுமொழியாக, அநுமன்,

சிதைவகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம்
மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்கொன் றேனும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ ?[48]

என்று பேசுவான். தாய்க் கொலை, தந்தைக் கொலை, ஆசான் கொலை, அந்தணன் கொலை, பசுக்கொலை, குழவிக் கொலை, பெண் கொலை என்னும் கொடும்

46. 'குரவர் தப்பிய' என்பது பழைய பாடம். ஔவை துரைசாமி காட்டியது. உ.வே.சா. பதிப்பில் 'பார்ப்பார் தப்பிய' என்றே உள்ளது. இத்திருத்தம் பரிமேலழகர் காலத்திலேயே செய்யப்பட்டுள்ளதென்பது அவர்தம் திருக்குறள் உரையால் அறியப்படும்.
47. கிட்கிந்தை – கிட்கிந்தை – 61
48. மேற்படி – 62

பாதகங்கெல்லாம் அப்பாவம் நீங்கும் பரிகாரமாகிய கழுவாய் உண்டு. செய்ந்நன்றி மறத்தலுக்கோ அஃது இல்லை" என்கின்றான்.

தொடர்ந்து "உங்கட்கும் அரிக்குலத்தரசனுக்கும் உண்மை பொருந்திய நட்பு உண்டாகும்படிச் செய்த செயல் அடியேனாலன்றோ நிகழ்ந்தது? அந்த நட்பு அறம் அழியுமானால், தப்பும் வழி சிநேகித்தவனான சுக்கிரீவனுக் கேயன்றி செய்வித்தவனான அடியேனுக்கும் உண்டோ?" என்று பேசி வேறு காரணங்களை முன் வைத்து இலக்குவனது சீற்றத்தைத் தணிவிக்கின்றான்.

செய்ந்நன்றி அறிதலைக் காட்டுவதற்கு இவ்விடமே யன்றி பிறிதோர் இடமும் உண்டு. வீடணன்தன் முன்னோன் கும்பகருணனை இராமபிரான் பக்கம் வந்து சேரும்படி வேண்டுகின்றான்.

ஏனக்கவன் தந்த செல்வத்
திலங்கையும் அரசும் எல்லாம்
நினக்குநான் தருவன் தந்துன்
ஏவலின் எளிதின் நிற்பன்[49]

என்று சொல்லி வேண்டுகின்றான். 'வேதநாயகனே உன்னைக் கருணையால் வேண்டிவிட்டான். ஆதலால் அவனைக் காணப் போதுவாய்' என வேண்டுகின்றான். பொன்னடி இரண்டும் தன் தலைமேல் பூண்டு வேண்டு கின்றான். அதற்குக் கும்பகருணன் மறுமொழியாக,

நீர்க்கோல வாழ்வை நச்சி
நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற்கு
உயிர்கொடாது அங்குப் போகேன்[50]

49. யுத்த. கும்பகருணன் வதை – 140
50. மேற்படி – 155

என்று சொல்லுகின்றான். வீடணன் தத்துவ ஞானி ஆதலால் ஆபாச பந்துவை விட்டு 'பெற்ற தாய் நீயே, பிறப்பித்த தந்தைநீ, மற்றையாராவாரும் நீ' என்ற குறிக்கோளுடன் எல்லாவகை உறவினனுமான கடவுளைப் பற்றினான். அப்படிப்பட்ட தத்துவஞானமில்லாத கும்ப கருணனோ அறநெறிக்குப் புறம்பாய் நடக்கும் இராவணனிடத்தும் மாற்றானைச் சேர்ந்து அறநெறி வழுவாது நடக்கும் வீடணனிடத்தும் உடன்பிறப்பின் நசையை ஒருபடிக் கொண்டு பேசுகின்றான். இது கும்பகருணனின் மனநிலை. தான் உறங்கி எழுந்திருக்கும் போதெல்லாம் தனக்கு மது மாமிசம் முதலியவற்றைத் தயாராக வைத்துக் கொண்டு ஊட்டி வளர்த்ததை நினைவிற் கொண்டு "நெடிது நாள் வளர்த்து" என்கின்றான். தன்னால் இயன்றவரையில் தம்பி பொருவான் என்ற நம்பிக்கையோடு இராவணன். இருக்கையில் தான் இராமனைச் சேர்வது நம்பிக்கைக்குப் பங்கம் விளைவிக்கும் குற்றவாளியாவதால் அவ்வாறு செய்ய ஒருப்படாத நிலையை 'போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது அங்குப் போகேன்' என்று புலப்படுத்துகின்றான். இந்தச் சொற்றொடர்,

> கார்க்கோடற் பூக்காள் ! கார்க்கடல்
> வண்ணன் என்மேல் உம்மைப்
> போர்க்கோலம் செய்து பொர்ரவிடுத்தவன்[51]

என்ற சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் பாசுரப் பகுதியை நினைக்கச் செய்கின்றது.

மேலும் கூறுவான்: "ஆலோசனை இல்லாத தலைவன் தீச்செயலைப் புரியக் கருதினால் அதனைத் தடுத்து அவனைத் திருத்தக் கூடுமாயின் திருத்துதல் நற்செயல்தான். அங்ஙனம் திருத்தமுடியாவிட்டால் மாற்றாரைச்

51. நாச். திரு. 10:1

சேர்தலால் தகுதி உண்டோ? ஒருவருடைய சோற்றை உண்டவர்க்கு உரிய செயல் போருக்கு உரிமையுடைய வராயிருந்து ஒப்பற்ற தலைவர்க்கு முன்னம் சாதலேயாகும்”[52]

இன்னும் கூறுவான்: ‘மூவுலகையும் ஒருங்கே அரசோக்கிய என் அண்ணன், மாவீரனாகிய இராமன் சுடுசரம் செலுத்துகையில் ‘வெம்புவெஞ் சேனையோடும் வேறுளகிளைஞரோடும், உம்பரும்’பிறரும் காண, தம்பியை யின்றி மாண்டு கிடப்பானோ மண்மீது?”[53]

இவ்வாறு தன் செய்ந்நன்றி அறிதலைப் புலப்படுத்து கின்றான் கூற்றையும் ஆடல் கொண்ட கும்பகருணன்.

**5. ஈகை:** மக்களிடம் அமைய வேண்டிய இன்றியமையாத பண்பு ஈகை. இஃது இயல்பாக அன்புடையாரிடம் காணப்பெறும். வறியவர்க்குத் தம்மால் ஆன உதவியைச் செய்து வறுமைத் துன்பத்தைத் தீர்க்க முயல்வதே அன்புடையாரின் கடமை; இதுவே **ஈகை** எனப்படும். ஈகை என்ற பெயரால் பொருள் உடையவர்க்கே மேலும்மேலும் கொடுத்து உதவுவதால் பயன் இல்லை; அஃது ஈகையும் ஆகாது. வறியவர்க்குத் தம்மால் இயன்ற ஒன்றை ஈவதே ஈகை ஆகும்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை[54] என்பது வள்ளுவர் வாக்கு. வறுமை அற்றவர்கட்குப் பொருள் கொடுத்தல் ஈகை அன்று. அஃது ஒரு பயன் நோக்கிக் கொடுத்து வாங்கிக் கொள்ளும் முறையே யாகும்.

**......மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து (221)**

என்பது அப்பெருமானின் உண்மையுரை.

52. மேற்படி – 157
53. மேற்படி – 158
54. குறள் – 221

இக்கால நிலைக்கேற்ப பொது நிறுவனத்திற்கு நாட்டின் நலன்விளையும் என்று கருதியோ கொடுப்பதும் சிறந்த கொடையாகும். இத்தகைய கொடை தானாக ஒருவரின் உள்ளுணர்வால் ஏற்படுவதாக இருப்பின் அதுவும் சிறந்த கொடையாகக் கருதப்பெறும் . ஈவதில் ஒரு தனி இன்பம் உண்டு. இந்த இன்பம் குழந்தைகட்கும் தெரியும், அதனால் குழந்தைகள் சிலசமயங்களில் தம்மிடம் உள்ளவற்றைப் பிறருக்குக் கொடுப்பதை ஒரு விளையாட்டாகக் கொடுத்து மகிழும். வள்ளல் அழகப்பர் குழந்தை மனம் படைத்தவர். ஈத்துவக்கும் இன்பம் கண்டவர். பத்தாண்டுகட்கு மேல் (1950–60) அவர் நிறுவிய கல்லூரி ஒன்றில் பணியாற்றிய நான் இதனை நேரில் கண்டு மகிழ்ந்தவன். மின்சார வேதியியல் ஆய்வு நிறுவனத்தைக் காரைக்குடியில் தொடங்குவதற்கு பதினைந்து இலட்சம் வெண் பொற்காசுகளும் நூறு ஏக்கர் நிலமும் விழா வொன்றில் வழங்கியபோது அவர் முகத்தில் **'ஈத்துவக்கும் இன்பம்'** ஒளிரக் கண்டேன். இப்படி அவர் வாழ்வில் பல சந்தர்ப்பங்களை நேரில் கண்டு மகிழ வாய்ப்புகள் பெற்றவன் அடியேன்.

வள்ளல் ஏ.வி.மெய்யப்பச்செட்டியாரும் அவர் குடும்பமும் இத்தகைய பண்பு அமையப் பெற்றவர்கள். புலவர்களைப் போற்றும் புரவலர்களில் சிறந்தவர்கள், இந்த இராஜேசுவரி திருமணமண்டபத்தை பல்வேறு பொது நிகழ்ச்சிகட்கு இலவசமாக வழங்கி வருவதைத் தமிழகம் நன்கு அறியும். அறநெறி உணர்ந்தவர்கள் ஈயாமல் வாழ முடியாது.

இனி கம்பன் காவியத்தில் ஈகை பற்றி வரும் இடங்களைக் காண்போம். நாட்டு வளத்தைக் கூறும் கவிஞன்,

வண்மை இல்லையோர்
வறுமை இன்மையால்[55]

என்பான். "கொள்வாரிலாமையால் கொடுப்பார்களும் இல்லை மாதோ". என்பது அறியத் தக்கது. ஆதலால் இங்கு ஈகைக்கு இடமில்லை என்று கருதுதல் கூடாது. தசரதனின் சிறப்பைக் கூறும் கவிஞன்,

ஈந்தே கடந்தான்
இரப்போர்க்கடல்[56]

என்பான்.

மாவலியின் வரலாற்றை விசுவாமித்திரன் இராமலக்குமணர்கட்குக் கூறுங்கால் ஈகை பற்றிய குறிப்பு வருகின்றது. மாவலி உதாரகுணமுடையவன் என்பதை,

வேண்டினர் வேட்கையின் மேற்பட வீசி
நீண்டகை யாய் !இனி நின்னுழை வந்தோர்
மாண்டவர்; அல்லவர் மாண்பிலர்[57]

என்ற வாமனன் வாக்கால் அறியலாம். வாமனனுக்கு "மூவடிமண்" தர ஒப்புக் கொள்ளுகின்றான் மாவலி. உடனே அவன் குலகுருவான சுக்கிரன் "உலகம் உண்ட பெரு வாயனே' 'ஆலமர் வித்தின் அருங்குறளாக' வந்துள்ளவன்' என்று கூறித் தடுக்கின்றான். அதற்கு மாவலி, "யாவரினும் சிறந்த திருமாலே தனது பெருமையனைத்தை யும் இழந்து சிறு யாசகனாய் என்னிடம் வந்து ஒரு பொருளைத் தருமாறு வேண்டுவானானால் அவனுக்கு அதனைக் கொடுத்துப் பெருமை பெறுதலினும் மிக்க சிறப்பு வேறொன்று உள்ளதோ? இதில் என்கை உயர்ந்து, அவன்

55. பாலகா. நாட்டுப் – 53
56. மேற்படி. அரசியல் – 5
57. மேற்படி. வேள்வி – 24

*கை தாழ்ந்திருப்பதால் எனக்குத்தானே பெருமை?" என்கின்றான்.*

*மேலும் கூறுவான்:*

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என் ?சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்[58]

*என்பது காண்க. இதில்,*

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (222)

*என்ற குறளின் கருத்து ஈண்டு வந்துள்ளதைக் கண்டு மகிழலாம். தொடர்ந்து,*

மாய்ந்தவர் மாய்ந்தவர் அல்லர்;கண் மாயாது
ஏந்திய கைக்கொடு இரந்தவர் எந்தாய்
வீந்தவர் என்பவர் வீந்தவ ரேனும்
ஈந்தவர் அல்லர் இருந்தவர் தாமே[59]

*(வீந்தவர் - இறந்தவர்)*

*என்று கூறுவான். இரந்து உயிர் வாழ்வார் உயிரோடிருப் பினும் இறந்தவர்களே; ஈந்து வாழ்ந்தவர் உயிர் இறப்பினும் உயிரோடு இருப்பவர்களே என்ற கருத்தை இதில் காணலாம்.*

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிரீஇத் தாம்மாய்ந் தனரே[60]

*என்ற கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.*

58. பாலகா. வேள்வி – 29
59. மேற்படி – 30
60. புறம் – 165

மேலே மாவலியின் வாய்மொழியாக ஈவோரின் சிறப்பைக் கூறிய கவிஞன், கொடுப்பதைத் தடுப்பதன் கொடுமையையும் கூறுவான். ஒருவருக்கு மற்றொருவர் கொடுப்பதை இடையிலேயிருந்து தடுப்பவர், அக் கொடுப்பவரை கொடாமையாலாகிய பாவத்துக்கு இலக்காக்குவர்; அன்றித் தாமும் தானம் விலக்கிய பாவத்தின் மிகுதியால் கெட்டழிவர்[61]. வெளிப்படையாகத் தீங்கு செய்பவரால் நேர்கிற துன்பத்தினின்றும் தப்புதல் எளிது; உடனின்று கெடுக்கின்ற அனுகூலப் பகைவர் களாகின்ற துன்பத்தினின்றும் தப்புதல் அரிது. 'ஈவது விலக்கேல்'[62] என்றார் ஒளவைப் பாட்டியும்,

> அழுகாறு உடையார்க்கு அதுவேசாலும் ஒன்னார்
> வழுக்கியும் கேடீன் பது (195)

என்று வள்ளுவர் பெருமானும் கூறியிருப்பவற்றை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

கொடுப்பதை விலக்குகின்றவர்களைக் கொடையாளி கட்குப் பகைவர் என்று கூறிய கவிஞன், அவர் கொடுக்கும் போது உலோபகுணத்தை விடக்கூடாது என்று உபதேசித்து அக் கொடுத்தலுக்குத் தடைசெய்பவர்கள் உட்பகைவர்கள் ஆவர். இங்ஙனம் இதுகாறும் சுக்கிரனைப் படர்க்கையாகக் கொண்டு கூறிய கவிஞன், இப்போது முன்னிலைப் படுத்திக் கூறுவான். "கொடையாளி ஒருவன் இரவலனுக்கு ஒரு பொருளை எடுத்துக் கொடுப்பதன் முன்னம் தடைசெய்யும் குருவாகிய உங்கட்கு அழகன்று. இக்கொடுஞ்செயலின் பயனால் உமது சுற்றம் உடுக்க உடையும் உண்ண உணவும் இல்லாதபடி ஆய்வீர்" என்கின்றான் மாவலி, இதில்,

61. பாலகா. வேள்வி – 31
62. ஆத்திசூடி – 4

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166)

*என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்தையே மாவலியின் வாய்மொழியாகக் கூறுவான்.*

*இவ்விடத்தின் தசரதனின் கொடைநலத்தைக் கூறும் கவிஞன்.*

"ஈந்தே கடந்தான்
இரம்போர்க்கடல்"[63]

*என்று விளக்குவான். இங்ஙனம் ஈகை என்ற பண்பாட்டுச் சிறப்பு ஒருவாறு காட்டப்பெற்றது.*

63. பாலகா. அரசியல் – 5

5

# நம்பிக்கைகள்

"மானிடப் பிறப்பு கிடைத்தற்கரியது; இந்தப் பிறப்பிலும் கூன், குருடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது. இப்படிப் பிறந்தாலும் ஞானமும், கல்வியும் பெற்று வாழ்தல் அதனினும் அரிது". இப்படி ஒரு நம்பிக்கை; நம்முன்னோர் கொண்டு வழிவழியாக வந்து கொண்டிருக்கும் நம்பிக்கை. நம் பிறப்பு வட்டங்களை மணிவாசகப் பெருமான்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாம் பிறப்பும் பிறந்திளைத்தேன்[1]

என்று அருளிச் செய்கின்றார். உயிர் வகைகளையும் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு வரை வகைப் படுத்தி விளக்கும் மரபு பண்டைய இலக்கணமாகிய தொல்காப்பியத்திலேயே காணக்கிடக்கின்றது. வழிவழியாக வரும் இத்தகைய நம்பிக்கைகள் மக்கட் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இவை காவியங்களில் இடம் பெறுகின்றன.

1. திருவா. சிவபுரா. அடி 26–31

1. சாபம்: பெரியோர்கள், முனிவர்கள், தவசிகள் — ஏன்? சாதாரணமக்கள்கூட — தகாத செயல்கள் நடைபெறும்பொழுது அவற்றைப் பொறுக்காமல் செயல்புரிந்தோரைச் சபிப்பதைக் கண்டு அஞ்சும் நம்பிக்கை இருந்து வந்ததைக் காவியங்களில் காணலாம். சிலப்பதிகாரத்தில் ஒன்றைக் காட்டுவேன். கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் ஆகிய மூவரும் காவிரியின் தென் கரையை அடைந்து ஒரு பூம்பொழிலில் தங்கியிருக்கின்றனர். அவ்வழிப் போந்த ஒரு பரத்தையும் தூர்த்தனும் அங்கு வந்தனர். அவர்கள் கவுந்தி யடிகளை நோக்கி "தவப் பெரியீர், நும்மொடு போந்த இவர்கள் யாவர்?" என்று வினவ, கவுந்தியடிகள், "இவர்கள் என் மக்கள்" என்று மறுமொழி கூற, உடனே அவர்கள் "உடன்பிறந்தோர் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்தல் முறையா? நீதி நூல்களில் அதற்கு இடம் உண்டா?." என்று வினவினர். இதனைக் கேட்ட கண்ணகி இரு செவிகளையும் பொத்திக் கொண்டு, கணவன் முன் நடுங்கி நிற்கின்றாள். உடனே கவுந்தி அடிகள்,

> எள்ளுநர் போலும்இவர் என்பூங் கோதையை
> முள்ளுடைக் காட்டில் முதுநரி யாகெனச்

சாபம் இடுகின்றார். உடனே அவர்கள் நரிகளாகி நெடுங்குரலிட்டுக் கூவத் தொடங்கினர். இதனைக் கேட்ட கோவலனும் கண்ணகியும் அவர்கள்மீது இரக்கம் கொண்டு,

> நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
> அறிவா மைஎன்(று) அறிதல் வேண்டும்
> செய்தவத் தீர்தும் திருமுன் பிழைத்தோர்க்கு
> உய்திக் காலம் உரையீ ரோஎன

என்று வேண்டுகின்றனர். அடிகளும், "தமது அறியாமை காரணமாக இன்று நரிப்பிறவி உற்ற இவர்கள் உறையூர் மதிற் புறமாகிய காவற்காட்டில் திரிந்து பன்னிரண்டு

மாதங்கள் துன்பத்தினால் வருந்தியபிறகு முன்னைய உருவம் பெறுவார்களாக" என்று சாப விடையும் தருகின்றார்[2].

சிலப்பதிகாரத்தில் பிறிதோரிடத்தில் இச்சாபம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. கண்ணகிபால் வந்து தோன்றிய மதுராபதி தெய்வம் கோவலனின் முற்பிறப்பில் அடைந்த சாபம் பற்றிக் கூறுகின்றது. முன்பு கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரத்திலும் கபிலபுரத்திலும் இருந்த வசு என்பவனும் குமரன் என்பவனும் தாயவேந்தர்கள். இவர்கள் தம்முள் பகை கொண்டு ஒருவரையொருவர் வெல்லுவதற்கு முயன்று கொண்டிருந்தனர். அதனால் இருவருக்கும் இடைப்பட்ட ஆறுகாத எல்லைக்குள் யாரும் இயங்காதிருந்தனர். சங்கமன் என்னும் வணிகன் பொருளீட்டும் வேட்கையால் தன் மனைவியோடு கரவில்சென்று சிங்கபுரத்தின் கடைவீதியில் அரிய கலன்களை விற்றுக் கொண்டிருந்தனன். அப்பொழுது அரசனிடத்துத் தொழில் செய்து கொண்டிருந்த பரதன் என்பவன் அந்த வணிகனைப் பகைவனுடைய ஒற்றன் என்று பற்றிச் சென்று அரசனுக்குக் காட்டிக் கொன்று விட்டனன். கொல்லப்பட்ட சங்கமன் மனைவியாகிய நீலி என்பவள் மிக்க துயரத்துடன் முறையிட்டுக் கொண்டு எங்கணும் திரிந்து பதினான்கு நாள் சென்ற பின் ஒரு மலையின் உச்சியையடைந்து கணவனைச் சேர்தற் பொருட்டு தன் உயிரை விடத் துணிந்தவள் "எனக்குத் துன்பம் செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தை அடைவாராக" என்று சாபம் இட்டுஇறந்தனள். அப்பரதனே கோவலனாகப் பிறந்தான். ஆதலால் கோவலனும் கண்ணகியும் இத்துன்பத்தை அடைந்தனர். இது சாப வரலாறு[3].

2. சிலப். புகார்க் – நாடுகாண் – அடி 222–244
3. சிலப். கட்டுரைக் காதை காண்க.

மணிமேகலையிலும் சாபத்தைப் பற்றிய ஒரு குறிப்பு உள்ளது. இச்சாபம் காயசண்டிகைக்கு ஏற்பட்டது, வடதிசையில் விஞ்சையர் உலகிலுள்ள காஞ்சனபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவள் காயசண்டிகை. இவள் தன் கணவனுடன் தென்திசையிலுள்ள பொதிய மலையின் வளங்களைக் காண்டற்கு வருகின்றாள், வழியில்கான்யாறு ஒன்றின் கரையிலிருக்கையில், விருச்சிகன் என்னும் முனிவன் ஒருவன் பாரணம் செய்வதற்குப் பனங்கனி போன்ற பருத்த நாவற்கனியொன்றைத் தேக்கிலையில் வைத்துவிட்டு நீராடச் செல்லுகின்றான். அக்கனியின் இயல்பினை அறியாத காய சண்டிகை அதனைக் காலால் சிதைத்துக் கெடுத்தாள். நீராடி மீண்டு வந்த முனிவன் அக்கனி தன்னால் சிதைந்தமையை அறிந்து சினந்து காய சண்டிகையை நோக்கி, "நங்காய், இக்கனி தெய்வத்தன்மை யுடையது. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை ஒரே கனியைத் தருவது இந்நாவல் மரம். இதனை உண்டோர் பன்னிரண்டு ஆண்டு பசி ஒழிந்திருப்பர். யான் பன்னிரண்டு ஆண்டு பட்டினியிருந்து ஒருநாள் உண்ணும் நோன்புடையேன். நான் உண்ணும் நாள் இந்நாளே. உண்ணக் கருதிய கனியும் இக்கனியே; இதனை நீ அழித்து விட்டாய்; ஆதலால் நீ வான்வழியே செல்லும் மந்திரத்தை மறப்பாய். யானைத் தீ என்னும் நோயால் பன்னிரண்டு ஆண்டு தீராப் பசிகொண்டு உழல்வாய்; பின்னர் இக்கனியை நான் உண்ணும் நாளில் பசியொழியப் பெறுவாய்" என்று சாபம் அளித்து சாபவிடையும் தந்து போயினன். இந்தப் பசி நோய் மணிமேகலை தன் அமுதசுரபியிலுள்ள ஒரு பிடிசோற்றால் தீர்ந்தது[4].

---

4. மணிமேகலை – உலக அறவி புக்க காதை காண்க.

கம்பன் காவியத்தில் இத்தகைய சாபங்கள் குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம்: இவைபற்றிய குறிப்புகளை மூன்று இடங்களில் காண்கின்றோம்.

முதலாவது: வேள்வி முடிந்து இராமலட்சுமணர்கள் விசுவாமித்திர முனிவரோடு மிதிலையை நோக்கிச் செல்லும்போது கௌதம முனிவனது மனைவி அகலிகை கல்லாய்க் கிடக்கும் இடத்தைக் காண்கின்றனர்.

மனையின் மாட்சியை அழித்துஇழி
மாதவப் பன்னி
கனையும் மேட்டுயர் கருங்கலோர்
வெள்ளிடைக் கண்டார்[5]

என்று இதனைக் குறிப்பிடுவான் கம்பன். அடுத்த கவிதையில் "எம் பெருமான் திருவடி சேர்பவர்கள் வினைகள் ஒழிந்து புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கையை ஒழித்து ஒளிமயமான உருவத்தை அடைதல் போல, இராமனது திருவடிப் பொடி சேர்ந்த இவள் சாபம் ஒழிந்து கல்லுருவம் மாறி நல்லுருவம் பெற்றாள்" என்று கூறுவான்.

விசுவாமித்திரர் இந்த சாபவரலாற்றை ஒன்பது பாடல்களால் தெரிவிக்கின்றார்[6]. இறுதிப் பாடலில்,

மைவண்ணத் தரக்கி போரின்
மழைவண்ணத் தண்ண லேஉன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்
கால்வண்ணம் இங்குக் கண்டேன்[7]

என்று இராமனைப் புகழ்கின்றார் முனிவர். இந்த வரலாற்றை கவிஞர் வாலியின் வாக்கில் புதுக் கவிதையால் கூறுவேன்.

5. பாலகா. அகலிகைப் – 70
6. பாலகா. அகலிகைப் – 74–82
7. மேற்படி 82

ஒருநாள்—
விடியாப் பொழுதில் — இரவு
முடியாப் பொழுதில்

கௌதமன் வாழும்
குடிலின் வாசலில்
கொண்டைச் சேவலாய்க்
கூவினான் இந்திரன்!

முனிவன்—
விடிந்தது என்று
விழித்துக் கொண்டான்;
குளிர்நதி தேடிக்
குளிக்கச் சென்றான்!

இந்திரன்—
இதுதான் தருணம்
என்று துணிந்தான்!—கௌதம
முனிவன் போலே
வேடம் புனைந்தான்!

அகலிகை யாளை
ஆரத் தழுவினான்;
அடக்கிய ஆசை
தீரத் தழுவினான்!

கணவன் என்றே காரிகை நினைத்தாள்
கட்டிய கைக்குள் தன்னைப்
புதைத்தாள்!

அருள்பிரியாத அருந்தவ முனிவன்
நதிக்கரை நோக்கி நடக்கும் பொழுது
இருள் பிரியாமல்
இருந்தது கண்டான்.

சூது நிகழ்ந்ததை
சாது உணர்ந்து—
மறுகண மேதன்
மனைக்கு வந்தான்.

வானை ஆளும் வேந்தன் உடனே—
பூனை வடிவில் புறப்பட லானான்!

பூனைக் கண்ணைப்
பார்த்தே யாரென
ஞானக் கண்ணால்
ஞானி அறிந்தான்!

'எதனை விரும்பி
இங்குவந் தாயோ—
அதுவே உனது
அங்கம் முழுதும்
ஆயிரக் கணக்கில்
ஆகுக' என்று—
அந்தணன் சபித்தான்![8]

இல்லாள் கற்பே இல்லாள் என்று—
பொல்லாச் செயலைப் புரிந்தத னாலே

எல்லாக் காலமும்
எறும்புகள் ஊரும்
கல்லாய்க் கிடக்கக்
கட்டளை யிட்டான்!

---

8. ஆயிரம் மாதர்க்கு உள்ள
அறிகுறி உனக்குண் டாகென
ஏயினன்; அவையெ லாம்வந்து
இயைந்தன இமைப்பின் முன்னம்

— அகலிகைப் - 78

என்பது கம்பன் வாக்கு.

பாபம் எதுவும்
புரியாப் பேதை—
சாபம் கொண்டதும்
கோபங் கொண்டாள்![9]

இது—
பெண் பிழை யல்ல;
புல்லன் ஒருவன் புருஷன் வேடம்
புனைந்ததை அறியாக்
கண்பிழையாகும்!

கணவன் என்றே,
கருதிய பின்னே
கலவியில் நானும் கலந்தது எப்படி
என் பிழையாகும்?

பாவி யொருத்தன்
சேவலைப் போலே—
கூவிய உடனே குளிக்கப் போனது
உன்பிழை யாகும்.

என்னைப் போலே
இந்திர னாலே—
நீயும்தானே
ஏய்க்கப் பெற்றாய்!

9. இவள் பாரதியார் காட்டும் புதுமைப் பெண். பெண்கள் சம உரிமைக்குப் போராடும் காலத்தவள். ஆகவே கோபங் கொண்டு வாதாடுவள். கம்பன் காலத்து அகலிகையோ,

பிழைத்தது பொறுத்தல் என்னும்
பெரியவர் கடனே என்பர்
அழல்தரும் கடவுள் அன்னாய்!
முடிவுஇதற்கு அருளும் (அக. 80)

என்று சாப விமோசனம் வேண்டுகின்றாள்

'உன்பிழைக் குன்னைத்
தண்டித்த பின்னே
என்பிழைக் கென்னைத்
தண்டிக்க வேண்டும்!'

அகலிகை இங்ஙனம்
ஆற்றிய உரையை—
கௌதம முனிவன் கருத்தில்
கொண்டான்.

'வருவான் ஒருநாள்
தசரத ராமன்
தருவான் உனக்கு
விடுதலை' என்றான்.

கதையை முடித்து—
கௌசிகன் பேசினான்:

'ஹே! ராமா
இந்நாள் அகலிகை—
உன்னால் தனது சாபம் தீர்ந்தாள்
முன்னாள் அமைந்த—
பொன்னார் மேனியை மீண்டும்
சேர்ந்தாள்!

பிழைத்த பெண்மை
பிழைத்தது இன்று;
பிழைக்க வைத்த உன்
பாதம் நன்று!

அக்கணம் கௌதமன்
அவ்விடம் வந்தான்! ஏற்கத் தக்கவள் இவளெனத்
தன்வசம் கொண்டான்!

இரண்டாவது: *தசரதனுக்கு நேரிட்ட சாபம். இதனை வாலிதன்* 'அவதார புருஷனில்' *காட்டவில்லை. குலசேகரப்*

பெருமாளும் 'அங்கண் நெடுமதிள்' (பெரு.திரு.10) என்ற தொல்லிராமனாய்த் தோன்றிய கதை முறையில் இதனைக் குறிப்பிடவில்லை. 'பரதன் ஆளட்டும்: இராமன் காடு செல்லாதபடி மன்னவனை வேண்டுவேன்' என்று கோசலை மன்னன் உள்ள கைகேயியின் மனைக்கு வருகின்றாள். ஒரு கட்டத்தில் கோசலையிடம் தனக்கு முன்னே நேர்ந்த சாபத்தைக் கூறுகின்றான். கம்பன் இதனைப் பதினேழு கவிகளால் விளக்குவான்[10] தான் ஒருநாள் வேட்டைக்குச் சென்றதையும், அக்காட்டில தவஞ் செய்து கொண்டிருந்த தன் தாய்தந்தையருக்கு குடிநீர் கொணர்வதற்கு நதியில் சென்று நீர் முகக்கும்போது ஏற்பட்ட ஒலி தொலைவிலிருந்த தனக்கு ஒரு யானை நீர்பருகும் ஒலி போல் கேட்க தான் அறிந்த 'சப்த வேதி' என்னும் வித்தையின் மகிமையால் அவ்வொலி தோன்றிய இடத்தை இலக்காக வைத்து ஓர் அம்பை எய்ய, அது முனிகுமாரனைக் கொன்றதையும், இறக்குமுன் நீர் விடாயால் தவிக்கும் தன் தந்தைக்கும் நீர் கொண்டு ஏகுமாறு பணித்ததையும், நீர் கொண்டு சென்று இருமுது குரவர்களிடம் விவரம் கூறியதையும், அவர்கள் புத்திரன் பிரிவதால் ஏற்படும் சோகத்தால் தனக்கு உயிர் துறக்கும் சாபம் இட்டதையும் விரிவாய்க்கூறி இராமன் கானகத்திற்கு ஏகுவதும் அதனால் தன் உயிர் போவதும் சிறிதும் தவறாது என்றும் கூறினான். இதனால் மக்கள் சாபத்தின் பலனில் நம்பிக்கை வைத்திருப்பதையும் அறிய முடிகின்றது.

மூன்றாவது: இராவணனுக்கு நேரிட்டசாபம். சாபம் பற்றி ஒரு குறிப்பு கிடைக்கின்றது.

இராவணன் திக்குவிசயம் செய்கையில் தேவலோகத்துக்குச் செல்லப புறப்பட்டுக் குபேரனது அளகாபுரியின் அருகில், குபேரனது மகன் நளகூபரனை

10. அயோத். நகர்நீங்கு (74–90)

*நோக்கிச் சென்று கொண்டிருந்த அவனது காமக் கிழத்தியான புஞ்சிகஸ்தலையைக் காண்கின்றான். கண்டவன் அவள்மீது காமுற்று அவளை வலியப் பிடித்துக் கற்பளிக்க, அவள் வருந்திச் சினந்து "நீ எந்த மகளிரையேனும் அவர் உடன் பாடின்றி வலியத் தீண்டின் அவர்களது கற்பின் கனலால் எரித்தழிவாய்' என்று வைதாள். இச்செய்தியை அறிந்த நளகூபரனும், 'இனி, இராவணன் ஒருவருக்கு உரிய மாதரை வலியத் தீண்டு வானாயின், தலை வெடித்து இறக்கக்கடவன்' என்று சபித்தான்..*

**2. ஊழ்பற்றிய நம்பிக்கை:** *ஊழைச் சாதாரண மக்கள் தலைவிதி என்று வழங்குவர். பாமரர் முதல் படித்தவர் வரை இதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இதற்கு இலக்கியங்களில் நிறையச் சான்றுகள் உள்ளன. புறநானூற்றில் உள்ள* 'யாதும் ஊரே' *(புறம் - 192) என்ற கணியன் பூங்குன்றனார் பாட்டில் இக்குறிப்பு வருகின்றது.*

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே

. . . . . . . . . . . . . . . . . . . .

கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீரவழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்; ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

*என்ற பாடற் பகுதியில் இதனைக் கண்டு மகிழலாம்.*

*திருக்குறளில் 'ஊழ்' பற்றி ஒருதனி அதிகாரமே உண்டு. பத்துக் குறட்பாக்களில் இக்கருத்துகள் தெளிவாக விளக்கப்பெறுகின்றன. மக்கள் மனம் கொண்டு வாழும்*

வாழ்க்கையில் நிகழும் எழுச்சி - வீழ்ச்சி, உயர்வு - தாழ்வு, ஆக்கம் - கேடு, நன்மை - தீமை, உடைமை - வறுமை, இன்பம் - துன்பம் முதலிய பலவும், ஏதோ ஒருவகை ஒழுங்கு முறைக்கு உட்பட்டே அமைந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஒழுங்கான ஆட்சி முறையை ஆராய்ந்து அறிவது அருமை; ஆனால் அவை உண்டு என்று உணர்வது எளிது. இத்தகைய ஆட்சி முறையைத்தான் நம் முன்னோர் 'ஊழ்' என்று குறித்துப் போந்தனர்.

மனித வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் ஒரு பேருண்மை புலனாகும். செல்வம் சேர்தல், நுகர்தல் முதலிய புற வாழ்க்கைப் பகுதிகளில் ஊழ் தலையிடுவது போல், அறிவு, ஒழுக்கம், அடக்கம், அவாவின்மை முதலிய நற்பண்புகளைப் பெறும் அகவாழ்க்கைப் பகுதிகளில் ஊழ் தலையிடுவதில்லை. புற வாழ்க்கைப் பகுதியில் ஊழின் துணை இருந்தாலன்றி நினைத்தவாறு பெற முடியாது. அகவாழ்க்கைப் பகுதியில் ஊழ் அவரவர்க்கு உரிமை கொடுத்துள்ளது. ஆக வாழ்க்கையில் வேண்டிய வேண்டியாங்கு என்று (குறள் 265) வள்ளுவப் பெருமான் கூறியுள்ளது உண்மையாகும்.

இந்தப் பூவுலகில் இதுகாறும் அறிவுடையவராக விரும்பி முயன்றவர் அறிவு பெறாமல் இருந்ததில்லை; அடக்க உடையவராக வாழமுயன்றவர் அதைப் பெறாததும் இல்லை; ஒழுக்கத்தைப் போற்றி வாழ முயன்றவர் விரும்பியவாறு அதைப் பெறத் தவறியதும் இல்லை; அவா அறுக்க வேண்டும் என்று உண்மையாக முயன்றவர் முயற்சியின் பயனைப் பெறாததும் இல்லை; இவ்வாறே மற்ற நற்பண்புகளை விரும்பிப் பாடு பட்டவர்கள் அவ்வவற்றை அடைந்து முன்னேறியுள்ளதை நாம்காணத்தான் செய்கின்றோம், ஆனால் செல்வம் பெறவேண்டும் என்று விரும்பிப் பாடுபட்ட எல்லோரும்

செல்வம் பெறவில்லை. பாடுபட்டவர்களில் ஒரு சிலரே. செல்வம் பெற்றுள்ளனர். பாடுபடாமல் செல்வத்தைப் பற்றிக் கனவுகாணாமலிருந்த சிலரும் பெற்றுள்ளனர். பெற்ற செல்வத்தை நுகர்வதிலும் இந்த உண்மையைக் காண முடிகின்றது. கருதியவாறு பொருள்களை நுகர வேண்டும் என்று விரும்பிய எல்லோரும் நுகர்வு பெறவில்லை; அவர்களுள் சிலரே பெற்றுள்ளனர். இவ்வாறு ஆராய்ந்தால், புறவாழ்க்கைத் துறைகளில் ஊழின் அமைப்புக்கு ஏற்றவாறே எல்லாம் நடைபெற்று வருதலையும், அகவாழ்க்கைத் துறைகளில் ஊழ்மக்களுக்கு உரிமை கொடுத்திருத்தலையும் காணலாம்.

இந்த ஊழைப் பற்றிய கருத்துகள் தமிழ்க் காவியங்களில் அமைந்திருத்தலைக் கண்டு மகிழலாம். சேரன்தம்பி இசைத்த சிலம்பில் 'ஊழ்வினை' உறுத்து வந்து ஊட்டுவதைப் பல இடங்ககளில் அமைத்துக் கோவலன் வாழ்க்கை காட்டப் பட்டிருத்தலைக் காணலாம். விதிபற்றிய செய்தியைத் தருமன் வாக்கில் வைத்து பாரதி பாஞ்சாலி சபதத்தில்,

> கைப்பிடி கொண்டு சுழற்றுவோன்—தன்
> கணக்கில் சுழன்றிடும் சக்கரம்—அது
> தப்பி மிகையும் குறையுமாச்—சுற்றும்
> தன்மை அதற்குள தாகுமோ ?—இதை
> ஒப்பிட லாகும் புவியின்மேல்—என்றும்
> உள்ள உயிர்களின் வாழ்விற்கே—ஒரு
> செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
> செய்திகள் தோன்றிடு மாயினும்
>
> இங்கிவை யாவும் தவறிலா—விதி
> ஏற்று நடக்கும் செயல்களாம்;—முடி
> வெங்கணும் இன்றி எவற்றினும்—என்றும்
> ஏறிஇடையின்றிச் செல்வதாம்—ஒரு

சங்கிலி யொக்கும் விதிகண்டீர்;–வெறுஞ்
சாத்திர மன்றிது சத்தியம்[11]

என்று கூறுவான்.

விதுரனின் அமைப்பை ஏற்று அத்தினபுரத்துக்குப் பயண மாதலைக் கூறும் பாரதி,

தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்
திருநகர்விட் டகல்கின்றான் தீயோர்ஊர்க்கே !
நீங்கிஅகன் றிடலாகும் தன்மை உண்டோ
நெருங்கரத்து விதிகாட்டும் நெறியில் நின்றே ?[12]

என்று கூறுவான். காவியத்தின் இறுதியில் சபதச்சருக்கத்தில் திரௌபதி ஆடை குலைவுற்று நிற்கின்றாள் துச்சாதனனின் உலகம் கேட்டிராத செயலால். சீறி எழுந்த வீமனின் சினக் கதிர் எழும் பேச்சில்,

இது பொறுப்ப தில்லை–தம்பி
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான்–அண்ணன்
கையை எரித்திருவோம்[13]

என்று கனல் தெறிக்கக் கூறுகின்றான். இதனைக் கேட்ட பார்த்தன்,

சினமான தீஅறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்
'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்' எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்;

11. பாரதி பாஞ்சாலி சபதம் – 138, 139
12. மேற்படி – 145
13. மேற்படி – 281

கருமத்தை மேன்மேலும் காண்போம்; இன்று
கட்டுண்டோம் பொறுத்திருலிபோம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுஉண்டு காண்டீபம் அதன்பேர்[14]

என்று 'விதியின் சதி'யையும் 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்ற உண்மையையும் உரைப்பான்.

இந்த ஊழ்பற்றிய நம்பிக்கை கம்பன் காவியத்தில் பொதிந்திருக்கும் ஓரிரு இடங்களைக் காட்டுவேன். இலக்குவன் இராமனுடன் கானகம் வருவதாக வற்புறுத்திச் சொன்னபோது இராமன் ஒன்றும் பேசாதவனாகி தம்பியின் வதனத்தை நோக்கிக் கண்ணீர் பெருக்கி நிற்கின்றான். அப்போது வசிட்டன் வருகின்றான். இரண்டு அரச குமாரர்களும் சென்னிதாழ்த்தி வணங்குகின்றனர். அப்போது வசிட்டன் கருதுவது: "மணிமுடி சூடி வாழ்வதற்குரிய நன்னாளில் தீவினைவந்து சேர, பீதாம்பரம் அணிதலை யொழிந்து மரவுரியைத் தரித்தான்; விதிக்கடவுளாகிய நான்முகனே சூழ்ந்திட்டாலும், தீவினை யாகிய ஊழ்வினை செய்தவனையே சென்றடையக் கூடியதாதலால், அதனை ஒருவராலும் நீக்குதற்குரிய தன்மையை உடையதோ? கானகத்திற்குச் செல்லுவதாகிய இச்செயல் கைகேயியால் மாத்திரம் விளைந்ததன்று. புண்ணிய மூர்த்தியாகிய இராமனிடத்தில் அடைதற்குரிய தன்மை உடையதும் அன்று. எவ்வினையினால் நிகழ்ந்ததோ? எவருடைய ஆலோசனையோ? பின்னர் ஒருவழியாக செவ்விதின் புலனாகும்" என்கின்றான்[15]. 'தேவர்களின் சூழ்ச்சியால் இது நிகழ்ந்தது' எனப் பின்னர் விளங்கும் என்பது வசிட்டனின் உட்கோள். ஈண்டு ஊழ் பற்றிய நம்பிக்கை புலனாகின்றது.

14. மேற்படி – 283
15. அயோத்தி – நகர்நீங்கு – 164, 165

ஈண்டு,

**சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்**
**ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ ?[16]**

என்ற வசிட்டன் வாக்கு வள்ளுவப் பெருந்தகையின்

**ஊழிற் பெருவலி யாவுள ? மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்[17] (380)**

என்ற வாக்குடன் ஒப்பிடத் தக்கதாக அமைகின்றது. வள்ளுவனின் தாக்கத்தைக் கம்பன் காவியத்தில் பல இடங்களில் கண்டு மகிழலாம்.

சிற்றன்னையால் தனக்கு வழங்கப்பெற்ற இரு வரங்களின் பலத்தில் இராமனுக்கு நேரிட்ட 'வனவாசத்தைப்'பற்றிக் கேள்வியுறுகின்றான், இலக்குவன். 'மூட்டாத காலக் கடைத் தீயென மூன்றெழுகின்றான்' (115). 'உள் நிற்கும் உயிர்ப்பெனும் ஊதை பிறங்கநின்ற, அண்ணற் பெரியோன் தனது ஆதியின் மூர்த்தியொக்கின்றான்' (116). கைகேயியின் செயலை 'சிங்கக்குருளைக்கு இடு தீஞ்சுவை ஊனை நாயின், வெங்கட் சிறு குட்டனை ஊட்ட விரும்பினாளே' (117) என்று இகழ்ந்து போர்க்கோலம் பூண்டு நிற்கின்றான். இதனைக் காட்டும் வருணனையும், வீரமொழிகளும் படித்துப் படித்து மகிழத்தக்கவை.[18]

இலக்குவனின் 'நாண்உரும் ஏறு' தொலைவில் இருந்த இராமனின் செவியில் கேட்கின்றது. வருகின்றான் இராமன். எப்படி வருகின்றான்?

**வீறாக்கிய பொற்கலன் வீல்லிட**
**ஆரம் மின்ன**

16. மேற்படி – 164
17. திருக். அறம் – ஊ–10.
18. அயோத்தி – நகர் நீங்கு 118–122

மாறாத் தனிச்சொல் துளிமாரி
வழங்கி வந்தான்
கால்தாக்க நிமிர்ந்து புகைந்து
கனன்று பொங்கும்
ஆறாக் கனல்ஆற்றுமோர் அஞ்சன
மேகம் என்ன[19]

*தீப்பற்றி எரியும் இடங்களை அவிக்க வரும் தீயணைக்கும் பொறிபோல் வருகின்றான் என்று சொல்லி வைக்கலாம் 'ஆறாக் கனலை அவிக்க வரும் அஞ்சன மேகம்' போல் வருகின்றான் என்கின்றான். பொருத்தமான உவமைகளை அமைப்பதில் கம்பனுக்கு இணை கம்பனே.*

*இருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடலைக் கம்பன் கவிதையில் படித்து அநுபவித்து மகிழவேண்டும்[20] என் முன்னரும் குறிப்பிட்டுள்ளேன். விரிவஞ்சி விட்டு விடுகின்றேன். பின்னர் இதுகாறும் நடைபெற்றுவந்த வினைப்பயன்-ஊழின் செயல்-என்று எடுத்துக்காட்டியது ஊழ்பற்றிய நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றது.*

'நதியின் பிழையன்று நறும்புனல்
இன்மை; அற்றே
பதியின் பிழையன்று பயந்து
நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று; மகன்பிழை
யன்று மைந்த !
விதியின் பிழைநீ இதற்கென்னை
வெகுண்டது ?'[21]

*என்று விதியின் செயல் காட்டப் பெறுகின்றது. "ஊழ் வினையால் யான் முடிதுறந்து கானகம் ஏகுமாறு நேர்ந்தது.*

19. மேற்படி – 125
20. மேற்படி – 126–131
21. மேற்படி – 134

விதியினாலாட்டப் பெற்ற தந்தையார் முதலியோரிடத்து யாதும் குற்றம் இல்லை; தந்தையார் முதலியோரிடத்துக் குற்றம் கூறுவது எய்தவன் இருக்க அம்பை போவது போலாகும். ஊழை வெகுள்வது. தண்டிக்கப் பெற்ற தண்டனையை விதிக்கும் சட்டத்தின்மீது வெகுள்வதாகும். அன்றியும் ஊழை வெல்லுதல் எவ்வளவு வலிமை யோர்க்கும் இயலாது; ஆதலால் நீவெகுண்டு யாது பயன்?" என்று கூறி இலக்குவனைச் சமாதானப்படுத்துகின்றான் இராமன்.

இராமனின் மணிமுடிசூடும் விழாவின்பொருட்டு நகர் அலங்கரிக்கப் படுதலைக் காண்கின்றாள் கைகேயியின் தோழி மந்தரை. இதனைக் கவிஞன்,

இன்னல்செய் இராவணன்
　　இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக்
　　கூனி தோன்றினாள்[22]

என்று காட்டுவான். இராவணன் இழைந்த தீவினைகூனி வடிவில் தோன்றியதாக உருவகப் படுத்துகின்றான். மேலும்,

அரக்கர் பாவமும் அல்லவர்
　　இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள்
　　தூமொழி மடமான்
இரக்கம் இன்மையன் றோஇன்றுஇவ்
　　உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
　　பருகுகின் றதுவே[23].

எனறு கூறுவான். "இராக்கதாகள புரிந்த தீவினையும் தேவர்களும் முனிவர்களும் செய்த நல்வினையும் ஏவுதலால்

22. அயோத்தி – மந்தரை சூழ்ச்சி – 39
23. மேற்படி – 78

கைகேயியின் தூய உள்ளத்தை மாறுபடச் செய்தது. நாமும் இராமாயணமாகிய இக்காவியத்தின்மூலம் இராமனின் தொல்புகழ் அமுதினைப் பருகி மகிழ்கின்றோம்'' என்கின்றான் கம்ப நாடன்.

இராமன் கானகம் செல்வதைச் செவியுற்ற நகரத்தவர் அடைந்த வருத்தத்தைத் தெரிவிக்கும்போதும் ஊழ்பற்றிய குறிப்புகள் வருகின்றன. பலர் பலவாறு சொல்லி அழுகின்றனர். சிலர்,

> மண்செய்த பாவம் உளதென்பார்; மாமலர்மேல்
> பெண்செய்த பாவம் அதனிற் பெரிதென்பார்;
> புண்செய்த நெஞ்சை விதிஎன்பார்; பூதலத்தோர்
> கண்செய்த பாவம் கடலில் பெரிதென்பார்[24]

என்று சொல்லிச் சொல்லி அழுது விதியை நொந்து கொள்கின்றனர். இங்ஙனம் ஊழிபற்றிய நம்பிக்கை உரைக்கப்படுகின்றது.

**மாரீசன்:** எப்படியாவது சீதையைப் பெறவேண்டும் என்று திட்டம் போட்ட இராவணன் மாரீசனிடம் வந்து "தென்றலைப் பகையைச் செய்த சீதையைத் தருதி" என்றும் அதனை வஞ்சனையால் தர வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றான். "பிராட்டியைத் தொடுதற்கு முன்னமே இவனுடைய தலைகள் இராமன் கணையால் சிதறிப் போகும்படி செய்விப்பேன்' என்று கருதி தந்திரமாகச் சொல்லுகின்ற எனக்கும், பிழைக்கத் தக்க வழி உண்டாகவில்லை. **ஊழ்வினைப் பயனை அறிவார் யார்?** இனி இராவணன் ஏவியதைச் செய்வதல்லால் வேறொரு செயலுமில்லை'' என்று தீர்மானிக்கின்றான் மாரீசன். இராவணனும் "பொன்னின் மானாகிப் புக்குப் **பொன்னை** (சீதையை) மால் புணர்த்துக" என்று கூறுகின்றான்.

24. அயோத்தி – நகர் நீங்கு – 105

மாரீசனும் "மாயமான் ஆயினான்; மாய மான் ஆயினான்" (கிட்கிந்நட்புக்கோள்-11). விதி யாரை விட்டது? சுபாகு இராமன் கணையால் முன்னர் மாய்ந்தான். அப்போது தப்பிய மாரீசன் இப்போது இராகவன். கணைக்கு இரையாகின்றான். இராவணன் வாளுக்கு இரையாவதை விட இராமன் கணைக்கு இரையாவது மேல் என்று வந்தவன் இவன்.

**சடாயு:** இராமலக்குமணர்கள், மாயமான் மாண்டபிறகு, பர்ணசாலையை நோக்கி விரைந்து வரும் போது, சீதை அங்கில்லை. தேர்ச்சுவட்டின் வழியே வந்தனர். வீணைக் கொடி ஒன்று தரையில் கிடந்ததைக் காண்கின்றனர். தொடர்ந்து வரும்போது முறிந்த வில், சூலம், அம்பறாத்துணிகள், கவசம், குண்டலங்கள், பல அணிகள் முதலியவை தென்பட்டன. இறுதியாக சடாயு விழுந்து கிடத்தலைக் கண்டனர். இராமன் பலவாறு புலம்புகின்றான். இந்நிலையில் சடாயு மூர்ச்சை தெளிந்து, அரச குமாரர்களை அருகில் அழைத்து,

> பாக்கியத்தால் இன்றுஎன் பயனில் பழியாக்கை
> போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே
> வம்மின்என்று
>
> தாக்கி யரக்கன் மகுடத் தலைதுமித்த
> மூக்கி னால்உச்சி முறைமுறையே மோக்கின்றன்.[25]

பின் சடாயு தேறுதல்மொழி கூறுகின்றான்: வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் ஊழ்வினை வசத்தான வாயுள்ளன. இதனை ஏற்றுக் கொள்ளாவிடில் மதிவழியால் விதியை வெல்ல முடியுமோ? துன்பம் வந்து சேரும்போது மனத்தைத் தவிக்க விடுவது பேதையின் செயல். நான்முகன் தலை (ஐந்தாவது தலை) அறுந்தது ஊழ்வினையாலன்றோ?

---

25. ஆரணிய சடாயு உயிர்நீத்த – 189

இன்ப துன்பங்களை விலக்க முடியும் என்பது உண்மையாகுமா? திரிபுரத்தை எரித்த சிவபெருமான் மண்டை யோட்டில் பிச்சை எடுத்தது தவத்திற்குரியதோ? (இல்லை)., பகலவனும் அம்புலியும் இராகு கேதுக்களால் மறைவதும், பின்னர் ஒளிர்வதும் எதன் பொருட்டு? வினைப் பயனால் அன்றோ? தீங்குகள் வருவதும் பின்னர் நீங்குவதும் ஊழ்வினையாலன்றோ? இந்திரன் அடைந்த துன்பங்களைக் கணக்கிட முடியுமா?" இந்த விதியே சீதையைப் பிரித்தது. நான் சங்கரன் இந்த விதியே சீதையைப் பிரித்தது. நான் சங்கரன் வாளால் பட்டதும் விதியின் பயனே. அரக்கர் களையைக் களைந்து வாழ்தி"[26] இவ்வாறு விதியின் வலியை உணர்த்துகின்றான் சடாயு; பின்னர் வாழ்த்துகின்றான்.

வாலி சுக்கிரீவனுக்கு உறுதிகூறும் போக்கில் விதியைப் பற்றிக் கூறுவான்:

அருமையென் விதியி னாரே
உதவுவான் அமைந்த காலை
இருமையும் எய்தினாய் மற்று
இனிச்செயற் பாலது ?[27]

என்ற பாடலில் இதனைக் காணலாம். "உனக்கு ஆகூழ் வந்து வாய்த்தது. இனி நீ அடைதற்கு யாதுள்ளது? ஆதலால் இம்மை மறுமை இன்பங்களை யெல்லாம் நீ அடைந்து விட்டாய்" என்று உறுதி கூறுகின்றான். இந்த அறிவுரையில் ஊழ் தலைகாட்டுகின்றது.

வீடணன்-கும்பகருணன் சந்திப்பு பற்றிக்கூறும் கவிதைகள் கற்றவர்க்குக் கழிபெருங்களிப்பை நல்க வல்லவை[28]. வீடணன் கும்பகருணனை இராமன் பக்கம்

26. ஆரணிய – சடாயு உயிர் நீத்த – 193
27. கிட்கிந்தை – வாலி வதை
28. யுத்த. கும்பகருணன் வதை – 130–169

வந்து சேருமாறு வேண்டுகின்றான். பலபடியாகக் கூறி இறுதியில்,

இருளுறு சிந்தை யேற்கும்
இன்னருள் சுரந்த வீரன்
அருளுநீ சேரின் ஒன்றோ ?
அவயமும் அளிக்கும் அன்றி
மருளுறு பிறவி நோய்க்கும்
மருந்துமாம் மாறிச் செல்லும்
உருளுறு சகட வாழ்க்கை
ஒழித்துவீ(டு) அளிக்கும் அன்றே[29]

என்று வந்து சேருவதால் பெறும் பலனையும் குறிப்பிடுகின்றான். தொடர்ந்து,

வேதநா யகனே உன்னைக்
கருணையால் வேண்டி விட்டான்

* * *

ஆதலால் அவனைக் காண
அறத்தொடும் திறம்பாது ஐய !
போதுவாய் நீயே என்னப்
பொன்னடி இரண்டும் பூண்டான்[30]

என்று காலைப் பிடித்துக்கொண்டு வேண்டுகின்றான்.

கும்பகருணன் ஒருப்படவில்லை. பல காரணங்கள் கூறி மறுக்கின்றான். இறுதியாக,

ஆகுவது ஆகும் காலத்து;
அழிவதும் அழிந்து சிந்திப்
போவதும் அயலே நின்று
போற்றினும் போதல் செய்யும். (166)

29. மேற்படி – 139
30. மேற்படி – 153

என்று விதியின் வலியை எடுத்துகூறி, "இந்த உண்மையை உணர்ந்தவர்கள் உன்னைக் காட்டிலும் யாவர்உளர்? நல்ல இடத்தை நாடிச் சென்ற நீ அந்த இடத்திற்கே திரும்பச் சென்று விடுக" என்று பணிக்கின்றான்,

தமையன் இறந்தது குறித்து வீடணன் வாய்விட்டுக் கதறுவதை ஆறுதல் கூறி நிறுத்தும் சாம்பவான் விதியைப் பற்றிக் குறிப்பிடுகின்றான்.

> **குன்றோங்கு நெடுந்தோளாய்! விதி நிலையை**
> **மதியாத கொள்கைத் தாகிச்**
> **சென்றோங்கும் உணர்வினையோ தேறாதே**
> **அழுந்துதியோ ?[31]**

என்ற கவிதைப்பகுதியில் இக்குறிப்பினைக் காணலாம். "விதியின் நிலையை அறியாதவனா நீ? இந்த உணர்வு உனக்கு எப்படி வந்தது? தெளிவின்றி இராவணன் இறந்தது விதியின் செயல் என்று அறியாமல் இரங்குவது-துயரத்தில் அழுந்துவது-நினக்குச் சிறிதும் தகுதியன்று" எனத் தேற்றுகின்றான் கரடியரசன்.

**3. முடியாட்சியில் மக்கள் குரல்:** மனிதனுடைய பிறப்பிலேயே சுதந்திரப் பண்பு அமைந்து கிடக்கின்றது. சிறிது விவரம் தெரிந்த பின்னர் குழந்தை சில செயல்களைத் தானே செய்து கொள்ள விழைகின்றது; பிறர் செய்து தர முயலும்போது அதனை வெறுக்கின்றது. இதனால் மனித வாழ்க்கையில் சுதந்திரப் பண்பு இயல்பாக அமைந்த ஒன்று என்பதைக் காணமுடிகின்றது.

நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாகவே இவ்வுலகெங்கணுமுள்ள நாடுகளில் கோனாட்சியே நிலவி வந்துள்ளது. அரசர்கள் தம் கடமைகளில் தவறியதாலும் குடிமக்களின் அறிவுமிகுந்ததாலும் காலப் போக்கில்

31. யுத்த. இராவணன் வதை – 227

'குடியாட்சி' என்ற கருத்து முகிழ்த்து நிலைபெற்று விட்டது. இதுவே மக்கள் பண்பாடாகவே மலர்ந்து விட்டது. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் அரசோச்சிய சேரன் செங்குட்டுவன்,

மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்தின் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோ லஞ்சி
மன்பதைக் காக்கும் நன்குடி பிறத்தல்
துன்ப மல்லது தொழுதகவு இல்[32].

என்று தன் பொறுப்பை உணர்ந்ததுபோல் எத்துணைப் பேர் உணரமுடியும்? மன்னர்கள் தம் கடமைகளை உணராமல் உரிமையை நிலைநட்ட முயன்ற பொழுதுதான் 'குடியாட்சி' என்ற **'வித்து'** இந்த மாநிலத்தில் ஊன்றப் பெற்றது. பண்டைய அரசர்கள் தம் பொறுப்புகளையும் கடமைகளையும் பெரிதும் உணர்ந்திருந்தமையால் புறநானூற்றுப் புலவர் ஒருவர்,

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்[33]

என்று பாடினார்: மன்னன்தான் நாட்டின் உயிர் என்று அக்காலக் கொள்கையை வெளியிட்டார்.

காலப் போக்கில் மக்கள் குரலுக்கு மதிப்பு ஏற்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பன் மக்கள் குரலுக்கு மதிப்பு இருந்ததை,

வையம் மன்னுயி ராகஅம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னவன்[34]

32. சிலப். காட்சிக். அடி – 100–104
33. புறம் – 186.
34. அயோத். மந்தரை – 17

என்ற அடிகளில் காட்டினான். மாநிலத்தில் வாழும் மக்களை உயிராக்கி மன்னனை அவ்வுயிரைத் தாங்கும் உடலாகக் காட்டுவான். பிறிதோரிடத்தில் தசரதன் நாட்டைப் பாதுகாத்தமையைக் கூறவந்த கவிஞன்,

> வயிரவான் பூன்அணி மடங்கல் மொய்ம்பினான்
> உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
> செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
> உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்[35].

என்று காட்டுவான். இதிலும் அரசனை உடலாகவும் மக்களை உயிராகவும் காட்டியுள்ளமை காணத்தக்கது.

கம்பன் காவியத்தில் நாம் நான்கு அரசுகளைக் காண்கின்றோம்; நான்கும் கோனாட்சிகளே. இந்த நான்கிலும் மன்னன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளைப் பொது மக்கள் திறனாய்வதைக் காண்கின்றோம். சுமார் ஐம்பதாண்டுகட்குமேல் குடியாட்சியில் பழகி அரசினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் திறனாயும் நமக்கு, அரசாங்க அலுவல்களைப் பொது மக்கள் எந்த அளவுக்குத் திறனாய முடியும் என்பது விளங்காமற் போகாது. கோனாட்சியாக இருந்தாலும் பொதுமக்கள் அரசங்க விஷயங்களிலும் அரசன் சம்பந்தப்பட்ட பிற துறைகளிலும் ஓரளவு பங்கு பெற்று இருந்தனர். முடியாட்சியாக இருந்தாலும் அரசனும் தான் மக்களுக்காகவே இருப்பதாக உணர்வதையும் மக்களும் தமது நிலைமையை ஓரளவு நன்கு உணர்ந்திருப்பதையும் கம்பன் நமக்கு இலைமறைகாய்கள் போல் சுட்டி உரைக்கின்றான். அவ்வாறு சுட்டி உரைக்கும் இடங்களைக் காட்டுவேன்.

**அயோத்தி அரசு:** காவியத்தில் முதன் முதலாக நாம் காண்பது அயோத்தி அரசு. எடுத்த எடுப்பில் அரசனைக் காட்டும் கவிஞன்,

---

35. பாலகா. அரசியல் – 10

தாயொக்கும் அன்பில் தவம்ஒக்கும்
நலம்ப யப்பில்;
சேயொக்கும் முன்னின்று ஒருசெல்கதி
உய்க்கும் நீரால்;
நோயொக்கும் என்னில் மருந்துஒக்கும்;
நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும்
எவர்க்கும் அன்னான்[36]

*என்று கூறுவான். தயரதன் குடிமக்களிடம் காட்டிய அன்பு தாயன்புடன் ஒக்கும்; மக்களுக்கு அவன் செய்து வரும் நன்மைகளினால் அவன் தவத்தை யொத்திருப்பான்; நல்ல கதியில் செலுத்துவதில் மைந்தனை யொப்பான்; தீயோரை ஒறுப்பதில் நோயை ஒப்பானாயினும் தண்ணளி செய்தலில் மருந்தையும் ஒப்பான்; நுட்பமான நூல்களை ஆராயப் புகுமிடத்து ஐயம் திரிபுகளைத் தெரிவிக்கும் அறிவை யொப்பான். இங்ஙனம் குடிதழீஇக் கோலோச்சும் தசரதன் நாடு புரத்தலைக் கூறுமிடத்து,*

வையம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினி(து) அரசு செய்கின்றான்[37]

*என்று காட்டுவான். மூலதனம் இல்லாத உழவன் தனக்கே உரித்தான சிறு கழனியை எங்ஙனம் கருத்துடனும் பொறுப்புடனும் பாதுகாக்கின்றானோ, அங்ஙனமே உலகம் முழுவதையும் காத்து வருகின்றான் தயரதன்.*

*தயரதன் இராமனுக்கு முடிசூட்ட நினைக்கின்றான். மந்திரக் கிழவர்களை வருவித்து, அவர்களுடன் கலந்து ஆலோசிக்க எண்ணுகின்றான். உடனே 'மந்திரக் கிழவரை வருக' என்று ஏவினான். மக்களுடன் தன்னைவிட நன்கு*

36. பா்லகா. அரசியல் – 4
37. மேற்படி – 12

பழகும் அமைச்சர்களை யோசனை கேட்பதால், மக்களையே கேட்பதாகும் என்று எண்ணியே மந்திரி மார்களுடன் சூழ்ந்தெண்ண நினைக்கின்றான்; அதன் பிறகும் சிற்றரசர்கட்கும் ஓலை போக்கித் தன் கருத்தைத் தெரிவிக்கின்றான். அமைச்சரவையும் வேத்தவையும் இராமன் முடிபுனைதற்கு ஒருமுகமாக உடன்பாட்டைத் தெரிவிக்கின்றன. அரசர்களைப் பார்த்துத் தயரதன் பேசும் பேச்சு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது.

**செம்மையில் தருமத்தில் செயலில் தீங்கிலா**
**வெம்மையின் ஒழுக்கத்தின் மேன்மை மேவினீர்**
**என்மகன் என்பதென் ? நெறியின் ஈங்கிவன்**
**நும்மகன் கையடை நோக்கும் ஈங்கென்றான்**[38]

"இவனை என்மகன் என்று எண்ணவேண்டா; நும்மகன் போலவே கருதி, இவனுக்கு யாதொரு குறையும் வராமல் பாதுகாத்து வாருங்கள்" என்று கூறும் மன்னர் மன்னன் வாக்கில் மக்கள் குரலுக்கு எவ்வளவு; மதிப்பு தருகின்றான் என்பதையும் அறியலாம், இன்னும் பல இடங்கள் உள்ளன. விரிவஞ்சி இத்துடன் நிறுத்தி அடுத்த அரசைக் காண்போம்.

**மிதிலை அரசு:** அக்காலத்தில் மிதிலையிலும் கோனாட்சியே நிலவி வந்தது. என்றாலும் அங்கும் அரசாட்சியில் மக்கள் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர். சனகன் சீதைக்குக் கன்யாசுல்கமாக வைத்திருந்த வில்லை யாரும் வளைத்து நாணேற்ற முடியாததால் சீதையின் திருமணம் நடைபெறாமலே இருந்தது. அந்த வில்லை இராமன் வளைத்து நாணேற்றும் சந்தர்ப்பம் வருகின்றது; ஈசனது வில்லும் இராமனுக்கு முன்னர் கொண்டு வரப் பெறுகின்றது. பேராற்றலையுடைய அறுபதினாயிரம் பேர் அதனைச் சுமந்து கொண்டு வருகின்றனர். இதனைக் கண்ட மக்கள் பலர் பலவாறு பேசிக் கொள்ளுகின்றனர்.

38. அயோத்தி – மந்திரப். 87

சீதாப்பிராட்டியின் திருமணத்தில்-தம் நாட்டு வேந்தன் மகள் திருமணத்தில்-அதிக அக்கறை கொண்டிருந் தவர்கட்குச் சனகன் வில்லைப் பணயமாக வைத்தது பிடிக்கவில்லை. வில்லே பிராட்டியின் திருமணத்திற்குப் பெருந்தடையாக உள்ளது என்று எண்ணுகின்றனர். ஓரிடத்தில் "இந்த வில்லைக் கொண்டுவருக என்று எதற்காகச் சொன்னான் இவ்வரசன்?" என்பர் சிலர்; மற்றும் சிலர் "வில்லைக் கன்யாசுல்கமாக வைத்த இவனைப் போல் அறிவுக் கேடரான அரசர்களும் உளரோ?" என்று கூறுவர். முற்பிறப்பிற் செய்த ஊழ்வினையினால்தான் ஒருகால் இச்செயல் கூடினாலும் கூடலாம்" என்று வேறு சிலர் உரைப்பர்; பின்னும் சிலர் "சீதாப் பிராட்டியாவது இந்த வில்லைப் பார்த்திருக்கக் கூடுமா?" என்று மொழிவர்[39]. மற்றோரிடத்தில் மக்கள் பேசிக் கொள்வதையும் கவிஞன் காட்டுகின்றான்.

இச்சிலை யுதைத்தகோற் கிலக்க மியாதென்பார்
நச்சிலை நங்கைமே னாட்டும் வேந்தென்பார்
நிச்சயம் எடுக்குங்கொல் ? நேமி யான்என்பார்
சிற்சிலர் விதிசெய்த தீமைதான் என்பார்[40]

இத்துணைப் பெரிதாக உள்ள வில்லுக்கு ஏற்ற இலக்கு இவ்வுலகிலேயே இல்லை என்று சிலர் கூற, வேறு சிலர் "இது வளைத்து இலக்கின்மேல் எய்வதற்கா அமைந்த வில் அன்று; பிராட்டியின் திருமணத்திற்குப் பணையமாக இருக்கும் பொருட்டே அமைந்தது" என்று மாறு கூற, "இந்த இராகவன் தவறாது எடுப்பனோ? என்று சிலர் வருந்த, மற்றுஞ் சிலர் "சீதாப் பிராட்டியின் திருமணம் இனிது நடைபெற அதனைக் காண வேண்டும் என்று எதிர் நோக்கியிருக்கின்ற நம்முடைய தீவினைப் பயனே இங்ஙனம்

39. பாலகா. கார்முகப் – 8
40. மேற்படி – 9

வில் வடிவாக அமைந்துள்ளது'' என்று வெறுத்துக் கூறலாயினர்.

மகளிர் கூட்டத்திலும் பேச்சு நிகழத்தான் செய்கின்றது. அனைவரும் அரசன் பெரிய வில்லைத் திருமணத்திற்குத் தடையாக வைத்தது பெரும் பிழை என்று ஒருமுகமாகத் தம் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை அல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை எடுத்துஇப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை என்பார்.

ஞான முனிக்கொரு நாணிலை என்பார்
கோனிது னிற்கொடி யோன்இலை என்பார்
மானவன் இச்சிலை கால்வளை யானேல்
பீன தனத்தவள் பேறிலள் என்பார்[41]

*(கால் - முனை; பீன - பெருத்த)*

"பிராட்டியின் திருமணத்தில் அரசன் உண்மையில் அக்கறை கொண்டவனாக இருந்தால், தகுந்த மணமகன் வந்தபொழுதே திருமணத்தை முடித்துவிட வேண்டும். சிவதனுசைக் குறுக்கே கொண்டு வந்து போடுவதனால் திருமணத்தில் அக்கறை இல்லை என்றாகின்றது; அல்லது தன் வம்சம் இழந்தவனாக இருக்க வேண்டும்'' - இங்ஙனம் ஒரு பேச்சு நிகழ்கின்றது. "விசுவாமித்திரனுக்காவது மதி வேண்டும்; அவனும் வில்லை முறிக்க அனுமதி தந்துவிட்டான். இந்த அரசனைக் காட்டிலும் கொடியவன் இவ்வுலகில் இல்லை. இராமன் இந்த வில்லை வளையானாகில், பிராட்டிக்கு வாழ்வே இல்லை"-இப்படி ஒரு பேச்சு நிகழ்கின்றது. மிதிலை ஆட்சியில் இதற்குமேல் மக்கள் குரலைப் பற்றி அறியக் கூடவில்லை.

41. பாலகா. கார்முகம். 30,31

**கிட்கிந்தை அரசு:** இது குரக்கர்களின் அரசு. வாலி கொடுத்த தொல்லையைத் தாங்க முடியாமல் சுக்கிரீவனும் அநுமன் உட்படப் பல வானவீரர்களும் ருசியமுக பருவதத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இராம-சுக்கிரீவ நட்பு ஏற்படுகின்றது. சுக்கிரீவனைப் பலர் சூழ்ந்திருந்தனர் என்பதிலிருந்தே அவனை ஆதரிக்கும் ஒரு வானரக் கூட்டம் இருந்ததாகக் கருதவேண்டியுள்ளது. தவிர, மக்கள் கருத்திற்கிசைந்தே வானர ஆட்சியும். நடைபெற்றுவந்தது என்பதற்கு வேறொரு சான்றும் உள்ளது. இது மாயாவி பற்றிய குறிப்பால் அறியமுடிகின்றது. பிலம்புக்க வாலி நீண்டநாள் திரும்பாததால் வானர குலத்திலுள்ள சில பெரியோர்களின் விருப்பத்திற்கிணங்க சுக்கிரீவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். இதனால் சுக்கிரீவன் மக்கள் குரலுக்கு மதிப்பு கொடுத்து மன்னனாக இருக்க ஒருப்பட்டான் என்பது அறியக் கிடக்கின்றது.

வாலி இறந்ததனால் தாரை, அங்கதனைத் தவிர வேறு ஒருவரும் துக்கப்பட்டதாகக் கவிஞன் காட்டவில்லை. கோசல நாட்டிலும் மிதிலை நாட்டிலும் அரசகுடும்ப நிகழ்ச்சிகளில்எல்லாம் மக்கள் குரலைக் காட்டிய கவிஞன் கிட்கிந்தை நாட்டு அரசன் இறந்ததற்குக் கூட மக்கள் உட்கிடக்கையைக் காட்டாததால், வாலியின் ஆட்சி மக்கள் கருத்திற்கிணங்க நடைபெறவில்லை என்று ஊகிக்க இடம் தருகின்றது.

சுக்கிரீவனுக்கு முடி புனைந்து சில அரச நீதிகளைப் புகட்டுகின்றான் இராமன். அவற்றின் சாரம் மக்கள் குரலுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதே. மக்கள் கொதித்தெழுந்தால் பெரிய வல்லரசும் கவிழ்ந்துவிடும் என்பதைக் கவிஞன் இராமன் மூலமாகப் பேசுகின்றான் என்று கொள்வதே ஏற்புடைத்து.

மக்களுக்காக ஏற்பட்டுள்ள ஆட்சியில் இயன்றவரை மக்களுடன் பகைமை கொள்ளலாகாது; 'அற்பப் பகைதானே' என்று எண்ணிச் சிறிய பகைக்கும் இடந்தரலாகாது. அத்தகைய ஒரு சிறிய பகை, இராமன் கூனியிடம் இளம் பருவத்தில் நேரிட்டது. அஃது இராமனைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கி விட்டது. இதனை நினைவு கூர்ந்து சுக்கிரீவனிடம் பேசுகின்றான் இராமன்.

சிறியரென்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல் மற்றிந்
நெறியிகந் தியானோர் தீமை
இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியதா மேனி யாய
கூனியால் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின்
வெந்துயர்க கடலில் வீழ்ந்தேன்[42]

சொந்த அநுபவத்தை மனத்திற் கொண்டு மனம் விட்டுப் பேசுகின்றான் இராமன். மக்களை அனைத்துக் கொண்டு ஆட்சி புரிய வேண்டும் என்பது இராமன் வற்புறுத்தும் கொள்கையாகும்.

அடைக்கலம் புகுந்த வீடணனை ஏற்றுகொள்வதற்கு இராமன் எல்லோரையும் கலந்து ஆலோசிக்கின்றான். சுக்கிரீவன், சாம்பவான், நீலன் ஆகிய தலைவர்களும் மற்றுமுள்ளோரும் வீடணனை ஏற்றுக் கொள்ளலாகாது என்று ஒரு முகமாகக் கூறுகின்றனர். இறுதியில் அநுமன் வீடணன் தீயவன் அல்லன் என்று காரணங்களுடன் கூறி 'வீடணன் வரவு நல்வரவாகட்டும்' என்று எடுத்துரைக் கின்றான். அப்போது இராமன் அங்கிருந்தோரை நோக்கிக் கூறுவது:

42. கிட்கிந்தை – அரசியல் – 11

மாருதி வினய வார்த்தை
செவிமடுத்து அமிழ்தின் மாந்திப்
'பேரறி வாள நன்று
நன்றெனப்' பிறரை நோக்கிச்
'சீரிது மேலிம் மாற்றம்
தெளிவுறத் தேர்மின்' என்னா
ஆரியன் உரைப்ப தானான்
அனைவரும் அதனைக் கேட்டார்[43]

அநுமன் உரைத்தது சரியே என்று காரணங்களுடன் எடுத்து விளக்கி வீடணனை ஏற்றுக் கோடலே தக்கது என்று முடிவும் கூறுகின்றான். வீடணனைக் கொணருமாறு சுக்கிரீவனையே அனுப்புகின்றான் இராமன். இந்த நிகழ்ச்சியால் இராமன் மக்கள் குரலுக்கு மதிப்புக் கொடுத்தமையையும், கிட்கிந்தை அரசனிடம் தான் உதவி வேண்டித் தோழமை பூண்டிருந்தபொழுதும் அப்பண்பைப் பலர் அறியக் காட்டினமையையும் அறிகின்றோம்.

இலங்கை அரசு: இஃது அரக்கர் அரசு. இங்கு மக்கள் குரலுக்கு என்ன மதிப்பு இருந்தது என்பதைக் காண்போம். ஆரணிய காண்டத்தில்தான் முதன்முதலாக இராவணன் அரசுவீற்றிருக்கும் சிறப்பு காட்டப் பெறுகின்றது. இந்நிலையில் 'மூக்கும் காதும் வெம்முரண்முலைக் கண்களும்' இழந்த சூர்ப்பணகை இலங்கை நகர்க்கு வருகின்றாள். அவள் வந்த நிலையைக் கவிஞன்,

தங்கையும் அவ்வழித் தலையில் தாங்கிய
செங்கையள்; சோரியின் தாரை சேந்துஇழி
கொங்கையள்; மூக்கிலள்; குழையில் காதிலள்
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள்[44]

43. யுத்த. வீடணன் அடைக். 106
44. ஆரணிய – மாரீசன் வதை – 24.

இவள் இலங்கை நகரின் வடதிசை வாயிலாக நகருக்குள் நுழைகின்றாள்; தன்னுடைய குறையை உரக்கக் கூறிக் கொண்டு வருகின்றாள். அவளது அவலநிலையைக் கண்ட அரக்கப் பெருமக்கள் மிகவும் துயருறுகின்றனர். முக்கியமாக மகளிர் சோகத்துடன் அழுகின்றனர். அவளைக் கண்ணுற்ற ஆண்மக்கள் ஒன்றும் சொல்லத் தெரியாதவராய்த் திகைத்து நிற்கின்றனர். கோபக் கனல் தெறிக்க உதட்டைக் கடித்துக்கொண்டு வாளாநிற்கின்றனர். பலர் பலவாறு இது பற்றி ஐயப்படுகின்றனர். இன்னும் சிலர் சூர்ப்பணகைக்கு ஏற்பட்ட செய்கையில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும் என ஐயுறுகின்றனர்.

என்னையே இராவணன் தங்கை என்றபின்
அன்னையே என்றடி வணங்கல் அன்றியே
உன்னவே யொண்ணுமோ ஒருவ ரால்இவள்
தன்னையே அரிந்தனள் தான்என்றார் சிலர்[45]

அவளாகவே அரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது சிலரது ஐயம். இக்கருத்தையே இன்னொரு விதமாக வீடணன் கொண்டிருத்தலைப் பின்னால் காண்கின்றோம்.

கொல்லாத மைத்துனனைக் கொன்றாய் என்(று)
அதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து
பல்லாலே இதழ்அதுக்கும் கொடும்பாவி
நெடும்பாரில் பழிதீர்ந் தாளோ ?[46]

என்று இதனைக் கம்பன் காட்டுவான். வேறு சிலர் ஒருகால் இவள் கற்புநிலை கடந்து விட்டாள் என்று கரன் கருதி இவளை அழகற்றவளாகச் செய்திருக்கக் கூடுமோ? என்று அயிர்க்கின்றனர். இந்த இடத்தில் பொதுமக்கள் பலவாறு தத்தமக்குத் தோன்றியவாறு பேசுவதைக் காண்கின்றோம்.

45. மேற்படி – 30
46. யுத்த. இராவணன் வதை – 225

இந்திரசித்து அநுமனை மலரவன் கணையால் பிணித்துத் தெருவழியே இழுத்துச் செல்லுகின்றான். அப்பொழுது அரக்கர்கள் திரளுகின்றனர். அவர்கள் அநுமனை என்ன செய்யவேண்டும் எனப் பலர் பல்வேறு கருத்துகளைத் தெரிவிக்கின்றனர்[47] ஆனால் அரசனைப் பற்றியோ, ஆட்சியைப்பற்றியோ, அல்லது அரசன் செயலைப்பற்றியோ யாதொன்றும் காணப்பெறவில்லை. சீதாப்பிராட்டியைச் சிறையிட்டதால்தான் இவ்விளைவுகள் யாவும் நேரிட்டன என்று ஒருவர்கூடப் பேசவில்லை. இராவணன் சீதையைச் சிறையிட்டது பலருக்கு உடன்பாடாக இருந்திருக்கலாம்; அல்லது அரசனது ஆணைக்குப் பயந்து வாய்மூடிமௌனிகளாகவும் இருந்திருக்கலாம்.

அநுமனால் எரியுண்ட இலங்கையைத் தெய்வதச்சன் புதுப்பித்த பிறகு இராவணன் மந்திராலோசனை சபையைக் கூட்டுகின்றான். இதில் தனக்கு வேண்டியவர் களைமட்டிலும் வருவித்து, பிறரையெல்லாம் புறத்தே போக்கி விடுகின்றான். அவையின்கண் ஒருவரும் வாராதிருக்க காவலாளர்களை நிறுத்துகின்றான். குரங்கினால் மிகவும் அவமானம் அடைந்ததற்கு மிகவும் மனம் வருந்திக் கூறுகின்றான். வீடணனைத்தவிர, ஒருவராவது இராவணனது தவற்றை எடுத்துரைக்கவில்லை. ஆனால் கும்பகருணன் மட்டிலும் பிறன்மனை நோக்கிய அன்றே அரக்கர் புகழ் அழிந்துவிட்டது என்றும், கௌரவத்தின் காரணமாகச் சீதையைத் திரும்பக் கொண்டு விடுதல் தம்முடைய எளிமையைப் புலப்படுத்திவிடும் என்றும், இவ்வாறு செய்வதைவிட போரில் இறந்து படுதலே தக்கது என்றும் எடுத்துரைக்கின்றான். இவற்றையெல்லாம்

47. சுந்தர. பிணிவீட்டுப் – 3.4

நோக்குமிடத்து, இலங்கையிலுள்ள மந்திரசபை அரசனுக் கிணங்க இயங்கியது என்று அறிகின்றோம். இன்னும் இராவணன் ஆணைக்கும் ஆற்றலுக்கும் அஞ்சியே ஒருகால் மக்கள் குரல் எழுப்புவதற்கே பயந்து வாழ்ந்தனரோ என்று கூட ஊகிக்க வேண்டியுள்ளது.

**4. சகுனம் பார்த்தல்:** இப்பழக்கம் பண்டிருந்தே மக்களிடம் இன்றும் நிலவி வருகின்றது. 1958-60 ஆண்டுகளில் நான் சென்னைப் பல்கலைக் கழகப் பணியில் நுழைய முயற்சி செய்ததுண்டு. அப்போது நான் காரைக்குடியில் அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். பேட்டிக்கு வரும் போதெல்லாம் மயிலை முனிவர் பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் இல்லத்தில் தங்குவதுண்டு. நான் பேட்டிக்குப் போகும்போது புலவர் பெருமான் சகுனம் பார்த்துச் செல்லுமாறு பணிப்பதுண்டு. விளக்கம் தருமாறு வேண்டிய பொழுது ஒற்றைப் பார்ப்பனர், அல்லது பார்ப்பனரல்லாதார் இருவர் எதிர்ப்பட்டால் அவை அபசகுனம் என்றார். அப்படியானால் ஒரு பார்ப்பனர் விளைவிக்கக்கூடிய தொல்லையை இரு பார்ப்பனரல்லாதார் விளைவிக்கும் ஆற்றல் பெற்றவரோ? என்று வினவியபொழுது "நீங்கள் தந்தை பெரியார் கட்சியைச் சேர்ந்தவர்கள். இப்படித்தான் குறுக்கு வினாவிடுப்பீர்கள்" என்று சொல்லிச் சிரித்து விட்டார். காக்கை கரைந்தால் விருந்தினர்கள் வருவர் என்ற நம்பிக்கையும் ஒரு சகுனம். ஒரு பூனைகுறுக்கே போனால் எதிர்பார்த்துச் செல்லும் காரியம் கைகூடாது என்ற நம்பிக்கையும் உண்டு. இவ்வாறு சகுனம் பார்க்கும் வழக்கம் ஒருவகைப் பண்பாடாக மக்களிடையே நிலைபெற்றுள்ளது. இது காவியங்களிலும் இடம் பெற்று விட்டது.

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகையில் நிமித்தம் பற்றிய குறிப்பு உள்ளது.

வேதினம் வெரிநின் ஓதி முதுபோத்து
ஆறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர்[48].

"கருக்கரிவாளைப் போன்ற முதுகையுடைய முதிய ஆண் ஓந்தியானது வழிச்செல் மனிதர்கள் நிமித்தமாகக் கொள்ளும்படி பாலை நிலத்தில் தலைவர் சென்றனர்" என்று தோழிக்குத் தலைமகள் சொல்லுகின்றாள். ஓந்தியும் நன்னிமித்தம் பார்த்தற்குரியது என்பதை டாக்டர் உ.வே.சா. அவர்கள் அறப்பளிசுர சதகத்திலிருந்து 'நாவி சிச்சிலி ஓந்திதான்... வலமாயின் வழிப்பயணமானது நன்றாம்" என்ற அடியை எடுத்துக்காட்டுவர்.

சிலப்பதிகாரத்திலும் நிமித்தம் பற்றிய குறிப்பு வருகின்றது. கோவலன் பொற்கொல்லன் சூழ்ச்சியால் கொலையுறுகின்றான்[49] இதனை உணர்த்துவதுபோல் ஆயர் சேரியில் பல உற்பாதங்கள் நிகழ்கின்றன. (1) உறையிட்ட தாழிகளில் பால் தோய்ந்திலது; இமில் ஏற்றின் அழகிய கண்களினின்றும் நீர் உகுகின்றது ஆதலால் நமக்கு வருவதோர் தீங்கு உண்டு. (2) உறியில் முதல் நாள் வைத்த வெண்ணெயை உருக வைத்தால் உருகவில்லை; ஆட்டுக் குட்டிகளும் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடக்கின்றன. ஆதலால் நமக்கு வருவதோர் தீங்கு உண்டு (3) நான்கு காம்புகளையுடைய பசுநிரை நடுங்கி நின்று அரற்றுகின்றது; அப்பசுக்களின் கழுத்தில் கட்டிய மணிகளும் அற்று நிலத்தில் வீழும். ஆதலால் நமக்கு வரும் தீங்கு ஒன்று உண்டு.

இவ்வாறு ஐயை தன் மகளை நோக்கி "மனம் கவலற்க; இந்நிலத்து மாதர்க்கு அணியாக விளங்கும்

48. குறுந். 140
49. சிலப். கொலைக்களக் காதை.

கண்ணைகியும் காணும் வண்ணம் முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்தின்கண் கண்ணன் தம்முனாகிய பலராமனுடன் விளையாடிய பாலசரித நாடகங்களுள் நப்பின்னையோடு ஆடிய குரவைக் கூத்தினை, ஆநிரையும் கன்றுகளும் துன்பம் ஒழிவனவாக என்று கூறியாம் ஆடுவோம்" என்கின்றாள். இங்கு சகுனம் பார்த்தல் போன்ற உற்பாதங்களில் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை புலனாகின்றது.

சீவக சிந்தாமணியிலும் இத்தகைய குறிப்பு ஒன்றைக் காண்கின்றோம். சீவகன் நால்வகைச் சேனையுடன் இராசமாபுரத்தின் புறத்தே தங்குகின்றான். சீவகனின் மாமனும் இராசமாபுரத்து அரசனுமான கோவிந்தராசன் தன்னிடமுள்ள திரிபன்றி என்னும் இயந்திரப் பன்றியை அம்பெய்து வீழ்த்துபவனே தன் மகள் இலக்கணைக்குக் கணவன் என்று அறிவிக்கின்றான். கட்டியக்காரனும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளப் படையுடன் வருகின்றான். கட்டியங்காரனுக்கு இறுதிக்காலம் நெறுங்குகின்றது. இதனை அறிவிப்பது போல் நன்னிமித்தம் தோன்றுகின்றது.

> நெறியின் நல்கின புள்ளுநி மித்தமும்
> இறைவன் கண்வலன் ஆடிற்று இயைந்தரோ[50]

என்ற பாடலில் 'புள்ளும் நிமித்தமும் நல்கின; கோவிந்தராசனின் வலக்கண் பலகாலும் துடித்தன' என்பதில் சகுனம் குறிப்பிடப் பெறுகின்றது. ஆடவர்க்கு வலக்கண் துடித்தலும் மகளிர்க்கு இடக் கண் துடித்தலும் நன்னிமித்தங்களாகும் என்பது மக்கள் நம்பிக்கை.

கம்பன் காவியத்தில் நிமித்தம் பற்றிய குறிப்புகள் வரும் ஓரிரு இடங்களைக் காட்டுவேன். சக்கரவர்த்தித் திருமகனின் திருமணம் முடிந்த நிலையில் தசரதன்

50. சீவக. சிந். 2168 (மண்மகள் – 67)

அயோத்திக்குத் திரும்புகையில் வழியில் சில அபசகுனங்களைக் காண்கின்றான். இதனைக் கம்பநாடன்,

ஏகும்அள வையின்வந்தன
வலமும்மயி லிடமும்
காகம்முத லியமுந்திய
தடைசெய்வன கண்டான்
நாகம்அனன் இடையிங்குள
திடையூறென நடவான்[51].

என்று குறிப்பிடுவான் தசரதன் வரும் வழியில் மயில் முதலிய பறவைகள் நல்ல சகுனமாக வலப்பக்கமாக வந்தன. தீய சகுனமாகவும் முற்பட்டுச் சென்றனவாகித் தடைசெய்தன. இதனைக் கண்டதசரதன் ஏதோ இடையூறு விளையப் போகின்றது என்று கருதி அப்பாற் செல்லாதவனாய் நின்று விட்டான். உடனே சகுனசாத்திரத்தை அறிபவனான நிமித்திகன் ஒருவனை அழைத்து ஆராய, அவனும் 'இப்போது இடையூறு உள்ளது; அது முடிவில் நன்றாய் விடும்' என்று கூறினான்.

வலியன், கருடன், காடை, கழுகு, ஆந்தை, உடும்பு, கீரி, குரங்கு இவை இடமாதல் உத்தமம். நாரை, விச்சுளி, காக்கை, செம்போத்து, கிளி, கொக்கு, மயில், கோழி, ஓணான், புள்ளிமான், புனுகுப் பூனை, புலி, நரி இவை வலமாதல் உத்தமம். இவைமாறி வலமும் இடமுமானால் சகுனத் தடையாகும். சகுனத்தடை தோன்றியதனால் சக்கரவர்த்தி அஞ்சி மேலே சொல்லாதவனாயினான். இங்கு நிமித்திகன் காகம் முதலியன இடமானதால் இடையூறு வரும் என்றும், மயில் முதலியன வலமான தனால் அது நன்மையாய் முடியுமென்றும் நிமித்திகன் கூறினன் என்பது ஈண்டு அறியப்படும்.

51. பாலகா. பரசுராமப் – 8

ஊரெல்லாம் தேடிய அநுமான் சீதை எவ்விடத்தும் காணப் பெறாததால் "கண்டு வரும் என்றிருக்கும் காகுத்தன்; கவிக்குலக்கோன் கொண்டு வரும் என்றிருக்கும்; அவர்கள் அங்ஙனம் மிக நம்பிக்கையுடன் இருக்கையில், என் செயலோ பயனற்றதாயுளதே" என்றும் இன்னும் பலவாறும் வருந்தியநிலையில் அசோகவனத்தைக் காண்கின்றான்; அங்குச் செல்கின்றான். அப்போது அங்கு இருந்த சீதாப்பிராட்டியும் அரக்கியர் கூட்டத்தினர் நடுவே பலவாறு வருந்திய நிலையில் உள்ளாள்

திரிசடையைத் தவிர மற்றை அரக்கியர் யாவரும் நள்ளிரவில் மயங்கிக் கிடக்கின்றனர். அப்போதகு பிராட்டி தனக்கு நேர்ந்த நன்னிமித்தங்களைக் கூறி யாது பயன்விளையுமோ என வினவுகின்றாள். "புருவமும் கண்ணும் நெற்றியும் வலப்பக்கம் துடிக்காமல் இடப்பக்கமே துடிக்கின்றன. இதனால் வரும். பயன் இன்னதென்று அறிகிலேன்[52] முன்பு இராமன் விசுவாமித்திரனோடு மிதிலாபுரியில் புகும் போது என்புருவமும், தோளும், கண்ணும் இனிமைவிளைவிப்பனவாய் இடம் துடித்தன, ஈண்டும் அன்று துடித்தாற் போலவே நன்றாக இடந்துடிக்கின்றன. இதன் பயனை ஆய்ந்து சொல்வாயாக"[53] என்று வேண்டுவதைக் காண்கின்றோம்.

தொடர்ந்து கூறுவாள்; "இன்னும் கேட்பாயாக. என் கொழுநனான இராம்பிரான் இப்புவிமுழுதும் தன் தம்பி பரதனே பெறும்படி அயோத்தியை விட்டுக் கானகத்திற்கு வரும்பொழுது புருவம் முதலியவற்றின் வலப் புறம் துடித்தது"[54] "நஞ்சனைய இராவணன் தண்ட

52. சுந்தர. காட்சிப் – 32
53. மேற்படி – 33
54. சுந்தர. காட்சி – 34

காரணியத்தில் கபடச் செயலைச் செய்யக் கிட்டிய பொழுது எனக்கு வலப்பக்கம் துடித்தது; அப்பொழு தெல்லாம் இவ்வுறுப்புகள் உண்மையாகிய வினைப் பயனால் குறையாதவை யாயின. இப்பொழுது இடந்துடித்தது. ஆதனால் பயப்படாதே" என்று சொல்லி என்பக்கல் இரக்கங் கொள்ளுமாறு வருவதாகிய செயல் எதுவோ?"[55] என்றாள், சீதாப்பிராட்டி.

இங்ஙனம் பிராட்டி சொன்ன அளவில் திரிசடை "உனக்கு உண்டான மங்களக்குறி மிகவும் நன்மையைத் தருவதாகும். உன் துணைவனான இராமபிரானை நீ சேர்தல் உறுதி"[56] என்று கூறியவள் தான் கண்ட நன்னி மித்தங்களைப் பிராட்டிக்குக் கூறத் தொடங்குகின்றாள்: "உன் திருமேனியின் நிறம் பசுமை பெறும்படியாகவும் உயிர் பிழைக்கும்படியாகவும் பொன்னிறத்தையுடைய தொரு வண்டு மெதுவாக வந்து தேன் போன்ற பாட்டிசையை நின்செவியில் ஊதி விட்டுச் சென்றது. இதனைச் சீர்தூக்கி ஆய்ந்தால், நின்உயிர்த்தலைவன் ஏவியனுப்ப தூதன் ஒருவன் வந்து சேர்வான் என்று சொல்லும். இது தக்கதே. இராவணாதியர்க்கு கொடியதுன்பம் வருதலும் திண்ணம்"[57] என்று கூறுகின்றாள்.

அடுத்து திரிசடை இலங்கையில் தோன்றும் சில உற்பாதங்களைத் தெரிவிக்கின்றாள்; 'பெண்யானைகள் மதம் ஒழுகப் பெற்றன; அடித்தலின்றி முரசங்கள் இடி போல் ஒலிக்கும்; முகிற் கூட்டம் இல்லாமலே விண் வெடிக்குப்படி இடியிடிக்கும். விண்மீன்கள் உதிரும். பகற் பொழுது இல்லாமல் இருள் நீங்கி ஒழியும்படி சூரியன் பாதிவடிவத்துடன் தோன்றுவான். வீரர்கள் தரித்த கற்பக

55. மேற்படி – 35.
56. மேற்படி – 36
57 மேற்படி – 37,38

மாலைகள் புலால் நாற்றம் வீசும். இந்த மாலைகள் இராவணனிடத்து அச்சங்கொண்டு தேவர்கள் கொணர்ந்து கொடுத்தவையாகும். இலங்கையைச் சூழ்ந்த மதிள்கள் சுழலும். எல்லாத் திக்குகளிலும் தீப்பற்றி எரியும். கற்பகச் சோலைகள். கரிந்து தோன்றும் மங்களகரமான பூர்ண கும்பங்கள் விரிந்தனவாகி உடையும் ஒளியை இருள் சூழ்ந்து மறைக்கும். தோரணங்கள் முறியும். யானைகளின் விளைந்த தந்தங்கள் ஒடிபடும். மறையொலி முழங்கி காட்டிய பூர்ண கும்பத்து தூய்மை நீர் கள்ளாகிப் பொங்கும். விண்வெளியில் உலவும் அம்புலியைப் பிளந்துகொண்டு விண்மீன்கள் புறப்படும். விண்ணில் கவிந்து பரந்த மேகங்கள் குருதி மாரியைப் பொழியும். சக்கரம் வாள் வில் முதலிய ஆயுதங்கள் பேரொலியால் கடல் ஒலியும் மாறுபடும்படி தாமே போரிடும். மங்கையர் அணிந்துள்ள தாலிகள் பிறர் அறுக்காமலேயே தாமாக அவர்கள் கொங்கை மேல் அறுந்து விழும்" இங்ஙனம் கூறிய முறைப்படியே இத்தீக் குறியினது அற்புதத்தை இன்னும் கேட்பாயாக என்று கூறி "இராவணனது துணைவியாரின் கூந்தல் அவிழ்ந்து நிறைந்து விழுந்தன. அக்கூந்தல் அருகிலிருந்த விளக்கின் சுடர் பற்ற, அது சுறுசுறுவென்று விரைந்து வெந்தது. இவையாவும் கொடிய அரக்கர்கள் யாவரும் துன்புற்று அழிவதற்கு அறிகுறியாகும்" என்று விளக்குவாள்.

**5. கனவுகள்:** கனவுகளால் பலன் விளையும் என்ற நம்பிக்கை இன்று மக்களிடையே நிலவுவதைக் காணலாம். அதுவும் அதிகாலையில் கனவுக்கு பலன் ஏற்படுவது உறுதி என்பது அவர்களின் அதிராத நம்பிக்கை. இத்தகைய நம்பிக்கைகளையும் காவியத்தில் இடம் பெறச் செய்துள்ளனர் கவிஞர்கள்.

திருவள்ளுவர் காமத்துப் பாலில் **"கனவுநிலை யுரைத்தல்"** என்ற ஓர் இயலையே வகுத்துக் காட்டியுள்ளார்.

இதனை "தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் செல்லுதல். அக்கனவு நனவின்கண் நினைவு மிகுதியாற் கண்டதாகலின்" என்று பரிமேலழகர் விளக்குவர். இவர் விளக்கம் இக்கால ஃபிராயிடு போன்ற உளவியல் வல்லுநர்களின் கருத்திற்கு ஒத்திருப்பதைக் கண்டு நாம் வியக்கின்றோம். இதனைக் **குறுந்தொகைப்** பாடல் ஒன்றால் கண்டு மகிழ்கின்றோம். தலைவன் வரைவிடை வைத்துப் பொருளின் பொருட்டுப் பிரிந்த காலத்தில் தலைவியின் ஆற்றாமைக் காரணத்தைத் தோழி வினவுகின்றாள். அதற்கு மறுமொழியாக, "இயல்பாக ஆற்றியிருக்கும் யான் தலைவனை மருவியதாகக் கண்ட பொய்க்கனவினால் வருத்தமுறுவேன் ஆயினேன்" என்று கூறுவாள்.

> கேட்டிசின் வாழி தோழி அல்கல்
> பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய
> வாய்த்தகைப் பொய்க்கனா மருட்டவேற் றெழுந்து
> அமளி தைவந் தனனே குவளை
> வண்டுபடு மலரில் சாஅய்த்
> தமியேன் மன்ற வளியோன் யானே[58]

என்பது கச்சிப் பேட்டு நன்னாகையார் பாட்டு. "இராக்காலத்தில் பொய் புகலுவதில் வல்ல தலைவன் என்னைத் தழுவியதாகப் பொய்க்கனா மயக்கத்தை உண்டாக்க, துயிலுணர்ந்து எழுந்து தலைவன்தான் என்று எண்ணி படுக்கையைத் தடவினேன். வண்டுகள் வீழ்ந்து உழக்கிய குவளை மலரைப் போல மெலிந்து தனித்தவளாக இருப்பதைக் கண்டேன்" என்கின்றாள்.

அகநானூற்றிலும் இத்தகைய கனா ஒன்று குறிப்பிடப் பெறுகின்றது. ஈண்டு இது பொருள் முற்றி மீண்ட தலைவன்

58. குறுந். 30

கூற்றாக வருகின்றது. "நங்காய் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பொருளை ஈட்டிக் கொண்டு திரும்புகின்றான். தலைவி ஊடல் கொள்ளுகின்றாள். தலைவன் ஊடலைத் தீர்க்கும் போக்கில் பேசுகின்றான். "வண்டு படியும் கூந்தலையுடையவளே[59] 'பெண்களுக்கு துயர் புரியலாகாது' என்று முன்னோர் கொள்கையைப் பழித்த உள்ளமொடு நெடுவழிச் சென்று 'எம்மை நினைத்தும் அறிந்திரோ?' என்று நின் முள் போன்ற கூரிய பற்களையுடைய பவளம் போன்ற வாயின் நகை அழிய, நோய் தோற்றுவித்து உண்மைக்குப் புறம்பான தொன்றை மொழியற்க. நினது அழகினை மறப்பேனோ? மறந்திலேன். கொடிய பாலை நிலங்கடந்து மாலையில் பகலவன் மறைந்திட்ட காலத்தில், நின்னை நினைந்து நினைந்து அரிய செலவினை மேற் கொண்ட அரிய வழியில் சிறிது கண் அயர்ந்தேன். அப்பொழுது பெண்மானைக் கண்டால் ஒத்த, வளை கழன்று விழுவதனை மேலே தள்ளி தாழ்ந்த நோக்கத்தோடு நிலத்தினை காலால் கீறும் வருத்தத்துடன் நின்னைக் (கனவில்) கண்டு, 'இனிய நகையினை உடைய அன்பே, நான் இங்ஙனம் வருந்தியிருப்பவும் எம்மிடத்து நீ ஊடி நிற்றல் எங்ஙனம் வந்தது?' என்று சொல்லி, நினதுபக்கம் திரும்பி நினது உயர்ந்த புருவத்துடன் திரண்டு சிறுகிய நெற்றியினைத் துடைத்து, மணம் பொருந்திய கூந்தலைக் கோதிய அந்த நல்ல வேளையில் வெறுங்கை ஆக்கிய அப் பொய்க்கனவினிடத்தோ உண்மையல்லாத துயிலை ஏற்று நின்னைக் காணாமல் ஏக்கற்ற வருத்தத்தினை நீ அறிவிற் கொள்ளாயாகலின் எம்மைப் புலக்கின்றாய்"[60] என்று தலைவன் கூறுகின்றான்.

59. கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு போலும்! (நக்கீரனின் மறுப்பை நினைவு கூர்க).
60. அகம் – 39

*கனவைப் பொருளாகக் கொண்டு முத்தொள்ளா யிரத்திலும் ஒரு பாடல் வருகின்றது.*

**களியானைத் தென்னன் கனவில்வந்து என்னை**
**அளியான் அளிப்பானே போன்றான்—தெளியாதே**
**செங்காந்தல் மெல்விரலால் சேக்கை தடவந்தேன்**
**என்காண்பென் என்னலால் யான்[61].**

*இது பாண்டியன்மீது காதல் கொண்ட ஒரு மங்கையின் கூற்று. "பாண்டியன் தண்ணளி செய்வான்போல் என்கனவில் வந்தாள். அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் என் செங்காந்தள் மெல்விரலால் படுக்கையைத் தடவினேன். என்னைத் தவிர நான் காண்பது ஒன்றும் இல்லை" என்கின்றாள்.*

*கனவுபற்றி சிலப்பதிகாரத்தில் வரும் குறிப்பையும் காண்போம். தேவந்தி என்பாள் கண்ணகியின் பார்ப்பனத் தோழி. அவள் நாடோறும் சாத்தன் கோயில் வழிபாடு செய்யும் நியமம் பூண்டிருந்தாள். அவள் கண்ணகிக்குக் கணவனைப் பிரிந்த குறையொன்றுண்டு என்பதை அறிவாள். அவள் சாத்தன் கோயிலை அடைந்து, அறுகு முதலியவற்றை 'இவள்'கணவனைப் பெறல் வேண்டும்' என்ற கருத்துடன் சாத்தன்மேல் தூவி வழிபட்டுக் கண்ணகியின் பாற்சென்று 'கணவனைப் பெறுக' என வாழ்த்தினாள்.*

*இதனைக் கேட்ட கண்ணகி 'நீ இங்ஙனம் கூறுதலால் கணவனைப் பெறுவேன். ஆயினும் நான் கண்ட கணவினால் என் நெஞ்சு ஐயுறாநின்றது' என்று கூறித் தான் கண்ட கனவினை எடுத்தியம்புகின்றாள். "என் கைப்பிடித்த கொழுநன் என்னை அழைத்துக் கொண்டு போக, நாங்கள் ஒரு பதியை அடைந்தோம். அந்த ஊரார் எங்கட்கு*

61. முத்தொள் — 63

ஏலாததோர் பழிச் சொல்லை இடுதேள் இடுமாறு போல் என்மீது போட்டனர். அப்பழி மொழியால் கோவலற்கு ஒரு துன்பம் உண்டாயிற்றென்று பிறர் கூறினர். அதனைக் கேட்ட நான் அவ்வூராளும் மன்னர் முன் சென்று வழக்கு உரைத்தேன். அதனால் அந்த அரசனோடு அந்த ஊருக்கும் உற்றதோர் தீங்குண்டு. அது தீக்கனாவாதலால் நினக்கு அதனை உரையேன். அப்பொழுது கடிய தொரு குற்றம் உண்டாயிற்று அத்தீக்குற்றத்தை[62] உற்ற என்னோடு பொருந்திய என் கணவனுடன் யான் பெற்ற நற்பேற்றினைக் கேட்பாயாகில் அது நினக்கு நகைப்பைத் தரும்'' என்கின்றாள். இது மதுரையில் கோவலனுக்கு ஏற்படப் போகும் நிகழ்ச்சியைக் குறிப்பதாகும்.

கம்பன் காவியத்தில் கனவு பற்றிய குறிப்புகளைக் காண்போம். சீதாப்பிராட்டியிடம் தான் கண்ட நன்னிமித்தத்தைக் கூறிய திரிசடை, தான் கண்ட கனவையும் கூறுவாள். "சீதாப்பிராட்டியே, நீ உறக்கமில்லாதவளாய் இருப்பதால் நினக்குக் கனவுகள் வரவில்லை. எனக்கு ஒரு கனவு வந்தது. குற்றமுள்ள இந்நாட்டில் உண்டாகும் கனவு முதலிய தோற்றங்கள் பொய்ப்பதில்லை. என் கனவு இது: "கற்புக்கரசியே, இராவணன் தன் பத்துத் தலைகளிலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு பெரிய கழுதைகளும் பேய்களும் பூட்டப் பெற்றுள்ளதேரின்மேல் சிவந்த ஆடையை உடுத்திக் கொண்டு தென்திசையை நோக்கிச் சென்றான். அவனுடைய மக்களும் உறவினர்களும் ஏனைய அரக்கர்களும் அத்திக்கையே நோக்கிச் சென்றனர். அவர்கள் யாவரும் திரும்பியே வரவில்லை. இதனால் இராவணன் குலத்தோடு அழிவது உறுதி[63]

62. தீக்குற்றம் – முலை திருகி எறிதல்
63. சுந்தர. காட்சி – 39, 40, 41 (இது இல்லத்தில் நிகழ்ந்தது)

*'இன்னும் சில கனவுகள் வந்தன. அவற்றையும் கூறுவேன். இராவணன் வளர்க்கும் ஓமாக்கினிகள் ஒருசேர அவிந்தன. சிவந்த சுடரினையுடைய தூண்டா மணி விளக்குகள் விளங்கப் பெற்ற, அவனது பழைய மாளிகை அதிகாலையில் ஆகாயத்திலிருந்து விழுந்த பேரிடியால் இடிபட்டழிந்தது. இக்கனவுகளை விடியற்காலையில் கண்டமையால் விரைவில் பலிக்கும்" என்கின்றாள்.*

*மேலும் சில உற்பாதங்களைக் கூறியவள் இன்னும் தான் கண்ட கனவுகளைத் தெரிவிக்கின்றாள். 'அம்மையே, இப்பொழுது ஒரு சொப்பனம் உண்டாயிற்று. அது என்னவென்றால், ஒன்றுக் கொன்று துணையான இரண்டு ஆண் சிங்கங்கள், புலிக் கூட்டத்தைத் தமக்குத் துணையாகக் கொண்டு அதனோடு அளவற்ற மதயானைகள் உறையும் அந்தக் காட்டை இடைவிடாமல் வளைத்தன. எல்லையற்ற பிணங்கள் விழும்படிக் கொன்று குவித்தன. அவ்வனத்திற்கு வந்திருந்த ஒருமயிலும் அந்தச் சிங்கங்களுடன் அவற்றின் நகரத்தை அடைந்தது"[64]*

*'ஆயிரம் அழகிய விளக்குகளைக் கொளுத்திய சிவந்த ஒளியையுடையதொரு பெருவிளக்கை திருக்கையில் ஏந்திக் கொண்டு செந்நிறமுள்ள பெண்மணி ஒருத்தி இராவணனது திருமாளிகையினின்றும் வீடணனின் திருமாளிகையை அடையலானாள்"[65]*

---

64. மேற்படி – 50, 51
இக்கனவினால் இராமலட்சுமணர்கள் வலியுள்ள வானரங்களைத் துணையாகக் கொண்டு இலங்கையைச் சார்ந்து அங்குள்ள அரக்கர்களையெல்லாம் கொன்று பிராட்டியைச் சிறை மீட்டுத் தமது நகரத்திற்குத் திரும்பிச் செல்லுதலைக் குறிப்பிட்டவாறு.

65. மேற்படி 52. இஃது இராஜ்யலட்சுமி இராவணனின் திருமாளிகையிலிருந்து வீடணனின் திருமாளிகையைச் சார்தலைக் குறிப்பதாகக் கொள்க.

“அந்தப் பெண்மணி என் தந்தையின் மாளிகையை அடைந்தபொழுது என்னை எழுப்பினாய்; ஆதலால் அக்கனவு முடியவில்லை” என்று திரிசடைசொல்ல, பிராட்டி, ‘அன்னையே, இன்னமும் உறங்கி அக்கனவின் மீதியையும் காண்பாயாக’ என்று தன் ஆர்வத்தைப் புலப்படுத்தி தன் இருகைகளையும் கூப்பித் தொழுதாள்.

கனவுகள் யாவும் மனத்தில் எழும் தோற்றங்களே. ஆகவே, மனத்தைப்பற்றி உளவியலார் கொண்டுள்ள சில கருத்துகளை ஈண்டுக் காட்டுதல் பொருத்தமாகும் எனக் கருதுகின்றேன். **மாக்டுகால்** என்ற உளவியலறிஞர் மனிதனிடம் தோன்றும் உந்தலைப் (Drive) பதினான்கு என்று கணக்கிட்டுப் பேசுவர். இவற்றுள் தலையானவை இரண்டு. ஒன்று, தன்னைக் காத்துக் கொள்ளும் இயல்பூக்கம். (Instinct of self-preservation) (உந்தல் என்பது அண்மைக் காலத்துக் கலைச் சொல்). இது பசியால் வெளிப்படும் உந்தல். மற்றொன்று, கால்வழியைக் காத்துக் கொள்ளும் இயல் பூக்கம் (Instinct of race-preservation). இது பாலுணர்ச்சியால் வெளிப்படும் உந்தல். இது காம உணர்ச்சி. காமமும் பசியும் மனிதனின் குடுமியைப் பிடித்து ஆட்டும் மாபெரும் ஆற்றல்களாகும். பசி பிறந்த நாள் தொட்டுக் காடுபோகும் இறுதிநாள்வரை இருந்து வருவது; காம உணர்ச்சி குமரப் பருவத்தில் தோன்றி இந்தக் கட்டை போகும் இறுதிநாள்வரை இருந்து வருவது. இவை இரண்டும் மனிதனைச் சமைக்கும் நித்திய நெருப்புகள். இவை இரண்டும் மனிதனுடைய அடுப்பாக மட்டுமின்றி விறகாகவும் இருந்து வருகின்றன. மனிதன் இவற்றில் பக்குவப் படுங்கால் இவற்றால் கருகி விடாமல் காத்துக் கொள்வதில்தான் அவனுடைய வாழ்க்கைப் போராட்டம் அடங்கியுள்ளது. மனிதன் அவற்றில் இல்லை;

அவற்றால் அவன் உருவாக்கப் படுகின்றவனாக உள்ளான். இத்துடன் இது நிற்க.

மனம் பற்றி இன்னொரு முக்கிய கருத்தையும் ஈண்டுக் கூறுவது மிகவும் பொருத்தமாகும். நீண்டகாலமாக மக்கள் உள்ளத்திலுள்ள நனவுப் பகுதியை மட்டிலுமே 'உளம்' (மனம்) என்று கருதி வந்தனர். இன்று **சிக்மெண்ட் ஃபிராய்டு** என்ற உளவியலறிஞர் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக இக்கருத்து முற்றிலும் மாறி விட்டது. நனவு நிலை (Conscious level), நனவடிநிலை (Sub-Conscious level) நனவிலி நிலை (Unconscious level) என்று உளம் (மனம்) முப்பகுதிகளாகச் செயற்படுவதாகக் கூறுகின்றார் ஃபிராய்டு. இக்கருத்தினை இன்று உளவியல் அறிஞர்கள் அனைவரும் ஒருமனத்துடன் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த உளநிலைகளை விளக்குவதற்கு **வில்லியம் ஜேம்ஸ்** என்ற உளவியலறிஞர் ஓர் அரிய உவமையைக் கையாளுகின்றார். வடபெருங்கடலினின்றும் (Arctic ocean) பெரும் பனிக்கட்டி மலைகள் விடுபட்டு அட்லாண்டிக் மாபெருங் கடலில் புகும். இம்மலைகளின் கொடுமுடிகளின் எட்டில் ஒரு பகுதியே புறத்தே புலனாகும். பனிக்கட்டி மலையொன்றினை முழு மனத்துடன் ஒற்றுமைபடுத்திக் கூறும்பொழுது சிறிதளவு தோன்றும் கொடுமுடியை நனவுளத்தோடு ஒப்புமை கூறலாம். அங்ஙனம் நிலையாகத் தோன்றிக் கிடக்கும் கீழேயுள்ள சிறுபகுதி சுற்றியுள்ள அலை வீச்சினால் தோன்றியும் மறைந்தும் வரும் இதனை நனவடியுளத்துடன் ஒப்புமை கூறலாம். இதற்குக் கீழாகப் பெருமலைபோல் கிடக்கும் பகுதி தாக்கினால், பெருங் கப்பல்களும் அச்சுவேறு ஆணிவேறாகச் சீதையைக் காண்கின்றோம். இதனை நனவிலியுளத்திற்கு ஒப்பிடலாம். நனவு உளம் முழுஉள்ளத்தின் கோடியில் ஒரு பங்கே என்றும் கூறிவிடலாம். புறக்காற்றாலும் பிறவற்றாலும்

இந்தப் பனிக்கட்டி மலை தலைகீழாகப் புரளுவதும் உண்டு. இத்தகைய உருமாற்றம் சிறுகச் சிறுகவும் எழலாம்; திடீர் என்றும் நேரிடலாம். எப்படிப் பனிக்கட்டிமலையின் பெரும்பகுதி புறத்தே புலனாகாமல் நீரின் அகத்தே ஆழ்ந்துள்ளதோ, அதே போன்று நனவிலியுளமும் உள்ளே ஆழ்ந்துள்ளது. எங்ஙனம் புறத்தே புலனாகும் பனிக்கட்டி மலைக்கு நீரின் அகத்தே ஆழ்ந்துள்ள பகுதி அடிப்படையாக உள்ளதோ, அங்ஙனமே நனவிலியுளமும் நனவு உள்ளத்திற்கு அடிப்படையாக உள்ளது. புறத்தே தோன்றும் பனிக்கட்டி மலையின் பகுதியும், நீரில் ஆழ்ந்து கிடக்கும் அதன் அடிப்பகுதியும் ஒரே மலையின் இருபகுதிகள் என்பது வெளிப்படை. அங்ஙனமே நனவு உளமும் நனவிலியுளமும் ஒரே உளத்தின் இருபகுதிகளாகும் என்பது கருதத்தக்கது.

தனிப் பட்டவரின் ஆசைகள், நிராசைகள், சபலங்கள், ஏமாற்றங்கள், வக்கிரங்கள், பாலுணர்ச்சி விகாரங்கள், பிறப்புஇறப்பு பற்றிய கருத்துகள், நல்வினை தீவினை பற்றிய கொள்கைகள் ஆகியவை வெளிப்படுவதைக் காணலாம். இத்தகையவற்றிற்கு விளக்கம் தருவதற்கு வழிகாட்டியாக இருப்பவர் சிக்மண்ட் ஃபிராய்ட் என்ற உளவியல் அறிஞர்.

**'ஃபிராய்டிசம்'** என வழங்கும் ஃபிராய்டின் கொள்கை முற்றிலும் அகவயமானது. மனிதன் இன்பத்தை நாடுபவன். இன்பம் நாடும் உணர்ச்சி இட்(Id) என்றும், லிபிடோ(Libido) என்றும் வழங்கப் பெறும். இஃது இணைவிழைச்சு (Sexual) தன்மையுடையது. மனிதனை இந்த அடிப்படையான ஆற்றல் அக-இயக்கத்திற்கும் புற-இயக்கத்திற்கும் அடிப்படையான இயக்க ஆற்றலாகும்.

மனிதனது இன்பநாட்டத்திற்குத் தடையாயுள்ளவை சமூகக் கட்டுப்பாடுகள். இவை சட்டங்கள் மூலமாகவும் அரசு நிர்வாகத்தின் மூலமாகவும் பாதுகாக்கப் பெறுகின்றன. இவை இன்பநாட்டத்திற்குத் தடைச்

சுவர்களாக-முள்வேலிகளாக-அமைந்துள்ளன. இந்த இன்ப நாட்டம் தடுக்கப் பெறுங்கால் அது மறைந்து விடுவதில்லை. அது நனவுநிலையிலிருந்து நனவடிநிலையையும் தாண்டி நனவிலி நிலைக்குச் சென்று விடுகின்றது. இவ்வாறு பலதடைப்பட்ட ஆசைகளால் உருவானதுதான் **ஆழ்மனம்** அல்லது **நனவிலி** மனம் என்பது. சில ஆசைகள் தவறானவை என்ற சமூகக் காரணங்களால் நிறைவேறாமற் போனால் இவை ஆழ்மனத்திற்குள் சென்று புதைந்து விடும். அமயம் நேரிடுங்கால் இவை நனவுநிலைக்கும் தெரியாமல் **'மாறுவேடத்தில்'** வெளிப்படும். இவ்வாறு நனவுநிலைக்கும் நனவிலி நிலைக்கும் ஒரு போராட்டமே நிகழும்.

**'இட்'** உணர்வு ஓர் இடையறா வெள்ளம் போன்றது. அது தடைபடுவதால்தான் "ஆழ் உணர்வு" ஏற்படக் காரணமாகின்றது. ஆழ் உணர்வுக்கும் (நனவிலி நிலைக்கும்) நனவுநிலைக்கும் இடையில் செயற்படும் உணர்வுநிலை ஒரு தடைநிலையம் (Check-post) போல் செயற்படுகின்றது. இதன் தடையால்தான் தடைப்பட்ட உணர்ச்சிகள் நனவுநிலைக்கு வரமுடிவதில்லை. இத்தடை சற்று ஒய்ந்திருக்கும்பொழுது அடக்கப் பெற்ற உணர்ச்சி தலைகாட்டுகின்றது; வெளியேயும் வருகின்றது.

நனவுநிலையில் நாம் காரணமறியாமல் செயற்படுவது போலவே, கனவிலும் கூட அங்ஙனமே பல நிகழ்ச்சிகள் தோன்றுவதைக் காணலாம். விழித்திருக்கும் நிலையில் நனைவிலி நிலையிலிருந்து - ஆழ்மனத்திலிருந்து - அடக்கப் பெற்ற உணர்ச்சி வெளியாவது போலவே உறக்க நிலையில் கனவிலும் வெளிப்படுத்துவதே இங்ஙனம் நிகழ்வதற்குக் காரணமாகும்.

நனவிலியுளமே நமது முழு அநுபவமும் வீற்றிருக்கும் மூல பண்டாரமாகும். இந்த உலகில் நாம் பல்வேறு வெப்ப நிலைகள், காற்று நிலைகள், பொழுது நிலைகள் முதலிய

இயற்கைத் தோற்றங்களிடையே வாழ்ந்து வருங்கால் அந்தந்த நிலைக் கேற்ப நம் குருதியும் நுரையீரலும் கல்லீரலும், பிற உறுப்புகளும் நம்மையும் அறியாது இயங்கி வருவது இந்த நனவிலி உள்ளத்தின் ஏவற்படியேயாகும். நமக்கு அவமானம் போன்ற துன்பம் நேரிடும்பொழுது நனவிலியுளம் வந்து அதனை நனவு உளத்தினின்றும் நீக்கித் தன்னுளே அடக்கி வைத்துக் கொண்டு நமக்குத் துணை செய்கின்றது. அப்போது அந்த அநுபவம் நமக்கு ஏற்படாதது போலவே ஆய்விடுகின்றது. அதனால் அந்த அநுபவத்தால் ஏற்பட விருந்த துன்பம் நீக்கப் பெற்று விடுகின்றது. ஆயினும் நனவிலியுளத்தில் இத்தகைய அநுபவங்கள் செயலற்றுப் போவதில்லை. நீறு பூத்த நெருப்பு போல் இவை மறைந்து கிடக்கும். சினம், அச்சம், அவமானம் போன்றவை அடக்கப்பெற்று நனவிலியுளத்தி லிருக்கும்பொழுது மிக ஆற்றல் நிறைந்தனவாக இருக்கும். ஆகவே, நனவிலியுளத்தில் ஆயிரக் கணக்கான உணர்ச்சிகள் எந்த நேரமும் குமிழியிட்டுக் கொண்டேயிருக்கும்.

ஃபிராய்ட் என்பார் கணக்கற்ற உண்மைநிகழ்ச்சி களைக் கொண்டு தெளிவாக விளக்குவார். அமெரிக்கா விலுள்ள மெக்சிகோ வளைகுடாவிலிருந்து வெப்ப நீரோட்டம் ஒன்று புறப்பட்டு ஐரோப்பாவின் மேற்குக் கடற்கரையை வந்தடைகின்றது இஃது அட்லாண்டிக் மாபெரும் மாபெரும் கடலினுள்ளே மறைநந்தோடி வந்து ஐரோப்பாவை அடையும்போதுதான் வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. அது போலவே "வாய் தவறிப் பேசினேன்' என்று நாம் பேசும் பேச்சும், 'கைதவறி எழுதினேன்' என்று செய்யும் செயலும் வேறு பிறவும் இவ்வாறு நனவிலி உள்மாகிய மாபெரும் கடலினிடையே மறைந்தோடிப் பின்னர் நனவு உள்ளத்தில் வந்து புகுந்து எழுந்து தோன்றுவனவாகும்.

கம்பன் காவியத்திலிருந்து ஓர் எடுத்துக்காட்டு. இராவணன், தன் 'மருந்தனைய தங்கை' சூர்ப்பணகையைத் காலகை என்றவளுடைய மக்களாகிய காலக் கேயருள் ஒருவனாகிய **வித்யுத்சிகுவன்** என்ற அரக்கர் தலைவன் ஒருவனுக்கு மணம் புரிவித்திருந்தான். அந்த மணமக்கள் இளவயதினராக இருந்த காலத்தில் இராவணன் திசைகள் தோறும் சென்று வெற்றி முழக்கம் செய்து வந்தான். மைத்துன உறவு இளவணனுக்கு அடி பணியத் தூண்டவில்லை. மைத்துனர்களிடையே கடும் போர் நிகழ்கின்றது. சூர்ப்பணகையின் கணவன் கொல்லப்படு கின்றான் அதுமுதல் இராவணனுடன் இருக்க வேண்டிய வளாகின்றாள் கைம்பெண் சூர்ப்பணகை. 'நாத்திகியின் கொடுமை' ஏற்படும் என்ற காரணத்தாலோ வேறு என்ன காரணத்தாலோ இராவணன் சூர்ப்பணகைக்குத் தண்டாவனத்தில் இருக்க இடம் வைத்து அவளுக்குத் துணையாகத் தன் ஒன்றுவிட்ட சகோதரர்களாகிய கர-தூணர்களை அறுபதினாயிரம் வீரர்களடங்கிய சேனையுடன் காவலும் வைத்தான். இராமனைக் காதலித்த சூர்ப்பணகைக்கு நேர்ந்த அவமானத்தையும் இராவணனுக்குச் சூர்ப்பணகையால் சீதைமீது ஊட்டப் பெற்ற 'காதல் போதை'யையும், அதுகாரணமாக இராவணன் இராமன் கணையால் மாய்ந்ததையும் நாம் அறிவோம். இராவணனை நினைந்து புலம்பும் வீடணன்,

> **கொல்லாத மைத்துனனைக் கொன்றாய்என்**
> **றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து**
> **பல்லாலே இதழ்அதுக்கும் கொடும்பாவி**
> **நெடும்பாரப் பழிதீர்ந் தாளோ ?**[66]

என்று வாய்விட்டு அரற்றுவதில் சூர்ப்பணகையின் நனவிலியுளத்தின் போக்கினை வெளிப்படுத்துவதாகக்

66. யுத்த. இராவணன் வதை – 225

கருதலாம். இளமையில் தன் இன்ப வாழ்க்கைக்கு ஊறுவிளைவித்த அண்ணனைக் கொல்வதற்குக் காரணமாக இருப்பதுடன் அவன் குலத்திற்கே காலனையும் கொண்டு வந்து விட்டாளோ? என்று வீடணன் கருதுவதாகக் கொள்ளலாம் சூர்ப்பணகையின் நனவிலி யுளத்தின் செயலே இராவணவதத்திற்குக் காரணமாயிற்று என்று கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

நனவியுளத்தின் போக்கினை இன்னொரு நிகழ்ச்சியாலும் அறியலாம். இராமாயணத்தின் கதையை நாம் படிக்கப் படிக்கத் தெரிந்துகொள்கின்றோம். ஆனால் காவியத்தைப் படைத்த கம்பனுக்கு கதை முழுதும் நன்கு தெரியும் அவன் சூர்ப்பணகையை நமக்கு அறிமுகம் செய்யும்போது,

> **நீலமா மணிநிற நிருதர் வேந்தனை**
> **மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்**[67]

என்று காட்டுவான். இஃது இராவணனது வரலாறு முழுவது முற்கூறுவதுபோல் அமைகின்றது. வீடணன் பின்னால் சொன்னதைக் கவிஞன் முன்னதாகவே கூறுகின்றான். சூர்ப்பணகையின் வரலாறு காமஉணர் வினை முற்றிலும் அநுபவிக்காத - அநுபவிக்க முடியாத - அநுபவிக்க வாய்ப்புகள் இல்லாத-ஒருவிதவையின் சொல்லோவியம். இதனை அற்புதமாகப் படைத்துக் காட்டும் கம்பனின் கற்பனைத் திறனுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

**6. சூளுரைகள் (சபதங்கள்):** சூளுரைகள் பற்றிய குறிப்புகள் பண்டைய இலக்கியத்திலும் காணப் பெறுகின்றன. சூளுரைகளை **வஞ்சினங்கள்** என்று குறிப்பிடும் புறநானூறு.

67 ஆரணிய. சூர்ப்பணகை - 8

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனுக்கும் ஏனைய சேர சோழ வேந்தர்கட்கும் பகைமை உண்டாயிற்று. அது காரணமாக அவ்விருவரும் ஒருங்கு கூடி பாண்டியனுடன் பொருதற்குப் போந்தனர். "வேந்தர் உடங்கியைந்து என்னொடு பொருதும் என்ப" என்று கேள்வியுற்றேன். அவர்களை அமரின்கண் அலறத் தாக்கிப் புறங்காணேனா யின் (தன் அருகிலிருந்த மனைவியைக்காட்டி),

.........சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாடி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக
.................. ............ ...............
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலம் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலம் காவலின் மாறியான் பிறர்க்கே[68]

என்று வஞ்சினம் (சூளுரை) கூறுகின்றான். தான் போரில் வெல்லாவிடில் (1) தன் மனைவியை விட்டுப் பிரிதல் (2) அறனிலை திரியா அவையில் அறம் தெரியாத ஒருவனை நியமித்து கொடுங்கோல் செய்தவனாக ஆதல் (3) மறுபிறப்பில் தென்புலம் காக்கும் சிறப்பிழந்து பிறர் வன்புலம் காக்கும் காவலர் குடியில் பிறக்க நேர்தல் என்ற மூன்றையும் அடைவதாக வஞ்சினம் கூறுவதை அறிகின்றோம்.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் சிற்றரசரும் பேரரசருமாகிய எழுவருக்கும் தலையாலங்கானம் என்னும் இடத்தில் பெரும்போர் மூண்டது. அக்காலத்தில் இவன் மிக்க இளையவன். வேந்தரும் இவன் இளையவன்தான் என இகழ்ந்து நால்வகைப் படையும் நிரம்ப உடையவன் எனத்

68. புறம் – 71

*தருக்கினர். அதனால் அவர்கள் இவனை இகழ்ந்து கூறிய தும் நெடுஞ்செழியனின் சினத்தீ கிளர்ந்தெழுந்து உடனே படையுடன் போருக்கெழும் நிலையில் இச்செழியன் நெடுமொழிகள் சில கூறலுற்றான்.*

இளையன் இவன்என உளையக் கூறுநர்
சிறுசொல் சொல்லிய சினங்கெழுவேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கப் படேஎ னாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் செந்நிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே[69]

*இதில் இவன் கூறிய நெடுமொழிகள்: (1) எம் இறைவன் கொடியவன் என்று கண்ணீர் பரப்பிக் குடி பழிதூற்றும் கோலேன் ஆகுக. (2) மாங்குடிமருதன் போன்ற புலவர்கள் பாடும் புகழ் பெறாது ஒழிக என் நாடு (3) என்னால் புரக்கப்பெறும் கேளிர் துயரம் மிக, இரப்பவர்க்கு ஈயமுடியாத வறுமையை யான் அடைக என்பவையாகும். இந்த மூன்றும் ஒரு வேந்தனைக் கீழ்மைப் படுத்துவன என்னும் உணர்வு இவன் உள்ளத்தே ஊறி நிற்பதைக் காணலாம்.*

*சேரன் தம்பி இசைத்த சிலப்பதிகாரத்திலும் வஞ்சினம் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. இமயத்திலிருந்து*

69. புறம் – 72

போந்த முனிவர்கள் ஆரிய அரசர்களாகிய கனகனும் விசயனும் தமிழரசர்களை இகழ்ந்தனர் எனக் கேட்டவன் செங்குட்டுவன். பத்தினிக் கடவுளின் உருச் செய்யும் சிலையினை இமயத்தில் எடுத்து அதனை அவ்வரசர்களின் முடியிலேற்றிக் கொணர்வதாக வஞ்சினம் கூறுகின்றான்.

இமயத் தாபதர் எமக்கீங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தருஉம்
வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதஓர் கற்கொண் டல்லது
வறிது மீளும்என் வாய்வா ளாகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலேன் ஆகுக[70]

என்ற அடிகளால் இதனை அறியலாம். பெரும்பாலும் இச்சூளுரைகள் போர்பற்றியே வருதலையும் காணலாம்.

கம்பன் காவியத்தில் இவை வரும் இடங்களைக் காண்போம். இரண்டு இடங்கள் காணப்பெறுகின்றன.

**(1) அநுமன்–இராவணன் வீரவாதங்கள்:** முதற்போர் படலத்தில் இவை நிகழ்கின்றன[71]

**அநுமன்:** இராவணனை நோக்கிப் பேசுவது. "மூன்று உலகத்தையும் வென்றாய். இந்திரனுடைய புகழை ஒழித்தாய். இவ்வளவு மேம்பாட்டுடன் இருப்பினும் இன்றைக்கு உனக்கு அழிவு நேரும்" என்று கூறி இராவணன் எதிரே உலகளந்த திரிவிக்கிரமமூர்த்தி போல் வளர்ந்து நிற்கின்றான் அநுமன்.

70. சிலப். கால்கோட் – அடி 9–18
71. யுத்த. முதற்போர் புரி – 161–189

இவ்வாறு வளர்ந்தவன் தனது வலக்கையைத் தூக்கி 'இதனைக் காண்பாயாக' என்று காட்டுகின்றான். "விற்படை முதலிய கொடிய ஆயுதங்களையெல்லாம் வலிமையோடு இயக்கும் பயிற்சி பெற்றுள்ளாய். இருபது கைகளைப் பொருந்தியவனாக இருக்கின்றாய். போராடுவதில் என் எதிரே நில்லு பார்ப்போம்" என்று சொல்லி பெருநெருப்பு போன்ற வெப்பத்துடன் பெருமூச்சு விடுகின்றான்.

பின்னும் கூறுவான்: "மிக்க பராக்கிரமத்துடன் என் எதிரே நிற்கின்றாய். இது நிலைத்து நிற்காத நிலையே. வாளினால் காட்டும் நின் ஆண்மையும், மேலேழ் கீழேழ் என்ற எல்லா உலகமும் ஒருங்கு அழியுமாறு செய்யும் நின்வலியும், மேலும் மேலும் முயன்று செயலாற்றுதலும், எவரும் ஒப்பாகாத தனிப்பட்ட ஆண்மையும், நின்தோள் வலியும் ஆகிய இவற்றை உன்னுடைய புகழுடன் ஒரு குத்தில் ஒழித்து விடுவேன்; இனி பின்வாங்காமல் குரங்கினுடைய ஒற்றைக் கையினால் புடைக்கின்ற குத்தைத் தாங்க வல்லாயோ? என்னுடைய தோள் வலியினால் என் ஒற்றைக் கையைத் தூக்கியான் குத்தவும் இறவாமல் நின்றாயே யானால், நீ பின்பு என்னை உன்னுடைய தல வரிசைகளினால் வலிமையோடு குத்துவாய். அத்தக் குத்தின் விசையால் நான் இறவாவிடினும் உன்னோடு எதிர்ந்துப் பொரேன்"- என்பது அநுமனின் வீரவாதம். வீரவாதம், சூளுரை, நெடுமொழி ஆகியவை ஒரே பொருளையுடையன.

**இராவணன்:** இராவணன் அநுமனை மிகவும் கொண்டாடிப் பேசுகின்றான்: "வலியோனே, வீரருக்குத் தக்கவற்றையே கூறினாய். நிகரற்ற தனிப்பட்ட என் எதிரே உன்னையின்றி பிறர் நிற்பவரும் உளரோ? என்னை

வெல்லவல்லை அல்லையாயினும் என்னோடு எதிர்த்து நின்று பொருததனாலாகிய உன்னுடைய புகழ் உலகுள்ளவளவும் நிலைத்து நிற்கும்".

மேலும் கூறுவான்: "பெருமையுடையவனே, தன்னந்தனியாக உள்ளநீ, எந்தவித ஆயுதமுமின்றி, என் சுற்றத்தைக் கொன்றாய். மிகக் கொடிய வில்லையும், வலிய சேனையுடன் உயர்ந்த தேரின்மீது இருக்கும் என் எதிரில் மிக்க வலிமையுடன் குத்துச் சண்டைக்கு நிற்கின்றாய். இத்தகைய நின்னுடன் ஒப்பானவர்கள் உலகில் யாவர் உளர்?" "மூன்று உலகிலும் உள்ள முத்தேவர் முதலானோரில் பித்தேறினவர்கள் அன்றி எத்தேவர்கள் அல்லது எத்தானவர் போரில் எனக்கு எதிராக நிற்பார்கள்? அவ்வாறிருக்க நின்ற இடத்தினின்று சலியாமல் 'மார்பில் குத்து' என்று இயம்பி என் எதிரில் நிற்கின்றாய். இங்ஙனம் கூறும் நின் துணிவு சொல்லும் தரமன்று."

"எனக்கோ போர் செய்வதற்கு இருபது கைகள் உள்ளன; புகழும் பெரிதாக உண்டு. நீ இரண்டே கைகளை உடையவன். என் எதிரில் 'நான் குத்துகிறேன்; தாங்குவாயானால் என்னைக் குத்து' என்று துணிவுடன் சொன்னாய், ஓர் அற்புக் குரங்கு இராவணனாகிய என் எதிரே நின்று சொல்லும் நிலை ஏற்பட்ட பிறகு வேறு என்ன வெற்றி உள்ளது? நான் போர் புரிவதும் தக்கதன்று". "இப்படிப்பட்ட பழி எனக்கு உன்னால் நேர்ந்ததைக் காட்டிலும் வேறு பழியுள்ளதோ? என் உயிர் போன்ற அட்சயகுமாரனைக் கொன்றாய். அப்போது பெருக் கெடுத்த குருதியின் ஈரம் இன்னும் உலரவில்லை. ஒப்பற்ற நீ என் எதிரே நின்று இந்தச் சொற்களை கூறுகின்றாய்?" "இங்ஙனம் பழி எனக்கு நேர்ந்ததனால் சபதம் செய்து இவற்றைச் சொன்னாய். இவ்வாறு கூறுவது இயல்பேயாகும். காலம் தாழ்ந்து விட்டது. நானோ பழியால்

வெட்கித் தலைகுனிய நிற்கின்றேன். நீயோ விரைந்து வந்து உலகம் எல்லாம் காணும்படிக் 'குத்துவாய்' என்கின்றாய்" என்பது இராவணன் பேச்சு.

அடுத்து அநுமன் மிக்க ஆரவாரத்துடன் தேரில் விரைந்து ஏறி கண் முழுதும் தீப்பொறிகள் பறக்க, கவசத்துடனே உடல் பொடிபட்டுச் சிந்தும்படி தன் வயிரம் போன்ற கையினால் விசையாகத் தன் முழுவலிமையையும் பயன்படுத்திக் குத்துகின்றான். அநுமனுடைய கைக்குத்து பட்டவுடன் அவனது மார்பில் புதைந்திருந்த திக்கயங்களின் தந்தங்கள் அவன் புகழ் சிந்தியதைப் போல் முதுகு வழியாகச் சிந்துகின்றன. இராவணனும் உயிர்தப்பின வன் போன்று உணர்வற்று மீண்டும் உணர்வு பெறுகின்றான். பெற்றவன், பெருமூச்செறிந்து அநுமன் முன்சென்று, "வீரனே, வலி என்பது உன்னிடத்தில் தான் உள்ளது. உன்னைக் நோக்குமிடத்து பிறவீரர்கள் அலிகளே. நான்முகனே என் எதிர்நின்று 'நீ சலிப்பாய்' என்று சொன்னாலும், சலியாத நான் மெலிவு என்பதனை உன்னால் அறிந்தேன். இனி, நீ என்னை வென்றவனே யானாய்'. இப்போது நான் யுகாந்த காலத்தில் விழுகின்ற பேரிடிபோல என்னுடைய ஒரு கையால் குத்துவேன். அப்போது நின் உயிர் நிலைத்திருக்கப் பெற்றால், நீ என்றும் நிலைத்திருப்பவனாவாய் உனக்கு வேறொரு பகையும் இல்லை" என்கின்றான்.

அடுத்து அநுமன் இராவணன் எதிரேசென்று, "என் குத்தினால் உயிர் ஒழிந்து விடாமல் எதிர்நின்று பேசினாயாதலால் என்னைநீ வென்றவனே யாவாய்" என்று இராவணனைக் கொண்டாடி அவன் எதிரே சென்று 'உன் கடனைப் பெற்றுக் கொள்க' என்று தன் விசாலமானமார்பைக் காட்டுகின்றான். இப்போது

*இராவணன் குத்துகின்றான். பெருவலிமைபடைத்த அநுமன் இராவணன் குத்தியதனால், வெள்ளிப் பெருமலையான கைலாயம் போல் சலிக்கிறான். இதனைக் கவிஞன்,*

சலித்த காலையில் இமையவர்
உலகெலாம் சலித்த;
சலித்த தால்அறம் சலித்தது;
மெய்ம்மொழி தகவும்
சலித்தது; அன்றியும் புகழொடு
சுருதியும் சலித்த;
சலித்த நீதியும் சலித்தது
கருணையும் தவமும்[72]

இந்திரசித்தன் சூளுரை: *இலக்குவன் கணையால் அதிகாயன் இறந்து படுகின்றான். எங்கும் அழுத குரலோசை கேட்கின்றது இராவணன்மூலம் இலக்குவன் தான் என்பதை அறிந்த இந்திரசித்தன் சபதம் செய்கின்றான்*[73]

கொல்நிறை படைக்கலத் தெம்பியைக்
கொன்று ளானை
அந்நின்ற நிலத்தவன் ஆக்கையை
நீக்கி அல்லால்
மன்னின்ற நகர்க்கினி வாரலன்
வாழ்வும் வேண்டேன்[74].

*இனி வீண்காலம் கழியாது பகைவனைக் கொல்வேன்; அவ்வாறு செய்யாமல் தான் நகருக்குத் திரும்புவதில்லை என்பது சூளுரை.*

72. யுத்த. முதற்போர் புரி – 186
73. யுத்த. நாகபாசப் – 9–13
74. மேற்படி – 9

இன்னும் சூளுரை தொடர்கின்றது. "என் தம்பியை உயிர் நீக்கிய இலக்குவனது குருதிப் பெருக்கை நிலமகள் குடியாவிடில், போரில் எதிர்த்து எனக்கு ஒருமுறை தோற்றவனான இந்திரனுக்கு எனது பெரிய பராக்கிரமம் நான்கு முறை தோற்றது போலாகக் கடவது".

"கொடுந்தன்மையையுடைய குரங்குச் சேனையை தனித்தனியாகத் துண்டுபட்டு முறியும்படி அழித்து இலக்குவனையும் கொல்லாது விடுவேனாயின் என் எதிரில் வருவதற்கும் அஞ்சின திருமால் முதலிய தேவர்கள் என்னைக் கண்டு சிரிக்கட்டும்."

"கொடிய நாகக்கணையையும் பாசுபதம் என்னும் கணையோடு, சங்கரன் கொடுத்த வாட்படையையும் காத்துக் கொண்டு காலங் கழித்த எனக்கு, இனிமேல் இற்றைநாட் போரில் பயன்படாது வீணாகுமேயானால், எல்லா முயற்சியையும் துறந்து உயிரை விட்டிடுவேன்; சோற்றையும் விரும்பியுண்டு வாழேன்"

"அமிழ்தத்தை யொத்த என் தம்பியின் உயிரைக் கவர்ந்த இலக்குவனை யமனுக்கு விருந்தாகக் கொடாமல், எனக்குப் பழம் பகைவர்களான கடவுள் தேவர்களின் கூட்டம் சிரிக்கும்படி வில்லையும் வீணே சுமந்து கொண்டிருப்பேனானால், நான் அந்த இராவணனது மகன் அல்லேன்'' என்று இவ்வாறு வீர வாதம் சொல்லி தந்தையின் அனுமதியுடன் போர்க்கோலம்கொண்டு புறப்படுகின்றான்.

# 6

# பரம்பொருள் ஏற்றம்

**திருப்பாற்** கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதம் ஈந்தவன் திருமால். அந்தத் திருமாலிடம் இணையற்ற பக்தி கொண்ட கம்ப நாடன் அவன் அவதாரமாகிய இராமனின் காதையை 'விருத்தம் எனும் ஒண்பாவில்' அமைத்து மானிடர்களாகிய நமக்குத் தமிழ் அமிழ்தம் ஈந்து மிகுபுகழ் பெற்றான். **துறக்க நீக்கம்** (Paradise Lost) என்ற காவியத்தைப் படைப்பதற்கு முன்னர் **மில்ட்டன்** என்ற ஆங்கிலக் கவிஞன் இருநூற்றுக்கு மேற்பட்ட தலைப்பு களைத் தேர்ந்தெடுத்து அவை யாவும் தான் குறிக்கோளாகக் கொண்ட காவியத்திற்குச் சிறிதும் பொருந்தவில்லை என்று கருதி அவையனைத்தையும் நீக்கிவிட்டு '**மனிதனின் வீழ்ச்சி**'. (the fall of man) என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்து அதனைத் தன் காவியப் பொருளாகக் கொண்டு 'துறக்க நீக்கத்தை' நிறைவு செய்ததாக ஆங்கில இலக்கிய வரலாறு கூறும். ஆனால் எந்தவித சிரமமுமின்றி 'நடையின் நின்றுயர் நாயகன்' திருக் கதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதனைக் காவியமாக்கியது தமிழர்களின் தவப்பயன் என்று கருதலாம். பரம்பொருளே இராமனாக வந்தது என்பது அவதார இரகசியம். இந்தத் திருக்காவியம் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல்' திருவரங்கநாதன்

சந்நிதியில் அரங்கேற்றப்பட்டதாகத் தமிழ் இலக்கிய வரலாறு கூறும்.

கம்பநாடன் பேரறிவு பெற்ற பெருங்கவிஞன். ஆதலால் அவன் தான் கண்ட தத்துவ தரிசனங்களை யெல்லாம் நன்றாக வடித்தெடுத்த சொற்களால் கவிதைகளாகப் புனைந்து நமக்குத் தருகின்றான்; சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களையும் உணர்த்துகின்றான். "மெய்யறிவு பெற்றிருந்தால்தான் சிறந்த கவிஞனாகத் திகழ முடியும்"[1] என்று கோலரிட்ஜ் என்ற ஆங்கில அறிஞன் கூறுவான். இதனைக் கம்பன் பிரகலாதன் வாய்மொழியாக

"கவிகளாகுவர்
காண்பவர் மெய்ப்பொருள்"[2]

என்று கூறியிருத்தல் ஈண்டுச் சிந்தித்தற்குரியது. ஒரு கவிஞனுடைய மதிப்பை அவன் நம்மிடையே உண்டாக்கும் மனப்பான்மையைக் கொண்டே எடைபோட முடியும் என்று எமர்சன் என்ற அறிஞரும் கூறுவார்[3]. கம்பன்தான் இயற்றிய காவியத்தில் இராமனைப் பரம்பொருளாகவே கருதுவான். இக்கருத்தினை அவன் பல இடங்களில் தன் கூற்றாகவும், பிற கதைமாந்தர்களின் வாய்மொழியாகவும் காட்டுவான்.

கவிஞன் கூற்று: திரு அவதாரப் படலத்தில்,

ஒருபகல் உலகெலாம் உதரத்து உட்பொதிந்து
அருமறைக் குணர்வரும், அவனை அஞ்சனக்

1. No man was ever a great poet without being at the same time a profound philosopher – Goleridge.
2. யுத்த. இரணியன் வதை – 32
3. The great poets are judged by the frame of mind they induce in us – Emerson.

கருமுகில் கொழுந்தொழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை[4]

என்று கூறுவான். அண்டங்களையெல்லாம் தன் வயிற்றில் அடக்கி வைத்துக்கொண்டு இருக்கும் திருமாலைக் கோசலை மகனாகப் பெற்றாள் என்பது கவிஞன் நமக்குக் காட்டும் குறிப்பாகும். இதனையே குலமுறை கிளத்துப் படலத்திலும்,

எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க்
கவுசலைஎன் பாள்பயந்தாள்[5]

என்று விசுவாமித்திரர் வாக்காகக் கூறுவான்.

பாலகாண்டத்தில்,

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்[6]

என்று படைப்பு, காப்பு, அழிப்பு என்னும் முத்தொழிலுக்கும் முதற்காரணமானவர்—கடவுள்—என்று கூறுவான். அயோத்தியா காண்டத்தில் இவ்வுலகை யெல்லாம் ஆண்டவன் உடலாகக் கொண்டவன் என்பதை,

வானின்று இழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வுபோல்
உள்ளும் புறனும் உளன்[7]

4. பாலகா. திருவவதாரம் – 150
5. மேற்படி – குலமுறை – 20
6. மேற்படி – காப்பு
7. அயோத்தி – காப்பு

என்று உணர வைக்கின்றான். இதனை வைணவ தத்துவம் சரீர—சரீரி பாவனை என்று பேசும். இத்தகைய கடவுளை அருமறைகளாலும் அந்தணர்களாலும் நான்முகன் முதலிய தேவர்களாலும் அறிய முடியாது என்பதை ஆரண்ய காண்டத்தின் காப்புச் செய்யுளால் உணர்த்துவான். "புலன் ஐந்திற்கும் சொலப் படான் உணர்வின் மூர்த்தி"[8] என்ற நம்மாழ்வாரின் கருத்திற்கு இஃது இயைத்திருத்தல் உணரத்தக்கது.

ஒவ்வொரு சமயமும் கடவுளை ஒவ்வொரு விதமாகக் கூறும். ஒவ்வொரு சமயத்தினரின் மனப்பான்மைக்கு ஏற்றவாறு 'கடவுள்' என்ற பொருள் விரிந்து விளக்கம் தந்து நிற்கும். இதனைக் கம்பன் தன் கூற்றாக,

ஒன்றே என்னின் ஒன்றேயாம்
பலவென்று உரைக்கின் பலவேயாம்
அன்றே என்னின் அன்றேயாம்
ஆம்என்று உரைக்கில் ஆமேயாம்
இன்றே என்னில் இன்றேயாம்
உளதென்று உரைக்கில் உளதேயாம்[9]

என்று உணர்த்துகின்றான். இன்னும்,

மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத், தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தென இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை[10]

8. திருவாய் 2.4:10
9. யுத்த. காப்பு
10. கிட்கிந்தை – வாலி வதை – 71

*என்று இராமநாமத்தின் பெருமையைப் பெருமிதத்துடன் பேசுவான். இங்ஙனம் தற்கூற்றாக இராமனே பரம் பொருள் என்று காட்டும் இடங்கள் பல.*

**பிறர் கூற்றுகள்:** *பரம்பொருளைக் காட்டுவனவாக அமைந்த பிறர் கூற்றுகளும் பல உள்ளன. சிலவற்றைக் காட்டுவேன்.*

**விராதன்:** *இவன் தும்புருத்தன் என்ற திருநாமம் கொண்ட உம்பருலகத்துக் கந்தருவன். குபேரனது சாபத்தால் அரக்கப் பிறவியை அடைந்தவன். இராமனால் சாபம் நீங்கி இராமனைப்* **பதினான்கு** *பாடல்களால் தோத்திரம் செய்கின்றான்*[11] *இந்தப் பாடல்களில் 'பரம் பொருள் காட்சி' காட்டப் பெறுகின்றது. பாடல்கள் யாவும் ஆழ்வார்களின் பாசுரங்களை நிகர்த்தனவாக உள்ளன. ஒரு பாடலைக் காட்டுவேன்.*

**வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனநின்**
**பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ ?**
**ஓதங்கொள் கடல்அன்றி ஒன்றினோடு ஒன்றுஒவ்வா**
**பூதங்கள் தொறும்உறைந்தால் அவைஉன்னைப்**
**பொறுக்குமோ**[12]

*(அறைகின்ற — துதிக்கின்ற; விரிந்தன — பரந்தன; ஓதம் — குளிர்ச்சி; ஒவ்வாத — ஒத்திராத; உறைந்தால் — வாசம் செய்தால்)*

*அருமறைகள் யாவும் அச்சுதனின் திருவடிப் பெருமையையே பேசுவனவாதலால் 'வேதங்கள் அறைகின்ற' என்கின்றான். வேதங்கள் அறைகின்ற பாதங்கள்' என்று சேர்த்துப் பொருள் காணல் வேண்டும். நின்பாதங்கள் உலகெங்கும் விரிந்தன்' என்றது எம்*

11. ஆரணிய – விராதன் வதை – 48–61
12. விராதன் வதை – 48

பெருமான் திரிவாக்கிரமாவதாரத்தை ஏறிட்டுக் கொண்டு இப்பூமியை ஓரடியால் அளந்தபோது, அத்திருவடி உலகெங்கும் விரிந்ததை உட்கொண்டு கூறியதாகும். உலகெங்கும் விரிந்தன' என்பதால் எம் பெருமானின் **'வியாபகத் தன்மையைக்'** கூறியவாறாம். 'படிவங்கள் எப்படியோ?' என்றதால் எம்பெருமானின் திருமேனி—திவ்வியமங்கள விக்கிரகம்—இத்தன்மைத்து என்று உத்தேசித்து அறிய முடியாது என்பது பெறப்படுகின்றது. அவன் மனம், மொழி, மெய்களுக்கு எட்டாதவன் என்பது குறிப்பு. 'ஓதங்கொள் கடல் அன்றி' என்பதனால் எம்பெருமானின் **'வியூக நிலை'** சுட்டப்பெறுகின்றது. இன்னும் இது தனியே எடுத்துக் கூறப் பெற்றதால், திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது கண் வளர்தலும், பிரளயகாலத்துப் பெருங்கடலில் ஆலிலையில் பள்ளி கொள்ளுதலுமாகிய சிறப்புத் தன்மையைக் காட்டுவன வாகும் எனலாம். பூதங்கள் என்பவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் (பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) ஆகியவை. இவை ஒன்றினோடு ஒன்று ஒவ்வா? நிலம் நிலையாயிருத்தலும் கந்தம் உடையதாதலும், குளிர்ந்த உணர்வுடையதாதலும் குறிக்கப் பெறுகின்றது. நெருப்பு—மேல் நோக்கி எரிதலும் சுடும் உணர்ச்சி உடையதாதலும் சுட்டப் பெறுகின்றது. காற்று—பத்துத் திக்குகளிலும் வீசுதலும், உருவமின்றி உணர்வூட்டுதலும் உணர்த்தப் பெறுகின்றது. விசும்பு—எங்கும் பரவியிருத்தலும் சப்த குணமுடையதாதலும் காட்டப் பெறுகின்றது. இவ்வாறு தன்மை வேறுபாடுகள் உடையதாதல்பற்றி 'ஒன்றினோடு ஒன்று ஒவ்வா' என்று சுட்டப் பெற்றன. 'கடல் நீருள்ளான்' என்றவாறு ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றன் சொருபமான கடலில் மாத்திரமேயன்றி ஏனைய பூதங்களிலும் நீ உறைந்தால், "அவை உன்னைப் பொறுக்க வல்லன" என்பதனால் அவற்றையும் நீ தாங்குகின்றாய்

என்பது தோன்றுவதை அறியலாம். 'பூதம்' என்ற சொல்லாற்றலால் விநோதமாகக் காட்டப்பெறும் சடைபூதங்களிலும் புகுந்த மனிதனே அவற்றைத் தாங்கிச் செலுத்துதல் போல, ஐம் பெரும்பூதங்களினும் உறைகின்ற நீயே அவற்றைத் தாங்குகின்றாய் என்பது தோன்றுவதைக் காணலாம். 'பூதங்கள் தோறும் உறைந்தால்' என்றதனால் 'அந்தர்யாமித்துவம்' தோன்றுதலும், 'அவை உன்னைப் பொறுக்குமோ' என்றதனால் அனைத்திற்கும் ஆதார மாதலும் சர்வசக்தித்துவமும் தெரிவிக்கப் பெற்றன என்பதையும் அறியமுடிகின்றது.

ஆகவே, இப்பாடலால் பரம்பொருளின் (1) வியூக நிலை, (2) வியாபகத்துவம், (3) அந்தர்யாமித்துவம், (4) ஆதார—ஆதேய நிலை (நவவிதசம்பந்தங்களுள் ஒன்று) (5) பிரளய காலத்தில் பெருங்கடலில் ஆலிலையில் கண்வளர்தல் ஆகிய தன்மைகள் காட்டப்பெற்றுள்ளன என்பதனை அறிய முடிகின்றது.

**இந்திரன்:** விராதனது சாபம் தீர்த்த பின்னர் இராமன் சரபங்கனது[13] ஆசிரமத்தருகில் சென்ற போது நான்முகன் கட்டளையால் அம்முனிவனைச் சத்தியலோகம் அழைத்துச் செல்ல இந்திரன் வந்திருந்தான். அவன் இராமனைக் கண்டு ஐந்து பாடல்களால் துதித்துச் செல்லு கின்றான்[14]. இத்துதிப்பாடல்களில் இந்திரன் வாக்காக இராமன் பரம்பொருள் என்று காட்டப் பெறுகின்றான்.

இவற்றுள் ஒரு பாடலைக் காட்டுவேன்:

> தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாது நின்ற
> சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி,

13. சரபங்கன் — என்பதற்கு '(மன்மத) பாணங்களைப் பங்கப் படுத்தினவன்' என்பது பொருள். 'காமத்தை யொழிந்தவன்' என்பது கருத்து.
14. உசரபங்கன் பிறப்பு நீங்கு – 27–31.

நீந்த அரிய நெடுங்கருணைக் கெல்லா
நிலையமே! வேத நெறிமுறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே! பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்த வரம்உதவ எய்தினையே! எந்தாய்!
இருநிலத்த வோநின் இணையடித் தாமரையாம்.[15]

*(தோய்ந்தும் - கரந்தும்; சுடர் - சோதி உரு; தொடக்கு - பற்றுகள்; நேடி - தேடி; உணர்வே - அறியாப்பரம் பொருளே; எய்தினையே - எழுந்தருளினையே)*

*இதில் ஆழங்கால் படுவோம்.*

*எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய் எம் பெருமான் கலந்திருத்தலால் 'தோய்ந்தும் பொருள னைத்தும்' என்கின்றான். அங்ஙனம் கலந்திருக்கும்போதும் அந்தப் பொருள்களின் குணங்கள், குற்றங்கள் எம்பெருமானைத் தொடுவதில்லை. சித்து (உயிர்), அசித்து (உடல்) இவை இரண்டினுள்ளும் அந்தர்யாமியாய் உள்ளான் இறைவன். உலகிலுள்ள எல்லாப பொருள்களிலும் இப்படித் தோய்ந்தே உள்ளான். எப்படி உள்ளான்? — 'உடல் மிசை உயிர் எனக் கரந்துள்ளான்' (திருவாய் 1-1:7) என்று ஆழ்வார் கூறுவது போல். நம் உள்ளத்தில் எம்பெருமான் இருப்பினும் நாம் செய்யும் நல்வினை தீவினைகள் அவனுடன் சம்பந்தப்படுவதில்லை. 'கர்மங்கள் என்னைத் தீண்டோ'[16] என்பது கண்ணன் கூற்று. முற்றத் துறந்த முனிவர்களின் சுற்றமாக இருப்பவன். இதனைத் 'தொடக்கறுத்தோர் சுற்றமே' என்று குறிப்பிடுகின்றான். எம்பெருமான் கருணை வடிவானவன்; கருணாகரன்; கருணாநிதி; இதனைக் கருத்தில் கொண்டு 'நெடுங்கருணைக்கெல்லாம் நிலையமே' என்கின்றான். எம்*

15. ஆரணிய - சரபங்கன் பிறப்பு - 27
16. கீதை 4:14

*பெருமான் தத்துவ ஞானத்தால் அறியப்படுவானாதலால் 'நேர்ந்த நெறிமுறையின் நேடி, ஆய்ந்த உணர்வின் உணர்வே' என்கின்றான். எம்பெருமானுக்கும் (பரமான்மா) சீவான்மாவுக்கும் சொல்லப்பெறும் உறவுகளில் 'தந்தை—தனயன் உறவு' ஒன்றாதலால் 'எந்தாய்' என்கின்றான். தேவர்கள் மேரு மலையிலிருந்து திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் பரமனைப் பிரார்த்தித்த காலத்தை நினைந்து 'அந்நாள்' என்கின்றான். 'தசரதன் மதலையாய் வருதும்', 'வருந்தல் வஞ்சகர்தந்தலை அறுத்து இடர்தணிப்பேன்' என்பன போன்ற உறுதி மொழிகளை நினைந்து தந்த வரம் உதவ எய்தினையே' என்கின்றான். 'நின்னுடைய இணைத்தாமரை அடிகள் அரிய நிலத்தில் பொறுக்கத் தக்கனவோ?' என்று இரங்கிப் போற்றுகின்றான். இப்பாடல்களால் எம்பெருமானின் அந்தர்யாமித்துவம், எம்பெருமான் தத்துவ ஞானத்தால் அறியப்படுபவன், ஆன்மாக்களின் வேண்டுகோளின் படி அல்லல்களைத் தீர்க்கும் பொருட்டு அவதாரம் எடுப்பவன் என்ற பரம்பொருளின் தன்மைகள் காட்டப்பெறுகின்றன.*

**கவந்தன்:** *அயோமுகி*[17] *யினின்றும் விடுபட்ட பிறகு இராமலக்குமணர்கள் கவந்தன்*[18] *இருக்கும் வனத்தை அடையும்போது கவந்தன் தனது வழக்கப்படி இரண்டு புயங்களையும் நீட்டி, எல்லாப் பிராணிகளையும் வாரித்*

17. அயோமுகி – ஓர் அரக்கி. இராமனுக்குத் தண்ணீர் கொண்டு வரச் சென்ற இலக்குவன்மேல் காதல் கொண்டு அப் பெருமானை மயக்கி வலியத் தூக்கிச் செல்லலானாள். மோகம் நீக்கிய இலக்குவன் அவளுடைய மூக்கைத் துணித்து அவளை அகற்றி மீண்டு இராமனை அடைந்தான்.

18. கவந்தன் : வயிற்றுக்குள் தலை அடங்கினமைபற்றிக் கவந்தம் போல் தோற்றம் உடையவனாயிருந்தமையால் 'கவந்தன்' எனப் பெயர் பெற்றான். 'கவந்தம்' என்ற சொல்லுக்குத் தலையற்றதும் தொழிலுடன் கூடியதுமான உடல் என்பது பொருள்.

தனது வயிற்றினுள் இடத் துணிய, அதற்குள் அடங்கிய இராமலக்குமணர்கள் அவனுடைய இரண்டு கைகளையும் வெட்டித் தள்ளினர். உடனே அவன் சாபத்தினால் நேர்ந்த கோர உருவம் நீங்கி திவ்விய உருவம் பெற்று ஆகாயத்தில் நின்று கொண்டு ஒன்பது பாடல்களால் துதிக்கின்றான்[19] இத்துதிப்பாடல்களில் இராமன் 'பரம் பொருள்' என்று காட்டப்பெறுகின்றது. அவற்றில் ஒரு பாடலை ஈண்டுக் காட்டுவேன்.

> மூலமே இல்லா முதல்வனே நீஎடுத்த
> கோலமே யாவர்க்கும் தெரிவரிய கொள்கைத்தான்
> ஆலமோ ? ஆலின் அடைவோ ? அடைக்கிடந்த
> பாலனோ ? ஆதிப் பரமனோ ? பகராயே[20]

(மூலம் — காரணப்பொருள்; கோலம் — வடிவம்; அடை — இலை; ஆதிப்பரமன் — மூலமான பரம்பொருள்)

'மூலமே இல்லா முதல்வனே' என்பதால் எம்பெருமானுக்கு முந்திய வேறொரு காரணப் பொருள் இல்லாத முழுமுதற் கடவுள் என்பது பெறப்படுகின்றது. எல்லாப் பொருள்களும் எம்பெருமானிடமிருந்து தோன்றியவையேயன்றி எம்பெருமான் எவற்றினின்றும் தோன்றாதவன்.

> நினைந்த எல்லாப் பொருள்கட்கும்
> வித்து ஆய் (திருவாய் 1.5:2)

> தானோர் உருவே தனிவித்துஆய்
> தன்னின் மூவர் முதலாய
> வானோர் பலரும் முனிவரும்
> மற்றும் மற்றும் முற்றும்ஆய் (திருவாய் 1.5:4)

---

19. ஆரணிய – கவந்தப் – 42–50
20. மேற்படி – 43

வேர்முதலாய் வித்துஆய்ப் பரந்து தனிநின்ற
கார்முகில் வண்ணன் (திருவாய் 2.8:10)

என்ற ஆழ்வார் பாசுரங்களை நினைந்து இந்த உண்மையினைத் தெளியலாம். எல்லாம் அழியும் பிரளய காலத்தில் பொங்கிய உலகங்களை மூடிக் கொள்ளும் அந்தப் பிரளயப் பெருங்கடலில் ஓர் ஆலமரம் தோன்றும்; அந்த ஆலமரத்தின் ஓர் இலையின்மீது எம்பெருமான் ஒருவனே சராசரங்களையெல்லாம் ஊறு படாமல் தனது திருவயிற்றில் அடக்கி வைத்துக் கொண்டு ஒரு சிறு குழந்தை வடிவத்துடன் படுத்து யோக நித்திரை—அறிதுயில்—செய்து வருகின்றனன் என்பது நூற்கொள்கை.

எவரும் யாவையும் எல்லாப் பொருளும்
கவர்வுஇன்றித் தன்னுள் ஒடுங்க நின்ற
பவர்கொள் ஞான வெள்ளச் சுடர்மூர்த்தி (2.2:1)

பாலனாய் ஏழ்உலகு உண்டு பரிவுஇன்றி
ஆலிலை அன்னவசம் செய்யும் அண்ணலார் (4.2:11)

என்ற ஆழ்வார் பாசுரங்களும்,

பாலன்தனது உருவாய்
ஏழ்உலகுஉண்டு ஆல்இலையின்
மேல்அன்று நீவளர்ந்த
மெய்என்பர் (முத. திருவந். 68)

என்ற பொய்கையாழ்வார் வாக்கும் இக்கருத்தினை அரண் செய்கின்றன.

**வாலி:** இராமன் தன்னைக் கொன்றது சரியே என்று சமாதானம் அடைந்து தனது குற்றங்களைப் பொறுத் தருளுமாறு இராமனை வேண்டுகின்றான்.

தீயன பொறுதிதி என்றான்
சிறியன சிந்தி யாதான்.[21]

21. கிட்கிந்தை – வாலி வதை – 119

*பின்னர் வாலி இராமனைத் துதித்து ஒரு வரம் வேண்டுதலை ஏழு கவிகளால் கூறுவான் கவிஞன். இவற்றில் இராமனின் பரத்துவம் நிலை நாட்டப் பெறுகின்றது. எடுத்த எடுப்பில்,*

**ஆவிபோம் வேளையில் அறிவுதந் தருளினாய்**
**மூவர்நீ முதல்வன்நீ முற்றுநீ மற்றுநீ**
**பாவம்நீ தருமம்நீ பகையும்நீ உறவும்நீ.[22]**

*என்று கூறுவான். தொடர்ந்து, "நின் திருநாமத்தை உச்சரித்து வருதலால் பெறும் பலத்தால் சிவபெருமான் தன்னைத் துதித்தவர்கட்கெல்லாம் வேண்டிய வரங்களைத் தவறாமல் கொடுத்து வருகின்றான். அப்படிப்பட்ட திருநாமத்தையுடைய நின்னையே நேரில் காணும் பேறு பெற்ற எனக்கு பெறுதற்கு அரிய பேறு உண்டோ? (123), "நீ எல்லா உயர்திணை, அஃறிணைப் பொருள்களாயும், ஆறுவகைக் காலங்களும் அவற்றின் பயனாயும், பூவும் மணமும் போல் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கும் ஒப்பற்றவனாயும் இருக்கும் நின்னை, நீ யார் என்றும் உன் தனிமை யாது என்றும் அறிவு உண்டாகித் தெரிவித்தது. ஆதலால் பரமபதம் எனக்குக் கிடைப்பது அருமையாகுமா?" (124), "அறத்தையே உருவமாகவுள்ள உன்னைக் கண்டு கொண்டேன். இனிக் காணவேண்டிய பொருள் ஒன்றும் இல்லை. நீ எனக்கு அளித்த தண்டனையே என் பழ வினையை (சஞ்சிதம்) ஒழித்து விட்டது" (125).*

**கொற்றவ! நின்னை என்னைக்**
**கொல்லிய கொணர்ந்து தொல்லைச்**
**சிற்றினக் குரக்கி னோடும்**
**தெரிவுறச் செய்த செய்கை**

22. மேற்படி – 121

வெற்றரசு எய்தி எம்பி
வீட்டரசு எனக்கு விட்டான் (126).

என்று கூறியவற்றால் இராமனது பரத்துவம் அறுதியிடப் பெறுகின்றது.

மரணப் படுக்கையிலிருந்து கொண்டு வாலி சுக்கிரீவனுக்கு உறுதிப்பொருள் உரைக்கும் போக்கில் இராமன்தான் பரம்பொருள் என்று கூறுகின்றான்;

மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள் துணிவால் தூக்கி
அறைகழல் இராமன் ஆகி
அறநெறி நிறுத்த வந்தது
இறையொரு சங்கை இன்றி
எண்ணுதி.[23]

(மறைகள் — வேதங்கள்; துறைகள் — சாத்திரங்கள்; முடிவு — சித்தாந்தம்; துணிபொருள் — தேர்ந்த பொருளாகிய பரப்பிரம்மம்)

என்று இராமனது பரத்துவத்தைப்பற்றி உணர்த்துகின்றான்.

தொடர்ந்து, "அழியாமல் எந்நாளும் நிலை நிற்கின்ற முக்திச் செல்வதை அமைய விரும்பி அதற்குரிய நெறி நிற்கின்ற முமுட்சுகளான ஆன்மாக்கள் யாவும் இவன் திருநாமத்தை செபிக்கின்றன; இவனைத் தியானிக்கின்றன. இதனை நீ உணர்வாய். சாமானியமாக இவனிடத்திலுள்ள சிறப்பை நோக்கினாலும், அதற்கு என்னைக் கொன்றிட்ட இந்த வலிமையே சான்றாகும். இதனைக் காட்டிலும் மேலான சான்று ஒன்றும் வேண்டா"[24] என்றும்,

23. கிட்கிந்தை – வாலி வதை – 132
24. மேற்படி – 133

"எம்பெருமானுக்கும் பிறர்க்கும் துரோகம் செய்து எண்ணில்லாத தீவினையைப் புரிந்தவர்களும் அப்பெருமானால் கொல்லப்பெறுவாராயின், அவர்கள் அத்தண்டனையினால் தமது தீவினைகளெல்லாம் துடைக்கப்பெற்று முத்தி பெறுவர். ஆயினும் அவனது திருவடித் தாமரைகளையும் வணங்கி பயபக்தி விசுவாசங்களுடன் அவனுக்குக் குற்றேவல் செய் தொழுகியவர்கள் முக்தி பெறுவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ"[25] என்றும் கூறுவான்.

இந்த அறவுரைகள் மேற்கூறிய பரத்துவத்திற்கு அரணாக அமைகின்றன. மேலும் இராமனே பரம்பொருள் என்பதை,

> **திருமறு மார்பன் ஏவல்**
> **சென்னியில் சேர்த்தி**[26]

என்ற பாட்டடியால் இலக்குமியையும் (பெரிய பிராட்டியையும்) ஸ்ரீவத்சம் என்னும் மறுவையும் திருமார்பில் உடைய திருமால் என்பதையும் உறுதி செய்கின்றான். ஏழு கவிகளால் இராமனது பெருமையைப் பேசுகின்றான்.[27]

பிறகு சுக்கிரீவனைக் கொண்டு அங்கதனைத் தருவிக்கின்றான். அவனுக்கும் இராமனே பரம் பொருள் என்பதை உணர்த்துகின்றான்.

> **தன்னின்**
> **மேலொரு பொருளும் இல்லா**
> **மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்**

25. மேற்படி – 134
26. மேற்படி – 135
27. மேற்படி – 132–138

கால்தரைத் தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த[28]

*(மெய்ப்பொருள் — உண்மைப்பொருள் (பரப் பிரம்மம்); மால் — மயக்கம்)*

*என்ற பாடற்பகுதியில் இதனைக் கண்டு தெளியலாம். மேலும்,*

என்னுயிர்க்கு இறுதி செய்தான்
என்பதை இறையும் எண்ணாது
உன்னுயிர்க்கு உறுதி செய்தி;
இவற்குஅமர் உற்றது உண்டேல்
பொன்னுயிர்த் தொளிரும் பூணாய்!
போதுதி; நிலைமை நோக்கி
மன்னுயிர்க்கு உறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி[29]

*என்று வற்புறுத்திக் கூறுவான். இதிலும் இராமனது பரத்துவம் உறுதி செய்யப்பெறுகின்றது.*

அநுமன்: *நாகபாசத்தால் கட்டுண்ட அநுமன் இராமனை இன்னான் என அறிமுகப்படுத்தும் இடத்தில் கூறுவது:*

வேதமும் அறனும் சொல்லும்
மெய்யற மூர்த்தி வில்லோன்.[30]

*என்கின்றான். இன்னும் அவனை,*

28. மேற்படி - 148
29. மேற்படி - 149
30. சுந்தர - பிணிவீட்டு - 78

கடையிலா மறையின் கண்ணும்
ஆரணங் காட்ட மாட்டா
அறிவினுக்கு அறிவும் அன்னோன்
போர்அணங்கு இடங்கர் கவ்வப்
பொதுநின்ற முதலே என்ற
வாரணம் காக்க வந்தான்
அமரரைக் காக்க வந்தான்.[31]

*(மறை — வேதம்; ஆரணம் — உபநிடதம்; அணங்கு — வருத்தத்தைச் செய்யும்; இடங்கர் — முதலை; வாரணம் — யானை)*

*என்று கூறுவான். முதலையின் பிடியிலிருந்து கசேந்தராழ்வானைக் காத்த திருமால் இராமனாக அவதரித்துள்ளான் என்று இனங் காட்டுகின்றான்.*

*முத்தாய்ப்பாக,*

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த
காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்புவிட்டு அயோத்தி வந்தான்.[32]

*(மூலம் — முதல்; ஈறு — இறுதி; கணக்கு — எல்லை; காரணன் — முழுமுதற் கடவுள்; ஆலம் — தாமரை; பொருப்பு — கைலைமலை)*

*என்று காரணங்களுடன் இராமனை பரம்பொருள் என உறுதிப்படுத்துவான் மாருதி.*

31. மேற்படி - 79
32. மேற்படி - 80

**அங்கதன்:** *அங்கதன் தூது சென்றபோது, தான் இன்னார் தூதன் என்று சொல்லும் பாங்கில் இராமனே பரம்பொருள் என்ற கருத்தை வெளியிடுகின்றான்.*

**பூதநாயகன் நீர்சூழ்ந்த புவிக்கு**
**நாயகன் இப்பூமேல்**
**சீதைநாயகன் வேறுள்ள தெய்வ**
**நாயகன் நீசெப்பும்**
**வேத நாயகன் மேல்நின்ற**
**விதிக்கு நாயகன்.**[33]

*என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.*

**இராவணன்:** *பிறர் கண் பார்ப்பதற்குமுன் செல்லும்படி விரைந்து விடுத்துள்ளதுமாகிய இராவணன் விடுத்த சூலத்தை இராமன் பார்த்தான். அந்தச் சூலம் மூன்று நெருப்புகளும் அஞ்சுமாறு திரிகின்றது. அது கண்டு தேவர்கள் ஓடுகின்றனர்; வானரர் முதலிய ஏனையோரின் கூட்டமும் ஓடுகின்றது. நிலை கெடுகின்ற எல்லா உலகத்திலும் தன் ஒளியைப் பரப்பிக் கொண்டு விரிந்து நிற்கின்றது.*

*இராமன் விடுத்த வெய்ய சரங்கள் யாவும் பயன்படாது ஒழிகின்றன. தேவர்களுடைய திண்ணிய படைகளையெல்லாம் விடாது எய்கின்றான். அவை யாவும் அச்சூலத்தை ஒன்றும் செய்யமாட்டாது சிந்தின. இராமன், அந்தச் சூலத்தின் வலிமையைக் கண்டு ஒன்றையும் அறியாதவனாய் வாளா நிற்கின்றான். அஃது இராமனது மார்புக்கு நேராகப் புகுந்த நிலையில் இராமனது மிக்க சினத்தினால் தோன்றிய பெரிய உங்காரத்தினால் பலநூறு பொடிகளாகிச் சிந்தியது.*

*தான் விட்ட சூலம் இராமன் இறந்தால் ஒழிய அவனைவிட்டுப் போகாது என்று கருதியிருந்தான்*

33. யுத்த. அங்கதன் தூது – 21

இராவணன். ஆயினும், இராமனது உங்காரத்தினால் அது பொடிப்பொடியாகிப் பிதிர்ந்து உதிர்ந்து போதலைக் கண்கூடாகக் கண்டான். 'இவன் நம்மைத் திண்ணமாக வென்றவனேயாவான்' என்று கருதி மனத்தில் அச்சத்தினால் வியர்த்தான். அப்போது வீடணனது சொல்லை நினைக்கலுற்றான்.

சிவனோ அல்லன்; நான்முகன்
அல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரம்
எல்லாம் அடுகின்றான்;
அவனோ என்னில் செய்து
முடிக்கும் தரனல்லன்;
இவனோ தான்அவ் வேத
முதற்கா ரணன் என்றான்[34]

இவ்வாறு ஒரு நிமிட நேரம் 'இவன் பரம்பொருள்தானோ' என்று நினைத்தான்.

ஒரு நிமிட நேரம் அடங்கியிருந்த ஆணவம் (மலம்) தலை தூக்கிவிட்டது; பேருருவம் எடுத்து விடுகின்றது.

யாரே னுந்தான் ஆகுக;
யான்என் தனிஆண்மை
பேரேன் இன்றே வென்றி
முடிப்பேன்; பெயர்கில்லேன்.[35]

என்று போரில் இறங்கி விடுகின்றான்.

இங்ஙனம் இராமன் பரம்பொருள் என்பதை அரக்கர்கள், தேவர்கள், இந்திரன், நித்தியசூரிகள், வானரங்கள் முதலியோர் கூற்றால் பரம்பொருள் காட்சி காட்டப் பெறுகின்றது. ஏன்? இராவணன் கூட ஒரு நிமிட நேரம் இராமன் பரம்பொருள் என்று எண்ணுகிறான்.

34. யுத்த. இராவணன் வதை – 135
35. மேற்படி – 136

**7**

# முடிப்புரை

பெரியோர்களே,

**இதுகாறும்** பேசியவற்றைச் சுருக்கமாகக் கூறி என் பேச்சை முடிப்பேன். என் உரையின் முன்னுரையாக கம்பன் வைணவனா? என்ற வினாவை எழுப்பி 'அவன் வைணவன்' என்று தக்க சான்றுகளுடன் உரைத்தேன். அவன் சைவனும் அல்லன், சமரசவாதியும் அல்லன், என்பதையும் காட்டினேன். அவன் சமயம் பொறை நிறைந்த ஒரு மானிடன் என்பதை உறுதிப்படுத்தினேன். இதே முன்னுரையில் மனிதப் பண்பாடு இன்னது என்பதை விளக்கி என் பொழிவுக்கு அடித்தளம் அமைத்தேன். காவிய நடைபற்றியும் குறிப்புகள் தந்தேன்.

முதல் பண்பாடாக 'மக்கட்பாசம்' என்பதை எடுத்துக் கொண்டு தசரதன், கோசலை, கைகேயி, சுமித்திரை, இராவணன், தானியமாலினி, மண்டோதரி என்பவர்களின் மக்கட்பாசத்தைச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டினேன். குழந்தைகளால் பெறும் இன்பத்தைப்பற்றி ஏன் கம்பன் பாடல்களைப் பாடவில்லை என்பதற்கு யான் கருதும் காரணத்தை உங்கள் முன் வைத்தேன். ஆனால் ஒருவர் இறந்தபோது ஏற்படும் துயரம்பற்றி அற்புதமான பாடல்கள் இயற்றியுள்ளதற்கும் நான் கருதும் காரணத்தையும் உங்கள் முன் வைத்து இப்பாடல்களே மக்கட்பாசத்தைப் பற்றி

சிறப்பாகப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

இரண்டாவது பண்பாடாக 'சகோதரன் வாஞ்சையை' எடுத்துக் கொண்டு மனிதர்களில் இராமன்—இலக்குவன், பரதன்—சத்துருக்கனன், இவர்களின் சகோதர வாஞ்சையை நிகழ்ச்சிகளுடன் பொருத்திக், காட்டும் சான்றுகளுடன் விளக்கினேன். வானரர்களில் வாலி—சுக்கிரீவனின் சகோதர வாஞ்சையைச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டினேன். அரக்கர்களில் இராவணன்—கும்பகருணன், இராவணன்—வீடணன், கும்பகருணன்-வீடணன், இந்திரசித்து—அட்சய குமரன், இந்திரசித்து-அதிகாயன இவர்களின் சகோதர வாஞ்சைகளைச் சான்றுகளுடன் புலப்படுத்தி விளக்கினேன். இந்த வாஞ்சைகள் யாவும் ஒருவர் இறந்தபின் மற்றவர் புலம்பும் குரல்களில்தாம் தெளிவாகின்றன என்ற சிறப்பையும் சுட்டிக் காட்டினேன்.

மூன்றாவதாக மக்கள் பண்பாடுகளாகக் காணப் பெறும் பலவற்றில் (1) அன்புடைமை, (2) கற்பு, (3) விருந்தோம்பல், (4) செய்ந்நன்றியறிதல், (5) ஈகை என்ற ஐந்தை மட்டிலும் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் கம்பன் காவியத்தில் வரும் இடங்களைச் சுட்டி விளக்கினேன். அன்புடைமைக்கு குகன், இராமனுடன் கொண்ட தொடர்புகளைச் சுட்டும் போக்கில் நிகழ்ச்சிகள் விரிவாக விளக்கப் பெற்றன. சுக்கிரீவனையும் தொட்டுக் காட்டினேன். கற்பு என்னும் பண்பு சீதாப்பிராட்டியின் வாழ்க்கையில் நேரிட்ட பல நிகழ்ச்சிகள்மூலம் விளக்கி சீதை அசோக வனத்தில் 'தவம் செய்த தவமாக' இருக்கும் நிலையை இராமன் காணமுடியவில்லையே என்று அநுமன்,

மாண நோற்று ஈண்டுஇவள்
இருந்த வாறெலாம்

காண நோற்று இலன்அவன்
கமலக் கண்களால்

என்று தான் ஏங்கிய நிலையை எடுத்துக்காட்டியும் வேறு சில நிலைமைகளை இராமனுக்குக் கூறியவற்றையும் சான்றுகளாகக் கொண்டு விளக்கினேன்.

**விருந்தோம்பல்** என்ற பண்பைக் கம்பன் காவியத்தில் சீதை, பரத்துவாசன், சவரி, சுக்கிரீவன் போன்றவர்களின் தொடர்பால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டு தெளிவாக்கினேன். **செய்ந்நன்றியறிதல்** என்ற பண்பு கும்பகருணன் வாழ்க்கையைக் கொண்டு விளக்கப் பெற்றது; **ஈகை** என்ற பண்பு மாவலியின வரலாற்றில் நேரிட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி தெளிவாக்கப் பெற்றது.

**நான்காவதாக நம்பிக்கைகள்** என்னும் தலைப்பில் (1) சாபங்கள் (2) ஊழ் (3) முடியாட்சியில் மக்கள்குரல் (4) சகுனம் பார்த்தல், உற்பாதங்கள் (5) கனவுகள் (6) சூளுரைகள்—வஞ்சினம் என்பவற்றை அக்கால நம்பிக்கைகளாக நிலவிய பண்பாடுகள் என்பதை எடுத்துக் காட்டி இவை ஒவ்வொன்றும் கம்பன் காவியத்தில் வரும் இடங்களை சுட்டிக்காட்டி விளக்கினேன். இடைப் பிறவரலாக மனம்பற்றிய ஃப்ராய்டு போன்ற உளவியலறிஞர்களின் கருத்துகள் அவற்றில் பொருத்த முறுமாறு விளக்கப்பெற்றன. இங்ஙனமாகக் கம்பன் காவியத்தில் அமைந்துள்ள பண்பாடுகள் பற்றிய குறிப்புகள் தெளிவாக விளக்கப் பெற்றன. ஒருமாபெரும் காவியத்தில் மக்கள் வாழ்வில் காணப்படும் இவையனைத்திற்கும் இடந்தருவது இலக்கியமரபாகக் கொள்ளப்பட்டது என்பதையும் எடுத்துக்காட்டினேன். பெருங் காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் தண்டியாரும் இவற்றிற்கு இடந் தந்திருப்பது ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

*இறுதியாக பரம்பொருள் பற்றிய சிந்தனை மக்களிடையே இருந்து வந்தது என்பதைப் 'பரம்பொருளின் ஏற்றம்' என்ற தலைப்பில் விளக்கும் போக்கில் இராமனே பரம்பொருள் என்பதைக் கவிஞர் கூற்றாகவும், விராதன், இந்திரன், கவந்தன், வாலி, அநுமன், அங்கதன், இந்திரசித்தன், இராவணன் என்ற பிறர் கூற்றுகளாகவும் வரும் இடங்களையெல்லாம் எடுத்துக்காட்டி என் உரையை நிறைவு செய்கின்றேன்.*

**கம்பன் புகழ் வாழ்க !**
**கன்னித் தமிழ் வாழ்க !**
**கம்பன் அடிப்பொடி நாமம் வாழ்க !**
**சென்னைக் கம்பன் கழகம் வாழ்க !**
**ஏவி.எம். குடும்பத்தின் அறம் ஓங்குக !**

□ □ □

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்


அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் : *ஸ்ரீவசன பூஷணம்* (புருடோத்தம் நாயுடு பதிப்பு)

ஆழ்வார்கள் : *நாலாயிர திவ்வியப் பிரபந்தம்* (மகாவித்துவான் கி. வேங்கட சாமி ரெட்டியார் பதிப்பு, 1987)

இராமலிங்க அடிகள் : *திருஅருட்பா* – ஆறாம் திருமுறை (ஊரன் அடிகள் பதிப்பு, 1981)

இளங்கோ அடிகள் : *சிலப்பதிகாரம்* (கழகப்பதிப்பு, 1950)

ஔவையார் : *ஆத்திசூடி* (மர்ரேராஜம் பதிப்பு)

ஔவையார் : *கொன்றைவேந்தன்* (மேற்படி)

கம்பர் : *கம்பராமாயணம்* (வை.மு.கோ. பதிப்பு)

சங்கப்புலவர்கள் : *அகநானூறு* (கழகப் பதிப்பு)

சங்கப்புலவர்கள் : *குறுந்தொகை* (உ.வே.சா. பதிப்பு)

சங்கப்புலவர்கள் : *புறநானூறு* (உ.வே.சா. பதிப்பு)

சீத்தலைச்சாத்தனார் : *மணிமேகலை* (கழகப்பதிப்பு)

திருத்தக்கதேவர் : *சீவகசிந்தாமணி* (உ.வே.சா. பதிப்பு)

திருவள்ளுவர் : *திருக்குறள்* (கழகப்பதிப்பு)

தொல்காப்பியர் : *தொல்காப்பியம், சொல்லதிகாரம்* (கழகப்பதிப்பு)

தொல்காப்பியர் : *தொல்காப்பியம், பொருளதிகாரம்* (கழகப்பதிப்பு)

தேசிகவிநாயகம் பிள்ளை : *மலரும் மாலையும்* (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி)


சுப்பிரமணிய பாரதியார் : *பாரதியார் கவிதைகள்* (எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை வெளியீடு)

சுப்புரெட்டியார், ந : *கம்பனில் மக்கள் குரல்* (வானதி பதிப்பகம்)

சுப்புரெட்டியார், ந : *கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்* (நாவலர் பதிப்பகம்)

சுப்புரெட்டியார், ந (பதிப்பு) : *முத்தொள்ளாயிர விளக்கம்* (திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி வெளியீடு)

மாணிக்கவாசகர் : *திருவாசகம்* (தருமபுர ஆதீன வெளியீடு)



## இந்நூலாசிரியரைப் பற்றி...

81 - அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளி நிறுவனர் தலைமை யாசிரியராகவும் (1941-50), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும் - பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஒய்வு பெற்றவர். 1978ல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்ரவரி - 1979 ஜூன்) தமிழ்க் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். 1989 மே முதல் 1990 அக்டோபர் முடிய தமிழ்ப் பல்கலைக் கழகம் காஞ்சி தத்துவ மையத்தில் தகைஞராகப் பணியாற்றி 1200 பக்கத்தில் 'வைணவச் செல்வம்' என்ற ஒரு பெரிய ஆய்வு நூலை உருவாக்கி வெளியிட்டவர். 1996 பிப்ரவரி முதல் சென்னைப் பல்கலைக்கழக மரபு வழி பண்பாட்டு நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றுபவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். பல எம்.ஃபில், பிஎச்.டி. மாணவர்களை உருவாக்கியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர, ஆசிரியம், உளவியல் (5), இலக்கியம் (19), சமயம், தத்துவம் (31), திறனாய்வு (18). அறிவியல் (16), ஆராய்ச்சி (6) வாழ்க்கை வரலாறு, தன்-வரலாறு (14) என்று 109 நூல்களின் ஆசிரியர். இவர் தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுகள் பெற்றுள்ளன. இவர்தம் அறிவியல் நூல்களைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் (1968), வைணவ நூல்களைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும் (1987), தமிழ்ப் பணியைப் பாராட்டி தமிழக அரசு 'திருவிக.' விருதையும் (1987), மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் (1991), இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை இவர்தம் கல்வி, இலக்கியம், அறிவியல் என்ற மூன்று துறைகளில் இவர்தம் பணியைப் பாராட்டி இராசாசர். முத்தைய வேள் விருதையும் (1994), சென்னைக் கம்பன் கழகம் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் விருதையும் (1994) வழங்கிச் சிறப்பித்தன. இனிமை எளிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்பு களாகும்.

Printed by Elangovan Printers, Madras-600014.